அச்சமே நரகம்!

மேலாண்மை பொன்னுச்சாமி

மீனாட்சி புத்தக நிலையம்

அச்சமே நரகம்

மேலாண்மை பொன்னுச்சாமி

மீனாட்சி புத்தக நிலையம்
மயூரா வளாகம், 48, தாணப்ப முதலி தெரு, மதுரை - 625 001.
தொலைபேசி : அலுவலகம் : 2345971, வீடு : 2560517
ஈ - மெயில் : meenakshiputhakam@hotmail.com

முதற் பதிப்பு : ஏப்ரல் 1994
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 2004
மீனாட்சி : 240
உரிமை பதிவு

விலை : ரூ. 35.00

ACHAMAE NARAHAM
By MAELANMAI PONNUCHAMY

Novel

First Edition : April 1994
Second Edition : December 2004
Pages : 176 Pages
Price : Rs. 35.00
Size : 18 x 12.5 cms
White Printing
Box Board Binding

விசாலாட்சி பிரிண்டிங் பிரஸ்,
சென்னை - 600 001.

MEENAKSHI PUTHAKA NILAYAM
Mayura Complex, 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.
☎ Off : 2345971, Resi : 2560517
E-mail : meenakshiputhakam@hotmail.com

முன்னுரை

இந்திய மக்களின் எல்லையற்ற உழைப்பும் வியர்வையும் மலைமலையான செல்வமாகத் திரண்டு ஒரு பக்கத்தில் குவிய...வளமையும் வறுமையுமாய் முரண்பட்டுக் கிடக்கிறது நமது பாரத தேசம். 'இந்தியா ஏழை நாடல்ல. ஏழையர்கள் பெரும்பான்மையான நாடு என்பது அதனால்தான்.

இந்த மூலமுரண்பாடே நம் தேச வாழ்க்கையின் உள்ளும் புறமும் பின்னிக் கிடக்கும் எல்லா முரண்பாடுகளுக்கும் மையக் காரணமாகி விடுகிறது.

தேசம் முழுக்க மக்கள் வறுமையிலும் அவலத்திலும், துன்பத்திலும் சிக்கித் திணறுகிறார்கள் என்ற போதிலும் கிராம மக்களின் சோகமும் துயரமும் எல்லையற்ற கொடூரம்.

அதிலும் கிராமத்துப் பெண்கள் வாழ்க்கையில் சூழ்ந்து நெரிக்கிற அவலமும், கொடுமையும் சொல்லுக்குள் அடங்காத பெரும் சோகம்

சமூகத்தின் அடிமைகளாய் ஆண்கள். அந்த ஆண்களின் அடிமைகளாகப் பெண்கள். அதிலும் கிராமத்து வாழ்வில் உடைந்து சிதறாத நிலப்பிரபுத்துவ ஒழுக்க மரபுகளும் பண்பாட்டுக் கூறுகளும் பெண்களின் அக வாழ்க்கையில் கொடிய விளைவுகளை நிகழ்த்துகின்றன.

உடைந்து சிதறாத நிலப்பிரபுத்துவ சூழலுக்குள்ளேயே விவசாயத் தொழிலில் நுழைந்த நவீனத்துவம், முதலாளித்துவ சாயலுள்ள சிந்தனைகளை ஒரு சலனம் போல நிகழ்த்துகிறது.

ஆமாம்...கிராமத்து உழைக்கும் பெண்கள் பழைய சமூக உறவுத்தளைகளில் சிக்கித் தவித்தாலும்...அங்கும் புதிய மறுமலர்ச்சிச் சிந்தனை வராமலில்லை. அதன் அடையாளம்தான் 'பூங்கிளி.' இந்தக் கிராமத்துச் சூழலிலும் மறுமலர்ச்சிச் சிந்தனையின் வாசலாக வசந்தன், ஆலைத் தொழிலாளி.

இந்த நாவலில் வருகிற முனியம்மாவும், சுப்புத் தாயும் என் மனசை வதைக்கிற கிராமத்து நிஜங்கள். பூங்கிளி குருத்தாக வெளிப்படுகிற புதிய நிஜம்.

'ஆனந்த விகடன்' வார இதழில் தொடராக வந்த இந்த நாவல், வாசகர்களின் பாராட்டுகளைக் குவித்துக் கொண்டது. அதுமட்டுமல்ல, விரிந்து பரந்த பெரிய வாசகர் வட்டத்திற்கும் என்னை அறிமுகப் படுத்தியது.

'ஆனந்த விகடன்' ஆசிரியர் அவர்களுக்கு எனது நன்றிகள். எனது நூலை தொடர்ந்து வெளியிட்டு வருகிற புகழ்மிக்க 'மீனாட்சி புத்தக நிலைய' அதிபர் திரு. செ. செல்லப்பன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

நான் வாழ்கிற கிராமங்களின் உள்ளுறைந்த சோகங் களை உங்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். இது குறித்த உங்கள் கருத்து எனக்கு ரொம்ப முக்கியம். என்னை ஆக்கவும் செதுக்கவும் பயன்படும்.

நன்றி!

மேலாண்மறைநாடு
626127
காமராசர் மாவட்டம்
25-4-94

என்றும் உங்கள்
மேலாண்மை பொன்னுச்சாமி

அச்சமே நரகம்!

1

அடுப்பங்கரைக்குள் வெந்து கொண்டிருந்தாள் பூங்கிளி.

மேஜை அடுப்பு...நின்றுகொண்டே சமையல் வேலை செய்யமுடியும். அடுப்பங்கரைக்குப் போதிய ஜன்னல் இல்லை. வியர்த்துக் கொட்டியது பூங்கிளிக்கு. மூச்சு முட்டலாக இருந்தது. விறகு அடுப்பு...கனத்த விறகின் கனிந்த கங்குகளின் அனல், வயிற்றில் காய்ந்தது. 'இதிலிருந்து எப்படாமீளலாம்' என்றிருந்தது. 'குளிர்ந்த நீரில் குளிக்கணும்' என்று மனசுகிடந்து பரபரத்தது.

ரசத்தைத் தாளித்து முடித்த இரும்புச் சட்டியில் வட்ட அப்பளத்தைப் போட்டுப் போட்டு எடுத்தாள். துவண்ட அப்பளம் காய்ந்த எண்ணெயில் விழுந்தவுடன் உயிர்பெற்று எழுவதும் விறைப்பதும் சைஸ் சைஸாய் நெளிவதும் ரசனைக்குரிய விஷயம்தான்.

இன்றைக்கு அதை ரசிக்கிற மனநிலையில்லை. பூங்கிளிக்குள் மூச்சுமுட்டுகிற தனிமை உணர்ச்சி. அப்பா

வீட்டிலில்லை...வேறு ஜீவனுமில்லை. இந்தப் பெரிய்ய வீட்டில் ஒற்றையாளாய்த் தனித்து நிற்கிறோம் என்கிற உணர்வு. வேதனை கலந்த சுதந்திர உணர்வு...கண்ட கண்டதை நினைத்துப் பார்க்கிற குரங்கு மனசு. முறையற்றுத் தாவித் தாவிக் குதித்துச் சேட்டை பண்ணுகிற மனசு.

ஒதுங்கியிருக்கிற சேலையை ஒழுங்குபடுத்த இயல்பாய் விரைகிற கையைக் கட்டுப்படுத்திக்கொள்கிற இயல்பற்ற உணர்ச்சி. .அதே நிலையில் வீட்டுக்குள் உலவுகிற விருப்பம். அந்தச் செயற்கை விருப்பத்தை அவளே கண்டித்துக்கொள்கிற சிடுசிடுப்பு...

'ச்சேய்... புத்தி ஏன் இப்படிக் கூறு கெட்டுப் போய் அலையுது...வெக்கங்கெட்ட புத்தி...'

எரிந்தடங்கிய அடுப்பில் கங்குகளின் மேல் அலைகிற கானல் அலை. கனிந்த கங்கு சிறுசிறு பொறி வெடிப்பாய்ச் சிதறுகிற அழகு...தணலை மூட முயல்கிற சாம்பல் பூக்கள்...தூசி தூசியாய்ப் பூக்கள்!

பார்வை அடுப்பில் நங்கூரமிட, லகான் இழந்த நினைவு எங்கோ எங்கோ...

தாவணி போடாமலிருந்த பாவாடை வயது. ஓடைக் கிணற்றில் பம்ப் ஷெட் ஓடும். அருவிபோல கற்றையாய் நீர் உயரத்திலிருந்து விழும். தலையைக் கொடுத்தால் சடசட சடவென்று அறையும். நுரை நுரையாய் அழுக்கும் எண்ணெயும் வழிய, தலை பஞ்சு பஞ்சாய் மாறி விடும்.

குளிக்கக் குளிக்க ஆசையாயிருக்கும். அதற்காகவே சற்றுத் தூரத்திலிருக்கும் ஓடைக்கிணற்றுக்குக் குளிக்கப் போனாள் பூங்கிளி.

சாயங்காலச் சூரியன், வெயில் நிறத்தை மாற்றிக் கொண்டிருந்தது. ஓடையில் அப்போதெல்லாம் நிறைய்ய மணல்...புதையப் புதைய, கால் பதித்து நடக்க நடக்க... மணல் நெறுநெறுக்கிற சத்தம் மனசைக் குஷிப்படுத்தும். ஓடைக் கரைகளில் மயில் நுழைய முடியாத அடர்த்தியில் வேலிமரங்கள்...உள்ளே ரகசியம் பொத்தி வைத்திருக்கிற மாதிரி, வேலி மரக்கிளைப் பின்னல்களுக்குள் கனத்த நிழலிருட்டு. பொடிப் பொடிப் பச்சை இலைகளின் மர்ம இருட்டு.

ஓடை மணலில் கால் புதைத்து நடக்கிற சந்தோஷத்தில் பூங்கிளி...பாதங்களில் அப்புகிற புழுதி வெள்ளையை ரசித்த மனநிலையில் குவிந்து கிடந்த அவளைக் கலைக்கிற மாதிரியான கிசுகிசுப்பு.

மனிதக் கிசுகிசுப்பு... ஆர்வத்தைக் கிளறுகிற பதைப்பான கிசுகிசுப்பு...ஆணும் பெண்ணுமான கிசுகிசுப்பு... பதற்றமும் மோகமும் பின்னிப் பிசைந்த ஈரக் கிசுகிசுப்பு...

''ஏய்...ஏய்...இந்தா ஒண்ணுமில்லே...''

''ஐயையோ...வேண்டாம்...பயமாயிருக்கு...''

''சும்மாதா...பயப்படாதே... இரு...இரு''

''ஆமா...அய்யா கொன்னுருவாரு. வேண்டாம்...''

''ம்ச்சூ...பேசாம இரு...பார்த்தாத்தானே?''

பூங்கிளிக்குள் திகைப்பு. மனசின் ஆழத்தில் மருட்சி. அப்படியே ஓடிவிடலாமா என்கிற பதைப்பு... பதற்றம்... சுற்றிலும் பார்த்தாள். ஆளில்லை. வேலிக்குள் அந்த வற்புறுத்தலும் கெஞ்சலும்... திகிலோடு இவளால் ஓட முடியவில்லை. உள்ளுக்குள் முரண்பட்ட நினைவுகளின் மல்லுக்கட்டு...

தாவணியை நெருங்கிக் கொண்டிருக்கிற உணர்வின் பதற்றம்... பாவாடைச் சிறுமிக்குரிய ஆர்வக் குறு குறுப்பு. மூடி வைத்துக் காட்டுகிற ரகசியத்தைத் திறந்து பார்த்து விடத் துடிக்கிற மனித இயல்பு.

எல்லாம் சேர்ந்து அலைக்கழிக்க, மனத்தின் உத்தர வில்லாமலேயே கால்கள், வேலியின் அடர்த்தியைச் சுற்றிச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் சத்தமில்லாமல் ஊர்ந்தன.

தன்னைக் காட்டிக்கொள்ளாத எச்சரிக்கையோடு முட்கிளைகளை விலக்கிக் கொண்டு பார்த்தால்—

ஆட்டுக்காரன் சின்னானின் ஆத்திரமும் அவசரமு வான அத்துமீறல்...அவனது கைப்பிடிக்குள் திமிற மன மில்லாமல் திமிறிக்கொண்டிருக்கிற முனியம்மா... மூணு வருசத்துக்கு முந்தி சடங்கானவள். அவனா இப்படி? இவளிடமா?

கன்னங்கரேலென்று கருவேலங்கட்டை மாதிரியிருக் கிற இவனிடமா இந்தச் சர்க்கரைக்கட்டி?

சேலை ஒதுங்கிக்கிடக்க, ஜாக்கெட் ஊக்குகள் ஒன் றிரண்டு கழன்று போய்...அவனது ஆக்கிரமிப்புக்குள் மறுப்பும் மயக்கமுமாய்த் தவித்துத் துவள்கிறாள் முனி யம்மா.

பூங்கிளிக்குள் பயங்கரமான அதிர்வு; கற்பனைக் கெட்டாத நிஜத்தின்மீது வந்து முட்டிக்கொண்ட உணர்வு, பார்க்கக்கூடாத நிஜத்தைப் பார்த்துவிட்ட மூச்சுத் திணறல். ஊருக்கே தெரியாத ஒரு ரகசியப் பூதாகாரம். இவள் நெஞ்சுக்குள் ஏறிக்கொண்ட அழுத் தம். அதிர்வின் தாக்குதலில் வாயெல்லாம் ஒட்டி உலர்ந்து போயிற்று. மூச்சுக்கூட வெளிவரப் பயந்தது.

ஓடிவிடத் துடித்தாள். ஓடாமலிருக்க ஆசைப்பட் டாள். உள்ளுக்குள் தவிப்பு. முனியம்மாவைக் கீழே

தள்ளி...உணர்ச்சியின் உன்மத்தமாய் ஆக்கிரமிக்கிற சின்னான்,

இவள் அரவமில்லாமல் ஓடிவந்து விட்டாள். படபடக்கிற மனசு. பதற்றத்திலும் வந்து அழுத்துகிற மனபாரத்திலும்...தரையில் கால்பாவாமல் ஓடினாள். அவளுக்குள் திக்...திக்...!

ஏதோ தப்பு செய்துவிட்ட குற்ற உணர்வு. அத்துமீறலாய்ப் பிறர் அந்தரங்கத்தை எட்டிப் பார்த்துவிட்ட மனஉறுத்தல். ஒரு கேவலத்தில் சிக்கிக் கொண்ட பகீரிடல்.

'இது வெளியே தெரிஞ்சா...ஊர் விவகாரமாய் மாறினா 'சாட்சி பூங்கிளி'தான் என்று ஊர்வாய் பேசினா...ஐயையோ...மானம் போகுமே! அப்பா அடி கொன்னுடுவாரே...!'—அவளுள் நடுக்கம். தொடை சதையெல்லாம் சில்லிட்டுப் பாய்கிற உள்பதற்றம்...

ஒரு மாசமாய் அதே பயம்தான். நல்லவேளை அந்த ரகசியம் வெளியே வரவேயில்லை. அப்படியே அமுங்கிப் போயிற்று.

இவள் மனசுக்குள் மட்டும் அந்தக் காட்சி, மாறி மாறி அலையலையாய்ப் புரண்டு மோதிச் சிதறுகிற அந்த நிகழ்வு. முனியம்மாவின் மறுப்பும் மயக்கமும்... சின்னானின் ஆவேச அவசரம்,..

அந்த இருவரையும் பேயலையாய் அடித்து இழுத்துச் செல்கிற மாய உணர்ச்சி... அதன் உக்கிரம்...

அடுத்த இரண்டு மாதத்துக்கெல்லாம் பூங்கிளி 'பூத்து' உட்கார்ந்து விட்டாள்.

அடுப்பையே வெறித்து நோக்கிய பூங்கிளியின் மனசுக்குள் இப்போது அந்த வேலிமர அடர்த்தி... வலிய வலிய அந்த நினைவுகளை வரவழைத்துக் கொள்கிறாள்...

கருவேலங்கட்டை உடம்பில் வெள்ளை பனியனும் கைலியுமாய் சின்னானின் அத்துமீறலும் வற்புறுத்தலும்...

மறுத்து மறுத்துப் பதறி மயங்கிக் குழைந்த முனியம்மா... அவளது வேர்வைப் பிசுபிசுப்பான தேன் நிறத் தேகம்... திமிறலோடு அவனுள் அடங்கிச் சிணுங்கிய அவள்...

யாருமற்ற தனிமைச் சூழலின் சுதந்திரத்தில் அதையே மீண்டும் மீண்டும் காட்சிப்படுத்துகிறாள்.

அவளுள் பரவுகிற ஒரு நடுக்கமான உணர்ச்சி. அவளைக் கிறங்கடிக்கிற பரவசப் பரவல்... நரம்புகளெல்லாம் விறைத்து, உடம்பே மதர்த்துப் போகிற உணர்வு.

இந்த உணர்வு அவளுக்குச் சுகமாயிருக்கிறது. அதிலேயே திளைக்க மனம் விரும்புகிறது. தீராத் தாகமாக வந்து அள்ளிச் செல்கிற இந்த மூர்க்கம்... அவளுக்குத் தேவைப்படுகிறது.

அதிலேயே மயங்கித் திளைத்து, மாயச் சுகத்தின் ருசியில் தகித்து, அனலின் புழுவாய்த் துடித்து இன்புற்றுத் ததும்புகிற இந்த அனுபவம்...அனுபவித்திராத அனுபவம்...அறிமுகம் செய்து கொள்ளக் கண்சிமிட்டி அழைக்கிற அனுபவம்... வந்து தழுவி அள்ளி இழுத்து விழுங்காதா என்று துடிக்க வைக்கிற அனுபவம்...

அவள் நாசியைக் குத்திக்குடைகிற நெடி. நெஞ்சுக்குள் இறங்கிச்செருமலை உண்டுபண்ணுகிற கருகல் வாசனை... மனஉலகிலிருந்து விடுபட்டு நிஜ உலகுக்கு வந்தால், அப்பளம் சட்டியில் கருகிக் கறுத்துக் கிடக்கிறது.

பதைப்பின் பரபரப்பில் கரித்துணியை எடுத்து இரும்புச்சட்டியை இறக்கி வைக்கிறாள். எல்லாவற்றையும் மூடி வைக்கிறாள். பாத்திரங்களை எடுத்து ஒழுங்கு

படுத்தினாள். தூசி துப்பட்டையைத் துடைத்துப் பெருக்கினாள்.

சமையல் வேலை முடிந்த விடுதலை உணர்ச்சியில் வெளிவந்தாள். கட்கத்திலும் கழுத்தடியிலும் வேர்வையும் அழுக்கும் நசநசக்கிறது. வீடு முழுவதையும் பெருக்கி முடித்து நிமிர்கிறபோது...

குறுக்கெலும்பு வலிக்கிறது. நாசிநுனியில் தொங்கிய நீர்த்துளியை இடதுகையால் துடைத்தாள். தலைவாசல் கதவைச் சாத்திப் பூட்டினாள். கதவில்லாத பாத்ரூமுக்குள் நுழைந்தாள். எடுத்து வைத்திருந்த பாவாடை, சேலை, ஜாக்கெட்டைக் கொடியில் போட்டு விட்டுச் சேலையைக் களைந்தாள்.

வெற்றுடம்பில் பாவாடையை உயர்த்தி மார்பளவுக்குக் கட்டிக்கொண்டு குளித்தாள். முதற்செம்பு தண்ணீரை உச்சந்தலையில் ஊற்றியவுடன், உடம்பு முழுக்க ஓடிப் பரவிய நீர்க் குளிர்ச்சி. தேகமே விழித்துக் கொண்ட மாதிரியான ஒரு திடீர்ச் சிலிர்ப்பு.

தாங்கமுடியாத அந்தப் பரவசத்தை, அடுத்த செம்புத் தண்ணீரால் விருப்பமில்லாமல் கழுவிக் கடந்தாள்.

முனியம்மாவின் கல்யாணக்கோலம் ஏனோ ஞாபகத்தில் உரசியது. அவளுக்கு மாப்பிள்ளை சின்னானில்லை... கோவில்பட்டிப் பக்கத்தில் ஒரு கிராமம்...அங்குதான் மாப்பிள்ளை.

ஐப்பசி மாதம் அது. விடாமல் அடை மழை... பெண் அழைப்புக்கு டக்கர் வந்திருந்தது. ட்ரெயிலரில் வைக்கோல் பரப்பியிருந்தனர். ட்ரெயிலரின் நாலு மூலையிலும் நாலு கம்புகளை ஊன்றி, குறுக்குவசத்தில் அகத்திக் கம்புகளைப் போட்டு, மேலே தென்னங்கிடுகுகளையும் ஜமுக்காளத்தையும் பரத்தி விரித்திருந்தனர்.

டக்கரை வேன் மாதிரியாக்கியிருந்தார்கள்.நிழல்தான் தரும்...அடைமழைக்குத் தாங்காது

மழையைப் பொருட்படுத்தாமல் சுவர் மறைப்பில், கூரை நிழலில் பெண்கள் நின்றனர். பூங்கிளி வீட்டின் வடக்குப் புற ஜன்னலைத் திறந்தால் போதும்... வீட்டிலிருந்தே பார்க்கலாம்... வேப்ப மரத்தை ஒட்டி நிற்கிற டக்கர்...மேற்கில் வண்டிப் பாதை. பாதைக்கும் மேற்கில் முனியம்மாவின் வீடு. கல்யாணப் பந்தல்... வாழைமரம்... இரவில் ஒளிச்சரமாய் மிளிர்கிற சீரியல் செட்டின் பின்னல். அதற்குமேல் உயரத்தில் கட்டப்பட்டிருந்த மைக் செட்டின் குழாய்கள். அதன் உள்வளைவில் மஞ்சள் நிறமாய் 'ராஜூ சவுண்ட் சர்வீஸ், செவல்பட்டி' எழுத்துக்கள்.

எல்லாமே இங்கிருந்து தெரிகிறது பூங்கிளிக்கு. ஜன்னல் சுவரில் நெஞ்சைப் போட்டுக் கொண்டு முழங்கைகளை ஊன்றி, ஏந்துகிற உள்ளங்கைக்குள் முகத்தை வைத்துக் கொண்டு சிறுமிபோல் குதூகலமாய் வேடிக்கை பார்த்தாள். பார்வைக்கு நடுவே கண்ணாடித்திரையாக சரிவாய்ப் பாயும் சாரல் தூவல்.

மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் மறுகிமறுகி நின்றனர். கேலியும் கிண்டலுமாய் பேசிப் பேசிச் சிரித்தனர். கூதல் வாடைக்கு கூட இரண்டு பீடிகளைப் பற்ற வைத்துக் கொண்டனர்

''பொண்ணு புழுங்கரிசியை ஊறவெச்சு ஊறவெச்சுத் துன்னுருப்பாளோ...?''

''அப்படித்தான் இருக்கும். அதான் அடைமழை விடாமப் பேயுது...''

''போப்பா... நீயொண்ணு... அப்பிசை மாசம் அடைமழை பேயத்தானே செய்யும்? நீங்க அப்படிப்பட்ட மாசம்

பாத்து முகூர்த்தம் வெச்சிருக்கிற லட்சணத்துலே பொண்ணைக் கொறை சொல்லணுமாக்கும்...?''

''சரியப்பா... அப்பிகை மாசமாயிருந்தாலும் அடை மழை ஒரு மணி நேரமாச்சும் வெறிக்க வேண்டாமா என்ன... இப்படியா விடாம ஊத்தறது? பொண்ணு அரிசி திங்காம... மழை இப்புடி ஊத்தாது.''

இதே மாதிரி பெண்களும் அர்த்தம் இருந்தும் இல்லாமலும் என்னத்தையோ பேசிச் சிரித்து நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தனர்.

மழை நிற்கிற மாதிரி தெரியவில்லை. அழுக்கு மேகம் அடர்த்தியாய்ப் பரவி நின்று, ஆகாயத்தை மறைத்திருந் தது பொழுதுக்கால் தெரியவில்லை. மழை சிணுசிணு வென்று சிணுங்கிக் கொண்டே இருந்தது.

தெருவில் தண்ணீர் ஒரே சீராய்ப் பெருகி ஓடிக் கொண்டிருந்தது. தெருத் தண்ணீரில் மழைத்துளிகள் விழுந்து குமிழ் குமிழாய் வெடித்து மறைந்தன. தவிட்டு நிற வெளிச்சம் மிச்சமிருந்தது.

வேப்பமரத்தின் அடியில் கனத்த துளிகள் சொட்டடித் தன. மரம் ஆசை தீரக் குளித்த மனநிறைவில் ததும்பி நின்றது. ஈரச் சிறகை ஓர் உலுப்பு உலுப்பி உதறிக் கொண்டு மைனாக்கள் பறக்க, மரம் சலனமுற்ற எரிச்சலில் முணுமுணுத்துக் கொண்டது.

நிறுத்தி வைத்திருந்த கல்யாண வீட்டு மைக்செட் 'ட்ர்ர்ர்' என்ற இரைச்சலோடு உயிர்பெற்று அலறியது...!

''புருஷன் வீட்டில் வாழப்போற பொண்ணே
தங்கச்சிக் கண்ணே... நா
புத்திமதிகள் சொல்லுறேன் கேளு முன்னே...''

என்ற பாட்டு அடைமழையின் ஊசிப் பாய்ச்சல்களை ஊடுருவிக் கொண்டு ஈரக்காற்றை இனிப்பாக, ஊரே சுதாரித்தது.

அவரவர் வீடுகளுக்குள் கடுங்காபியைக் குடித்து முடங்கிக் கிடந்த பெண்கள், ஒரு சுதாரிப்போடு வெளியே தலை, யைக் காட்டினர். அவர்கள் கண்களில் ஆர்வப் பரபரப்பு... அடைமழையைப் பொருட்படுத்த மறுக்கிற ஆர்வம்

மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட இருக்கும் புதுப்பெண்ணைப் பார்க்கிற ஆவல். சராசரிக் கிராமத்துப் பெண்ணாக காட்டிலும் தெருவிலும் திரிந்தவள். திருமணக் கோலத்தில் எப்படி இருக்கிறாள் என்கிற வித்தியாசத்தைக் கண்ணுக்குள் வாங்குகிற ஆசை.

அடிக்கடி காண லபிக்கிற வித்தியாசமா? இல்லை, ஆயுளில் ஒரே தடவை மட்டுமே ஒரு பெண்ணுக்கு லபிக்கிற வித்தியாசம். அத்தனை அரியதைக் காண்பதில் கிராமத்துப் பெண்களுக்கு இயல்பாகவே பேராவல்.

அதைக் காணுகிற கணத்தில் தத்தம் மணக்கோலம் மனசுக்குள் முகம் காட்டி, உள்நெகிழ்வை உருவாக்கும். அப்படியொரு கனவு மயமான மகிழ்ச்சி அது.

சிறுவர் சிறுமிகளெல்லாம் குதூகலக் கூச்சலோடு முன் கூட்டியே டக்கரில் ஏறிக் கொண்டனர். முனியம்மாவைச் சில பெண்கள் சாரலில் அழைத்து வந்தனர் டக்கருக்கு.

வெளிர் நீலத்தில் தங்கப்பூ மின்னும் பட்டுச்சேலை. அதே கலரில் ஜாக்கெட், கழுத்து நிறைய மாலை. ஒழுங்காய் வாரி முடிந்த கூந்தலில் கனயாய் மல்லிகைப்பூ. சடைப்பின்னலோடு சேர்ந்து தொங்கும் பூச்சடையாரம். உச்சந்தலையில் திருநீற்றுச் சிதறல். நெற்றியிலும் திருநீற்றின் வெண்புள்ளிகள்...அதையும் தாண்டி ஒளிர்கிற அரக்கு நிறப் பொட்டு...மூக்கில் மின்னிக் கண்ணை உறுத்துகிற மூக்குத்தி...காதில் கல்பதித்த கம்மல்!

முனியம்மாதானா இது? வானிலிருந்து இன்று புதிதாய் இறங்கிய தேவதையா? இவளுக்குள் இத்தனை அழகு எங்கே புதைந்து கிடந்தது? அடேயம்மா...!

காய்ந்த செம்பட்டைத் தலையும் அழுக்குச் சேலையுமாய் 'தக்...தக்'கென்று தெருவில் திரிந்து கொண்டிருந்த அந்த முனியம்மாதானா இது?

ஆச்சரியத்தில் மூழ்கிக் கிடந்த பூங்கிளியின் கண்ணில், முனியம்மாவின் முகம்...அந்தத் தேன்நிற முகத்தில் மணக்கோல மகிழ்ச்சியில்லை. வாட்டம்...அறுபட்ட கொடியின் வாட்டம்...மணப்பெண்ணின் நாணத்துக்குள் அடங்காமல் வெளிப்படுகிற துல்லியமான வாட்டம். கண்களிலும் அந்த கனத்த சோகம்...இமைகளை நனைத்த ஈரச்சுமை. தோல்வியும் சோகமும் அவளை உள்பாரமாய் அழுத்துகிறதா?

...வேலிமர அடர்த்திக்குள் சின்னான் தழுவலில் திமிறலோடு மயங்கிக் கிடந்த அந்த முனியம்மா...தேனில் சிக்கிச் சிறகடித்த ஈயாக...

...பெண்மையே ஈதானா? தனது உண்மையை, கனவை, காதலைக் காப்பாற்றிக் கொள்ள முடியாத பலவீனம்தானா? திணிக்கப்பட்ட பொய் வாழ்க்கையில் முரண்பட்டு முரண்பட்டு ஒடுக்கப்பட்டு, சுயத்தை பறிகொடுக்க வேண்டியதுதானா? பொய் வாழ்க்கையில் உழன்று உழன்று திரியாகி, நிறம் மாறி, பொய்யாகவே மாறிவிட வேண்டியதுதானா பெண்மை? 'பெண் என்பவள் ஆழம் காண முடியாத மாயமோகினி' என்ற அபவாதத்தையும் அநியாயமாகச் சுமக்க வேண்டுமா? அடக் கொடுமையே!...

2

வண்டிப்பாதையைக் குறுக்காகக் கடந்து டக்கரை நோக்கி நகர்த்தப்படுகிற முனியம்மாவைப் பார்த்து பூங்கிளிக்குள் அனுதாபமாயிருந்தது. மஞ்சள் தண்ணீர் ஊற்றிப் பூச்சூட்டப்பட்டு வெட்டுப்படப் போகும் பலியா டாய் தோன்றினாள்.

'மனசுக்குப் பிடித்த சின்னானிடம்தான் வாழ்வேன்' என்று ஏன் இவள் சண்டைபோடவில்லை? சண்டையில் மனஉறுதியோடு நிற்கவில்லை? பெண்ணால் முடியாதா? 'கொழுப்பெடுத்த சிறுக்கி', 'ராங்கிக்காரி' என்று இழிவு படுத்தப்படுவாளா? பெண்ணின் போர்க்குணம் கூடக் கொச்சைப்படுத்தப்படத்தான்செய்யுமா? பாவம்...

நாலு நாளைக்கு முன்பு—

தெருவிலிருக்கும் அடிபம்புக்குத் தண்ணீர் எடுக்கக் குடத்துடன் போனாள். அங்கே ஒருபாவாடைச் சிறுமி 'டடக்...டடக்...' என்று அடித்துக்கொண்டிருந்தாள். இன்னும் இரண்டு பெண்கள் குடங்களைக் கீழே வைத்து விட்டு ரொம்ப நெருக்கமாய் நின்று ஏதோ ஊர்க்கதை யைக் சிசுகிசுத்துக் கொண்டிருந்தனர். நாடியில் விரலை வைத்து வியப்பும் திகைப்புமாய் பேசிக்கொண்டிருந் தனர்.

''முனியம்மாவுக்குக் கல்யாணத்துலே இஷ்டமேயில்லே போலிருக்கு. வீட்டிலே ஒரே சண்டையும் சத்தமுமா கெடக்கு...''.

''என்ன கேடு வந்துச்சு இந்தக் கழுதைக்கு? சடங்காகி ஏழு வருசமாகப் போகுது. இன்னுமா இஷ்டமில்லே?''

''கல்யாண ஆசையெல்லாம் இருக்கு...புருசன் கூடப் படுத்துப் புள்ளை பெறணும்னு துடிக்கத்தான் செய்றா?''

''பெறகென்னத்துக்கு அழுது திமிறுறாளாம் கழுதை?''

''மாப்பிள்ளை புடிக்கலியாம்...''

''ஐயநேரிக்காரன் லட்சணமான பயலாத்தானே இருக்கான்? வெள்ளையும் சொள்ளையுமாய் 'தாம்... தூம்'னுதானே திரியுதான்?''

''மனசுலே வேற மாப்புள்ளே இருந்தா?''

''அடியாத்தே...இதென்ன கொடுமை? வேற எதுனாச்சும் முள்ளு குத்தியிருச்சா?''

''ம்...முள்ளு குத்தி அண்டக்கட்டி, உள்ளே வரைக்கும் வீங்கியிருச்சு போலிருக்கு...''

''அது யாரு அந்த முள்ளு?''

''சின்னான் பய...''

''யாரு...? செம்மறியாடு மேய்ச்சுக்கிட்டுக் கன்னங் கரேல்னு அலையுதானே...அந்தப் பயலா? ஐயய்யோ...''

''நீ மூஞ்சியைச் சுளிக்கே...அவளுக்கு 'மனங்கொண்டது மாளிகையா தெரியும்'லே?''

''அப்படி ஒரு கூத்தா? அதான் அழுகையும் புலம்பலுமா அலையுதாளாக்கும்?''

''ஆமா...எண்ணெயும் தேயாம, ஒண்ணும் தேயாத குறைக்கோலமா திரியுதா. அரளிக்கொட்டையைக்கூட அரைச்சு ஒரு நா குடிக்க ஆரம்பிச்சிட்டா போலிருக்கு...?''

''ம்...? அப்...ப்புடியா! பெறகு?''

''அவுக ஆத்தாக்காரி பாத்துட்டா...அதைப் புடுங்கி ஆத்தாக்காரி குடிக்கப் போயிருக்கா...அப்புறம்தான் வீடு பூரா அழுகையும் கண்ணீருமா பொருமிப் போய்க் கெடக்கு...''

"ம்...?"

"'மானம் மரியாதையைக் காப்பாத்தி கல்யாணத் துக்குச் சம்மதிச்சு இருக்கலேன்னா...நா உசுர் வெச்சு இருக்க மாட்டேன்'னு அவுக ஆத்தாக்காரி பத்ரகாளியா ஆடியிருக்கா. அதுக்குப் பெறகுதா கொமரி கொஞ்சம் அடங்கி இருக்காளாம்..."

"இதென்னடியாத்தா... உள்ளுக்குள்ளே இம்புட்டு சுறும் பேனுமா?"

"ஆமாமா...வெளியே பாக்கத்தான் மணக்க மணக்க தாழம்பூக்கொண்டை..."

மெது நடையாய் நடந்து வந்த பூங்கிளிக்குள் பேச்சு ஒன்றுக்குப் பாதியாய்ச் சிதைந்து கேட்டது. ஆயினும், விஷயம் முழுக்க இவளுக்கு விளங்கியது

வேலிமர அடர்த்திக்குள் நடந்த கதை இவள் பார்த் ததுதானே?

இவள் கிட்டத்தில் வரவும் பேச்சின் தொனியோ, ஸ்தாயியோ மாறவில்லை. பேச்சு மட்டும் மாறிவிட்டது.

"நடுவைக்குப் போயிருந்தியே...எத்தனை ஆள் வேலை நடந்துச்சு?"

"அதை ஏன் கேக்கே...? அஞ்சாள் நடுற நடுவை... ஒம்பதாள் ஆகிப் போச்சு..."

"அடியாத்தே..."

பூங்கிளி அதுகளின் மாய்மாலச் சாமர்த்தியத்தை எண்ணி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்...

நிஜந்தான்...முனியம்மா வீட்டில் சண்டை போட்டி ருக்கிறாள். காதலுக்கு உண்மையாக வாழ்வதற்கு மல்லுக் கட்டியிருக்கிறாள். மரணவிளிம்பு வரை வைராக்கியம் காட்டியிருக்கிறாள்...ஆயினும்—

பாசத்தால் முறியடிக்கப்பட்டிருக்கிறாள். தாய் மீதுள்ள பேரன்பு. அவளைக் காலைவாரித் தோல்வியடையச் செய்திருக்கிறது. அட கிரகச்சாரமே பெண்ணை வீழ்த்துவதில் ... ஒடுக்குவதில் ... பாசம்கூட பூவிலங்காய் நிற்கிறதே...

டக்கர் சாரல் மழைக்கிடையே உயிர் பெற்று உயரத்தில் புகை கக்கி...பலத்த ராட்சத இரைச்சலோடு புறப்பட, அந்த இரைச்சலில் முனியம்மாவின் மனவிசும்பல் அமுங்கியே போய் விட்டது.

முன்பெல்லாம்—

சின்னான் ஆட்டுக்கம்பைச் சாய்வாக ஊன்றி, அதன் மேல் வலதுகட்கத்தைப் போட்டு, விறைத்த இடது காலில் மடங்கிய வலதுகால் பின்ன...உடம்பின் பாரம் பூராவும் கம்பில் கிடக்க...வாய்க்கு வந்த பாட்டைச் சத்தம் போட்டுப் பாடிக்கொண்டே இருப்பான்...கூச்சமில்லாமல் பாடுவான். பாட்டுச் சத்தம் கேட்டால், சின்னான் ஆடுகள் மேய்கின்றன என்று அர்த்தம்.

இப்போதெல்லாம்—

அவன் பாடுவதேயில்லை. ஊமைக் குயிலாய் உறைந்து போய்விட்டான். அவனைப் பார்க்கிறபோதெல்லாம் பூங்கிளிக்குப் பாவமாயிருக்கும்.

குளித்து முடித்துத் துணியை மாற்றிவிட்டுத் தலைவாசல் கதவைத் திறந்தாள். ஈரக்கூந்தலை வெள்ளைத் துண்டால் சுற்றிக் கட்டியிருந்தாள் பூங்கிளி. முகத்தை அழுந்தத் துடைத்துவிட்டுச் சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியில் பார்த்துப் பொட்டு வைத்துக் கொண்டாள்.

மனதுக்குச் சந்தோஷமாயிருந்தது குளித்த குளிப்பு. உடம்பே புடைத்தெடுத்த மாதிரி லேசாகியிருந்தது.

மனசையே இறுக்கி நெரித்து எரிச்சல் படுத்திய வேர்வை நசநசப்பைக் கழுவிக் கரைத்த நிம்மதி...ஆசுவாசம்...

கண்ணாடியில் தெளிவாகக் கூர்ந்து பார்த்தாள். பொட்டின் பிசிறுகளைச் சுண்டுவிரலால் துடைத்து சைஸ் பண்ணியபோது...

வாசலில் வேற்றுக் காலடிச்சத்தம்!

''சார்...சார்...இருக்காகளா?''

அவளுக்குத் திக்கென்றது. சொந்த வீட்டுத் தனிமைச் சுதந்திரத்தில் ததும்பித் தவித்த பூங்கிளி, சட்டென்று சுபாவத்துக்கு வந்து சேர்ந்தாள்.

பயத்தில் மனம் படபடக்க. 'என்ன' என்று கேட்கக் கூட வாய் எழாமல் வாசலைப் பார்த்தாள். கூச்சமும் தயக்கமும் உணர்வைப் பிணைக்க, நாக்கு அந்தக் கணத்தில் உலர்ந்து பிசினாக ஒட்டிக் கொண்டது.

வாசலில்—

அந்நிய வாலிபன். சைக்கிளை நிறுத்திவிட்டுப் பணி வடக்கமாய்ப் படியில் நின்றான். செவிக்கும் உயரமாய் வெட்டப்பட்ட பட்டாளத்து முடிவெட்டு. பாலீஷான கறுப்பு. கொத்து மீசை. சிகரெட் வைக்கப்படாமல் சிவந்து கனிந்த உதடுகள். பேண்ட் ஷர்ட்.

ஆர்வமாய்ப் பார்த்த அவன் கண்களில் இவளைப் பார்த்துவிட்ட மாற்றம்...ஒரு மின்னல் பளிச்சிடலைத் தொடர்ந்து லஜ்ஜையும் தயக்கமுமாய்க் குழையும் பார்வை.

சும்மாவே பயந்த சுபாவம் கொண்ட பூங்கிளி, நாலு பேர் கூடுகிற இடத்தில் தலைகாட்ட அஞ்சுகிறவள். அந்நிய வாலிபனின் கண்ணில் மின்னலை உள்ளுணர்வு தொட்டுணர்ந்துவிட...ரொம்பக் குழம்பிக் கலைந்தாள்.

அவளது மருட்சியையும் தவிப்பையும் உணர்ந்து கொண்டான். என்ன என்று சொல்லி வாயைத் திறந்தவள், சொல்ல முடியாமல் குழம்புவதையும் உணர்ந்து கொண்டான்.

"சார் இல்லியா?"

'இல்லே' என்பதுபோல் குழப்புமாய் தலையசைத்தாள்...

"எங்கே...வெளியே போயிருக்காகளா. வெளியூர் போயிருக்காகளா...?"

என்னத்தையோ கையாட்டினாள். தொண்டைக்குள் சத்தம் வராமல் படுகிறபாடு. நெஞ்சுக்குள் திக்திக்கென்று அடித்துக்கொள்கிற பயம். இப்படிக் குழம்பிப்போய்ப் பயத்தில் அசட்டுத்தனமாய் வழிகிறோமே என்கிற சுய உணர்வில் லஜ்ஜை.

அவன் உதட்டில் அதே உணர்வில் வருகிற மெல்லிய புன்னகை. அந்தப் புன்னகையில் ஒளிந்து நின்று முகம் காட்டுகிற பரிகாசம்.

அந்த பரிகாசத்தை உணர்ந்த கணத்தில், அவளுக்குள் உயிரே போகிற மாதிரியான அவஸ்தை. உயிர் போய் விடக்கூடாதா என்கிற உளைச்சல்...

"சரி...நா போயிட்டு வாரேன். பக்கத்தூரு, அப்பைய நாயக்கன்பட்டி! சாரோட பழைய ஸ்டூடண்ட். பேரு கிருஷ்ணமூர்த்தி. பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன். சார் வந்தா...நா வந்துட்டுப் போனதைச் சொல்லிருங்க."

அவன் உதடுகளும் முகமும் சலனமுற்று அசைவதையே பார்த்தாள். பேச்சுக்கேற்ப வலதுகையும் விரல்களும் இயங்குவதைப் பார்த்தாள். காலில் மாட்டிருந்த செருப்புகள். ஷர்ட் பட்டனின் டபுள் கலர், சட்டைப்

பையில் சேர்த்துத் தைத்திருந்த டெய்லர் அட்ரஸின் கலர் வினோதம். நெற்றியின் வலது மேல்புறத்தின் காயத் தழும்பு—எல்லாம். பார்த்தாள்.

அவன் சொன்ன விஷயம் மட்டும் மனசில் ஆகவில்லை. தலையைத் தலையை ஆட்டினாள். அவன் சைக்கிளின் ஸ்டாண்ட் கிளிப்பைத் தட்டி விட்டு சைக்கிளை உருட்டியவுடன் ஆவலாய் வெளியே எட்டிப்பார்த்தாள்.

கூப்பிட நினைத்தாள் 'என்ன சொன்னீக?' என்று திரும்பக் கேட்க விரும்பினாள். வாய்வரவில்லை. வழக்கமான பயந்த சுபாவம். அவளைப் பின்னல் போட்டு இழுத்துப் பிடிக்க, வாயை மென்றாள். அவன் திரும்பிப் பார்க்கவேயில்லை.

பூங்கிளிக்குள் தற்காலிகமான விடுதலை உணர்வு... தர்மசங்கடத்திலிருந்து தப்பித்துவிட்ட நிம்மதி...சட்டென்று மனசுக்குள் வந்த வெட்க உணர்வு. பயந்து அசடு வழிந்த கேவலம். கால்கையெல்லாம் நடுங்கிக் கொண்டு வந்ததை நினைக்க நினைக்க இப்போது எரிச்சலாக வந்தது.

அடிவயிற்றுக்குள் வந்த பிசைவு. தொடை எலும்பே உருவிக்கொண்ட மாதிரி கால்களில் வந்த தளர்ச்சி, தள்ளாட்டம். மனசுக்குள் வந்த படபடப்பு. மூச்சுத் திணறல். உளறக்கூட முடியாமல் ஒட்டிப்போன நாக்கு.

"ச்சே! எனக்கு ஏன் அப்படியாகிப் போகிறது? எதற்கு இந்தப் பயம்? இவனிடம் மட்டுமல்ல, உள்ளூர் ஆட்களிடம் கூடக் கலகலவென்று பேச முடியவில்லையே... ஒரு நடுக்கம் வருகிறதே...எதனால் இப்படி?''

அவளுக்கே அவள் சுபாவம் எரிச்சலாக இருந்தது. இப்படிப் பயந்து பயந்து சாவது பெருங்கொடுமை. மனசே இறுகி இறுகி உறைந்து போய்விடுமோ... எதையும் நினைக்க-செய்ய-முடியாமல் போய்விடுமோ...

சுதந்திரம் என்றால் என்னவென்று உணர முடியாமல் போகுமோ...இப்படிப் பயந்து சாவது, செயல்பட வேண்டிய தருணத்தில் செயல்பட விடாமல் கட்டுப்படுத்தி விடுமோ...ஊமையாக்கிவிடுமோ...

இந்தச் சுபாவமே தனக்கு எதிராகி விடுமோ என்கிற எண்ணம், உள்நடுக்கமாயிற்று.

அப்பா வந்தால் என்ன சொல்ல? யார் வந்தது என்று கேட்டால், எப்படிச் சொல்வது? குழம்பித் திகைத்தால், அதற்கும் அப்பா திட்டுவாரே...

சொல்லாமல் விட்டுவிடலாமா? இப்படி ஒருத்தர் வந்ததையே மறைத்து விடலாமா...? அது நியாயமா? எப்படியாவது இந்த ஆள் அப்பாவைச் சந்திப்பான். அப்போது வந்து போனது தெரியத்தான் போகிறது.

அப்புறமும் அப்பா வந்து திட்டத்தான் போகிறார் "ஏன் மறைத்தாய்'' என்று உருட்டி முழிப்பார்...

அவளுக்கு எப்படியோ வந்தது. சங்கடமும் சஞ்சலமுமாய் ஒருவகையான உளைச்சல். ஃபேனைப் போட்டுவிட்டு சேரில் உட்கார்ந்தாள்.

'என்ன சொன்னான்?என்னவோ பேர் சொன்னானே... ராமகிருஷ்ணனா? வெங்கடகிருஷ்ணனா? கிருஷ்ணசாமியா? சிவராம மூர்த்தியா? என்ன இழவுன்னு ஞாபகத்துக்கு வரமாட்டேங்குதே...ச்சே!'

ஃபேனின் இறக்கைகள் மெதுவாகச் சுற்ற, எண்ணெய் போடாத சக்கரம் போல ஓர் இரைச்சல் கேட்க, அதிலும் கவனம் பதிக்க முடியாமல் ஊசலாடினாள் பூங்கிளி.

அவளுக்கே அவள்மேல் வெறுப்பாக வந்தது. 'சே... இப்படியும் ஒரு மனுசியா...' என்று முணங்கிக் கொண்டாள்.

'ஒவ்வொரு மகராசி என்னமாய் வாயாடித்தனமாய் இருக்கா? எம்புட்டுப் பெரிய சபையிலேயும் ஆம்பளை களை வாயெடுக்கவிடாம பேசிக் காரியத்தைச் சாதிக்கிற பொம்பளைகளும் இதே ஊர்ல இருக்கத்தான் செய்றாக. தெருக்குழாயில் தண்ணீர் பிடிக்க வர்ற பொம்பளைக. சந்தைக்கடைக் கூச்சலா சண்டை போடுறாங்க.

ஏன் எனக்கு மட்டும் இப்படியாச்சு? பயமே எனது சுபாவமா மாறிப்போச்சு?

அம்மா இருந்து வளர்க்காததன் காரணமா? அம்மா என்றால் அன்பு காட்டுவாள். கொஞ்சுவாள். அடம் பிடிக்க இடம் தருவாள். வாதாடச் சுதந்திரம் தருவாள். வயசுப் பிள்ளையின் அருமை தெரிந்து தாழ்ந்த குரலில் பேசுவாள். அதட்டிப் பேச வழி விடு வாள்...

அம்மா...அம்மா...அம்மா...

பூங்கிளிக்கு ஒன்பது வயசிருக்கும். அப்போது அம்மா செத்துக்கிடந்தது ஞாபகத்துக்கு வருகிறது. குறிச்சி நாற் காலியில் சாத்தி வைக்கப்பட்டு, நெத்தியில் நாலணா துட்டைப் பதித்து, கால் பெருவிரல்களை இணைத்துக் கட்டி, நாற்காலியோடு முறுக்கிய சேலையால் சுற்றிக் கட்டப்பட்ட அம்மா...

அம்மா எப்படிச் செத்தாள்? எதனால் மரணம் நிகழ்ந்தது? சாவதற்கு முதல் நாள்கூட ஆரோக்கியமாக அலைந்தாளே...

சுவரில் அப்பாவின் போட்டோ...பூங்கிளி ஏனோ குமைந்து குமைந்து அழுதாள்.

3

சாயங்கால நேரம்... டீக்கடையில் ஒரே 'கப்சிப்'... கனத்த அமைதி. நிறைய இளவட்டங்கள், பெரிசுகள், நடுத்தரங்கள் டீயைக் குடித்து விட்டு 'கம், கம்'மென்று இருந்தனர்.

அந்த அமைதியைக் கனமாக்கிய குடிகாரனின் கூச்சல் உச்சத்தில் நின்றது. மூக்குமுட்டக் குடித்திருந்தான்! நிற்கக்கூட தன் மதியில்லாமல் துவண்டு துவண்டு ஆடிக் கொண்டிருந்தான்.

அவன் மடியில் முப்பது ரூபாய் வைத்திருந்தானாம், அதைக் காணவில்லையாம். எடுத்தவன் கொடுத்துவிடணு மாம். இல்லையென்றால் கொலை விழுமாம். நாறவச மாக வைகிறான்.

இத்தனைக்கும் இவன் வெளியூர்க்காரன். கறுப்பு டவுசர். அதன்மேல் உருவிக் கொண்டோடுகிற பச்சைக் கைலி. தலையில் வட்டக் கட்டாகத் துண்டு.

அந்த வட்டாரமே அதிர்கிற மாதிரி கூப்பாடு போடு கிறான் பச்சைக்கைலி.

"டேய்ய்...எவண்டா...எம்மடியிலே நோட்டை எடுத் தது? எந்தப் பயடா...? எம்புட்டுத் திமிருடா? ராஸ்கோல்...இப்ப ரூவா வந்து சேரணும். இல்லேன்னா நடக்குறதே வேற...என்னடா நெனைச்சிட்டீக என்னே? இளிச்சவாய்ப்பயன்னா? கொன்னுடுவேண்டா...தலை யைக் கிள்ளி எடுத்துட்டுப் போயிருவேண்டா...

ஊராடா இது? இது ஒரு ஊரா? த்தூ! மானங்கெட்ட பயக ஊருடா இது. களவாணிப்பயக. முடிச்சுமாறிப் பயக ஊருடா இது. நாறப்பயக. குடுத்துருங்கடா... இல்லே, கொலைவுழும்...கொலை..."

டீக்கடையிலிருப்பவர்களுக்கும் ஒன்றும் ஓடவில்லை. ரோஷமும் கோபமும் பொத்துக் கொண்டு வருகிறது. ஆயினும் கைகட்டிய இறுக்கம்.

குடிகாரப்பயல். வெளியூர்க்காரன்...அடிக்கிற அடி இசகுபிசகாகி, மண்டையைப் போட்டு விட்டால்... இரண்டு ஊருக்குமான பகையாகி விடுமே...கொலை கேஸ் ஆகிவிடுமே...

இப்படிப் பலதையும் நினைத்து மறுகித் திகைக்கின்றனர். துடிக்கிற உணர்வுகளை உள் இறுக்கி மௌனம் காக்கின்றனர்.

வெடிகுண்டு மௌனம்.

அவன் இன்னும் கத்துகிறான். ஆடிமாதக் காத்துக்கு ஆடுகிற வேப்பங்கன்றாக...அவன் நின்ற நிலையிலேயே அசைகிறான். தெளிகிறான். முகத்தைக் கோணுகிறான். காறிக் காறித் துப்புகிறான்.

அதே வசவுகள். கெட்ட கெட்ட வார்த்தைகள். மான ரோஷத்தைக் கிண்டிக் கிளறுகிற துஷ்டப் பேச்சுக்கள். காது கொடுத்துக் கேட்க முடியாத. மானத்தைக் கடித்துக் குதறுகிற வார்த்தைகள்...

சுற்றியிருக்கிற வீடுகளிலுள்ள பெண்கள் தலைகாட்டப் பயந்துகொண்டு உள்புதைந்து சபிக்கின்றனர்.

அப்போதுதான்—

வாத்தியார் ரத்தினவேலு வந்தார். ரிடையர்டு வாத்தியார். நல்ல வலுத்த திரேகம். முதுமையை முறியடித்த தேகக்கட்டு, விறைத்த ஆள். அத்தனை மூட்டுப் பெருத்த ஆளுமில்லை. ஆனால், வைரம் பாய்ந்த உடம்பு...

தூரத்தில் வரும்போதே அவன் பேசிய பேச்சுக்களையும் சூழலையும் கவனித்து வந்திருந்தார். கிட்டத்தில்

வந்தவுடன் அவனிடம் நெருக்கமாய் நின்றார். அவர் முகத்தில் சிறுமை கண்டு சீறுகிற சினம். கோபத்தில் இறுகிப் போன முகம். தெறிக்கிற கண்கள்.

"யார்டா...நீ எந்த ஊருடா?"

அதட்டலாய்க் கேட்டார். அவன் ஒரு கணம் வெல வெலத்தவன். சுதாரித்துக் கொண்டான்.

"எந்த ஊராயிருந்தா ஒமக்கென்னய்யா? முப்பது ரூவா, சும்மாவா? முப்பது ரூவா. முழுசா மூணு பத்து ரூவா நீரு தருவீரா?"

"குடிகார நாயே, எங்கே தொலைச்சுட்டு இங்கே வந்து பேசுறே ராஸ்கல்? இந்த ஊருக்காரன் எல்லாம் இளிச்சவாயன்னு நெனைச்சியா?"

"முப்பது ரூவா எடுத்தவன் யாருன்னு தெரிய ணும்லே? நீரு எடுத்தீரா?"

ரத்தினவேலுவுக்குக் கோபம் கோபமாய் வந்தது. உள்ளுக்குள் பொங்கித் திமிறிய வெறி. அடிஉதட்டைக் கடித்தார்.

"இப்ப மரியாதையா போறியா...இல்லை, 'பூஜை' வாங்கிக்கிட்டுப் போறியா?"

"அடிச்சிருவீரா? என்னை அடிக்க ஒம்மாலே முடியுமா? சுண்டு விரலைக் கூடத் தொட முடியுமா? தலையைச் சீவிப்புடுவேன் சீவி..."

வார்த்தையை முடிப்பதற்குள், ஓங்கிய கை மாறாமல் அறைந்தார். வலது காதோடு சேர்ந்து விழுந்த அறையில் தாங்க மூடியாமல் அலம்பினான். "ஐயய்யோ" என்ற கதறலோடு சாயப்போனவனை ஆவிப்பிடித்தார். இடது கையால் அவன் தலைமுடியைக் கொத்தாகப் பற்றிய மறு கணத்தில், வலது புறங்கையால் ஓங்கி இடது பக்கம் ஓர் அறை...'டபீர்' என்ற தேங்காய் உடைபடுகிற சத்தம்.

''ஐயய்யோ...அம்மா...'' என்று பீதியோடு கதறினான். வலதுகாலை மடக்கி ஓங்கி வயிற்றில் ஒரு மிதி. மல்லாக்கப் போய் விழுந்தான், புழுதியில்.

''ராஸ்கல், பொம்பளைபுள்ளைக இருக்குற ஊர்லே வந்து ரெளடித்தனமாடா பண்றே? கேக்க ஆள் இல்லேன்னு நெனைப்பாடா? பெரிய கொம்பன்னு திமிரா?''

புழுதியில் விழுந்த பச்சைக்கைலி விழுந்த நிலையிலேயே கையெடுத்துக் கும்பிட்டான்.

''ஐயா ... சாமி ... சாமி ... என்னைக் கொன்னுடாதீக...சாமி, சாமீ...உங்களுக்குப் புண்ணியமாப் போகுது.''

வாலை மடக்கிக்கொண்டு ஓடுகிற நாயைப்போல அவலமாய்க் குழைந்தான். அழுது கரைந்து வாயைக் கோணினான். கும்பிட்ட கைகள் நடுங்கின. ''சாமி, சாமி...ஐயா சாமி'' என்று கெஞ்சிக் கதறினான்.

''ஓடுறா நாயே...இனிமே இந்தப் பக்கமா வந்தே முதுகுத்தோல் பிஞ்சுப் போகும்...ராஸ்கல்.''

நாலெட்டு ஓடியவன், திகைத்து நின்றான், பற்றமும் கெஞ்சலுமாய்ப் பார்த்தான்.

''ஐயா...என் சைக்கிள்யா...''

''எதுடா?''

''அந்தா...பச்சை ஸீட்டு வண்டி.''

''எடுத்துட்டு ஓடுடா...''

நடுக்கத்தோடு கிட்டத்தில் வந்தான். பயத்தில் பறவையாடிய கண்கள். டீக்கடை முன்னால் நின்ற நாலைந்து சைக்கிள்களில் அவன் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடினான்.

ஆத்திர உணர்ச்சியில் விறைத்துப் போய் நின்ற ரத்தினவேலு, அதே வேகத்தில் டீக்கடையில் உட்கார்ந்தும் நின்று கொண்டுமிருந்தவர்களை ஏளனமும் கோபமுமாய்ப் பார்த்தார்.

''ஏய்யா...இப்படிச் சிலையா கெடக்கீக? இந்த மாதிரி வாய்செத்து, கைசெத்துப் போய் கெடக்குறதாலேதானே, வந்தவன் போனவனெல்லாம் குட்டிநாயா கொலைச் சுட்டுக் கெட்டிக்காரனாகிப் போயிடுறான்! ஊர்மானம் காத்துலே பறக்குது...''

கண்டனமாய்ச் சீறுகிற அவரிடம் பம்மிப் பதுங்கிய அவர்கள், அவர் நகர்ந்தவுடன், அமைதியைத் தாறுமாறாகக் கிழித்தனர். கசாபுசாவென்று பேசினர்.

பச்சைக்கைவீயை வைதார்கள். அடிக்க நினைத்ததைச் சவடாலாய்ப் பேசினர். வாயில் எச்சில் தெறிக்க வீரம் பேசினர். முகத்தில் ஒட்டியிருந்த கரியைக் குற்ற உணர்வுடன் பேசிக் கழுவினர்.

இதுதான் ரத்தினவேலு ... முரட்டுத்தனமானவர். மூர்த்தண்யமானவர். மூக்குக்கு மேல் கோபம் உட்கார்ந்தே இருக்கும். அடித்தாரென்றால், அது நாயடி பேயடியாகத்தானிருக்கும்.

இளவட்டத்திலும் அப்படித்தான். பள்ளியிலும் இப்படித்தான். சாகும் வரை இதேதான். பிறவிக்குணம் மாறுவதற்கு வழியில்லை.

'பள்ளி ஆசிரியர் என்றால் மென்மையானவர். வன்முறையை நிந்திப்பவர். அமைதியின் சொரூபம்' என்றெல்லாம் ஆசிரியர்களைப் பற்றி இருக்கிற மதிப்பீடுகளைப் பொருட்படுத்தவேமாட்டார். அவர் குணமே தனி.

"வாத்திமார் இப்படியிருக்கலாமா?" என்று யாராச்சும் கேட்டால், விடைப்பாய் நின்று பதிலடி தருவார்.

"ஏன், வாத்திமார்னா சொரணையத்தவங்களா? வாலைச் சுருட்டிக்கிட்டு ஓடுற நாய்களா? நாங்களும் சோத்தைத்தானே திங்கோம்? மானத்தோட இருக்கக் கூடாதா?"

அம்புட்டுத்தான். கேட்டவர் வாயைப் பொத்திக் கொண்டு போய்விட வேண்டும். வேறுவழி? பொசுக்கென்றால் கைநீட்டுகிற இந்த மனிதனிடம் என்னத்தைப் பேச? ஒதுங்கிப் போய்விடுவார்கள்.

தெருவில் நடக்கிறபோது ரத்தினவேலு நினைத்துக் கொண்டார். 'பூங்கிளி என்ன செய்றாளோ... ஒத்தையிலே இருப்பாள். பாவம் தாயத்த புள்ளே.'

ஷிஃப்ட் முடிந்து வெளியே சைக்கிளில் வந்த வசந்தன் மணி பார்த்தான். 4.10. சிமெண்ட் ரோட்டில் வந்த அவனுக்கு, கடந்தும் - எதிரிலும் - பல தொழிலாளர்கள் 'விஷ்' பண்ணினார்கள். இயல்பான புன்னகையோடு ஏற்றுக் கொண்டான்.

அவனுக்குள் நேற்றுப் படித்த ருஷ்ய நாவல்... மைக்கேல் ஷோலகோவ்வின் 'அவன் விதி' சின்ன நாவல். உள்ளுணர்வுகளைக் கிண்டிக் கிளறி உழுது மிருதுவாக்கி விட்ட நாவல். உறக்கத்தைப் பறித்துவிட்ட விறுவிறுப்பான நாவல்.

முக்குரோடு களைகட்டியிருந்தது. பஸ்களும் சைக்கிள்களும் தாறுமாறாய். கடை கண்ணிகளில்-டேப்-ரிக்கார்டுகளின் பேயிரைச்சல்.

கடந்து தொழிற்சங்க ஆபீஸுக்குள் வந்து சைக்கிளை நிறுத்தினான். வேலை முடிந்து வந்த தோழர்கள்... வேலைக்குப் போக இருக்கிற தோழர்கள்...

இரண்டு சேரை சுவரை ஒட்டிப் போட்டு, அதன்மேல் பெரிய தட்டி போர்டைச் சாத்தி வைத்திருந்தனர். புதிதாக வெள்ளை பேப்பர் ஒட்டிக் காயவைத்திருந்தனர். வரதன் எழுதுவதற்கு சிரட்டையில் மையும் கையில் பிரஷுமாய் நின்றார்.

"என்ன, போர்டுலே என்ன எழுதப் போறீக?"

"திரிபுரா வெற்றியை வாழ்த்தி..."

"மேட்டர் ரெடி பண்ணிட்டீகளா?"

"ம்... இந்தா... நீயும் பாத்துக்க..."

வசந்தன் மேட்டரை வாங்கிப் பார்த்தான். அவனுக்குள் உடன்பாடற்ற நிலை. மறுப்பின் தொனிகள் முகத்தில், கண் இடுங்கலில்.

"என்ன... சரியில்லியா?"

"இருக்கு. ரொம்ப நீளமாயிருக்கு..."

"விஷயம் சொல்லணும்லே?"

"நோட்டீஸ்லே சொல்ல வேண்டியதையெல்லாம் போர்டுலே சொல்ல முடியுமா? சொல்லணுமா?"

"அப்புறம்?"

"விஷயத்தோட சாராம்சம் வந்தா... போதாது?"

"எப்படி?"

"தலைப்புலே...'திரிபுரா தேர்தலில் இடது முன்னணி வெறறி... வெற்றி... வெற்றி'ன்னு எழுதிக்கோங்க."

"ம்..."

"சாகக்கிடந்த ஜனநாயகத்தைப் போராடி உயிர்ப்பித்த திரிபுரா மக்களே, தேசத்தின் திசைகாட்டிகளே, உங்கள் தியாகத்தில் பிரமிக்கிறோம்...நெஞ்சார வாழ்த்துகிறோம்'ங்கிறதைக் கவிதை எழுதுற வரிசையிலே எழுதுங்க."

வரதன் உதடுகளில் கேலிப் புன்னகையின் நெளிவு. ''இத்தனை பெரிய போர்டுலே இம்புட்டுச் சிறு வரிகளா?''

''ம்... அதையும் போர்டுலே வலது பக்கம் கீழ்மூலை யிலே மட்டும் எழுதணம். இடது மேல் மூலையிலே 'கூட்டாக முஷ்டி உயர்த்துகிற சில கைகள்' படம். அதுலே ஒரு கையிலே மட்டும் அழகான பூ!''

''இடதுமூலை - வலதுமூலை சரி. மிச்ச இடமெல் லாம்?''

''வெற்றிடமாயிருக்கட்டும். அதுதான் பாக்க அழகா யிருக்கும்.''

''என்ன வசந்தன் சொல்றே?''

''தோழர்... கதை, கவிதை, கட்டுரை மட்டுமில்லே, தட்டிபோர்டுகூட விஷயமாயிருந்தா மட்டும் போதாது. அழகாவும் இருக்கணும். தட்டிபோர்டோட வடிவ அழகே தெருவுலே போறவனை நிறுத்தணும். வசீகரிக்க ணும். வாசிக்க வைக்கணும். அப்பத்தான் விஷயமே அவனுக்குள்ளே இறங்கும்.''

மற்ற தோழர்களும் வசந்தன் சொல்வதைச் சந்தோஷ மாய் ஆதரித்தனர்.

''ஆமாயா... போர்டுன்னா 'கொசகொச'ன்னு வெறும் எழுத்துக்களா இருந்தா, பாக்கச் சகிக்காது, வசந்தன் சொல்றமாதிரி கச்சிதமா, அழகா இருக்கணும். எழுதுற வார்த்தைகளும் 'நச்ச்'சுன்னு இருக்கணும்...''

இவன் ஆபீஸின் உள்ளறைக்குள் போனான். சில ஃபைல்களைப் புரட்டினான். வந்திருந்த தபால்களை வாசித்தான். ஃபைலில் இருந்த புதிய 'மெமோ'க்களைப் படித்தான். படிக்கும்போதே மனசுக்குள் தோன்றும் மறுப் புரைக்கான பாயிண்ட்களையும் குறித்துக் கொண்டான்.

கொஞ்சநேரமாயிற்று. வசந்தன் விடைபெற்றுக் கொண்டு சைக்கிளில் வெளியில் வந்தான். சிமெண்டா லையின் பிரமாண்டமான உலக்கை போன்ற - வானை முத்தமிடுகிற - குழாய். மேகங்களைக் கக்குவதைப்போல அது வெளியேற்றுகிற புகைத்திரள். காற்றின் திசையில் நடந்த அந்தப் புகை வரிசையில், சூரிய ஒளிபட்டு...ஒளிப் பாளமாய் - ஒளிச்சாலையாய் - நீண்டு விரிகிற அழகு.

புகையிலிருந்து உதிர்கிற சிமெண்ட் தூள், சாரல் தூறலாய்ப் பரவி விழுகிறது. உலவும் சகலர் உடம்பிலும் அடர்த்தியாய் சிமெண்ட் புள்ளிகள். நாசிக்குள்ளும் போகும். நுரையீரலையும் நாசமாக்கும். சுற்றுச்சூழலும் புற்று நோயாய் புரையோடுகிறது.

இதைப் பற்றி அரசாங்கமும் கவலைப்படவில்லை. அதிகாரிகளும் கவனிப்பதில்லை. சங்கம் போடுகிற கூப் பாடுகளை, ஜனங்களும் அவ்வளவாய் எடுத்துக் கொள் வதில்லை.

சாயங்காலச் சூரியன், சாயம் மாறி இருந்தது. மஞ்சள் வெயில், நிழல்களை நீளமாய் மண்ணில் நகர்த்தியது. வாடைக்காற்று சைக்கிளுக்கு வசதியாக தள்ளுகாற்றாக இருந்தது. ஃபிரீவீலின் இரைச்சல் மனசுக்கு இதமாக இருந்தது.

கரிசல்காடு சிமெண்ட் தூசி படிந்து படிந்து வெண் காடாய் வெளுத்துக் கிடந்தது. சாகக் கிடக்கிற நோயாளி போல். தப்பித் தவறிப் பிழைத்திருந்த பயிர் பச்சை களும் சிமெண்ட் தூசியில் நனைந்து உயிர் செத்துக் கிடந்தன.

மஞ்சனத்தி மரத்திலிருந்து வந்த இனிய கூவல்! பறவையின் சோகமும் ஏக்கமுமான நீளக்கூவல். குயிலோ? செவலைநிறச் சிறகை அடித்துக்கொண்டு பறந்த பறவை செம்போத்து.

ஊருக்குள் வந்தான். தெருவில் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது—

மனசுக்குள் ஒரு கவிதை முகம் காட்டுகிற மாதிரியான சுகவேதனை. உள்ளுக்குள் பயணமானான்.

'வெண்காடாய்த் திரிந்துபோய்
வீரியமிழந்த கரிசல்காடு
வேலிமரங்களோர்டு சேர்ந்து
காணாமல்போன புள்ளினங்கள்...
புகைத் தூளின் முற்றுகையில்
கரிபடிந்த மனித நுரையீரல்...
கனவுகளும் அழகுகளும்
கனவாய்ப் போக...
வேலைதந்து சிமெண்ட் தரும்
ஆலை மட்டும் இங்கு நிஜமாய்...
இது, வளர்சிதைவா...
உயிர் வதையா??

படைப்பு மயக்கத்தின் லயித்துப் போய் சைக்கிளில் வந்துகொண்டிருந்த வசந்தன், வாத்தியார் ரத்தின வேலுவை ரொம்ப நெருக்கத்தில் பார்த்தவுடன் பதறியடித்துப் போய் 'சடபுட'வென்று, சைக்கிளிலிருந்து இறங்கினான்.

பவ்யமாய் ஒதுங்கி நின்று மரியாதை உணர்வோடு ''வணக்கம் சார்'' என்று விஷ் பண்ணினான்.

''என்னப்பா... வசந்தா, வேலைக்குப் போய்ட்டு வாரீயா?''

''ஆமா...சார்...''

"தொழிற்சங்க வேலைகள்லே ரொம்ப மும்முரமோ…?"

"இல்லே சார்… அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே சார்."

"அதானே பார்த்தேன்…ஒழுங்கா வேலையைக் காபாத்தி உங்க அம்மாவைச் சந்தோஷமா வெச்சிருக்கபாரு."

"ஆகட்டும் சார்…"

ரத்தினவேலு கடந்து போக… பயத்திலு மரியாதை உணர்விலும் தளர்ந்து போய்க் கலைந்த கிடந்த வசந்தன், தன்னிலைக்கு வரக் கொஞ்ச நேரமயிற்று.

அதுவரைக்கும் சைக்கிளை உருட்டினான்.

4

அது பங்குனி மாசம்…களங்களில் மிளகாய்ப்பழங்கள் பெரிய பெரிய வட்டமாய்…சதுரமாய்க் காய்கின்றன. பொட்டல்களத்தில் ரத்தச்சிவப்பாய் விரிந்து கிடக்கிற மிளகாய்ப்பழங்கள்…வெயில்பட்டு மின்னி எதிரொளிக்கின்றன. களத்தின் அருகிலுள்ள சுவர்களில் கூரை நிழல். அந்த நிழலைப் பொய்யாக்குகிற எதிரொளியின் சிவப்பு வெளிச்சம்.

சிவப்புக் கடலாய் விரித்துக் காயப் போடப்பட்டிருக்கிற ரத்தப்பூச்சான மிளகாய்பழங்களின் வண்ண மின்னலை ரசிக்க முடியாத பயபீதியோடு, கூரை நிழலில் ஒற்றையாய் உட்கார்ந்திருக்கும் சிறுவன் வசந்தன்.

பக்கத்தில் பைக்கட்டு. முற்றிய காலையின் வெயில் உக்கிரமாயிருக்கிறது.

நாலாங்கிளாஸ் முழுப்பரீட்சை முடிந்து அவன் பாஸாகி விட்டான். ஆனால்...அதையடுத்து? இன்று அஞ்சாங் கிளாஸ் போகணுமே...அதை நினைத்தால்தான் புளியைக் கரைக்கிறது. புலி வாயில் நுழையப் போகிற மிரட்சி...நடுக்கம்...

பள்ளிக்கூடம் போவதையே நிறுத்தி விடலாமா என்கிற முடிவுக்குள் தள்ளி விடுகிற கிலி.

இப்ப...இவனைத் தேடிப் பையங்க வந்துருவாங் களோ...? வாத்தியாரே வந்துருவாரோ...?

நினைக்க நினைக்கத் திக்திக் என்று வருகிறது.

மிளகாய்ப்பழத்தில் மேய்கிற கோழிகளைப் பொடிப் பொடிக் கல்லால் எறிகிறான். வந்து உட்கார்கிற மைனாக் களும் பதறிப் போய் 'வீச்' சென்று பறக்கின்றன.

இந்தக் காலத்தில் மைனாவின் எச்சமே ரத்தப்புள்ளி யாகத்தான் இருக்கும். மிளகாய்ப்பழம் தான் அதற்குத் தீனி. கோழிகளும் அப்படித்தான்.

பறவை விரட்டல்களில் — இவனது கல்லெறி விளையாட்டில் மனம் லயித்து...கிலியை மறந்து...உல்லாச மாகிப் போன குதூகலத்தில் சொக்கிப் போயிருந்த நேரத்தில்—

அவன் முதுகில், 'சுரீரெ'ன ஒரு நெருப்பு மின்னல். திரும்பிப் பார்த்தால்—

பருத்திமார்க்குச்சியோடு அய்யா! ஆவேசமாய் அடி உதட்டைக் கடித்துக்கொண்டு அடியென்றால்... அடி. அப்படி அடி...பின்னியெடுத்துவிட்டார். நெருப்புக் கங்கில் விழுந்த பிஞ்சுக் குஞ்சாய்த் துடித்தலறினான்.

பிய்த்துக்கொண்டு ஓடினான், வீட்டைப் பார்த்து. உடம்பெல்லாம் பருத்திமார்க்குச்சியும் ஆத்திரமும் சேர்ந்து நடத்திய விளையாட்டு...வரிவரியாய் ரத்தத்தடம்!

அய்யாவுக்கு இன்னும் ஆத்திரம் தீரவில்லை.

"ராஸ்கல், போய்ட்டியா...? போ. எங்கே போயிருவே? இரு...இரு... நா வாரேன். தலைமுறை தலைமுறையா வண்டிமையும் கட்டைவிரலுமாய் மல்லுக்கட்டி குருட்டிழவுகளாய்ச் சீரழியுறோம். இந்த ஒரு பயலையாச்சும் படிக்க வெச்சுக் கண்ணைத் தொறந்து விடலாம்னு நெனைச்சா...படுவா, நீயும் கோணக்கால் சாத்திக்கிட்டா அலையுதே? பள்ளிக்கோடம் போய்ப் படிக்கிறதுக்கும் மேல்வலிக்கோ...? இரு வாரேன்... தொலியை உரிச்சிக் காயப்போடுதேன்..."

வம்சக்கனவின் சிதைவைத் தாங்க மாட்டாத குமறலோடு ஒற்றையில் நின்று புலம்பிக்கொண்டிருந்தார்.

சட்டை கழற்றப்பட்ட வசந்தனின் முதுகில் வரிவரியாய் ஓடிய ரத்தக்கீறல்கள். தொட்டவுடன் சுரீரென்ற காந்தல், வீறிட்டழுதான். அம்மாவுக்குப் பார்க்கப் பார்க்க அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

தலையில் தலையில் அடித்துக்கொண்டு கதறுகிற அம்மா, அழுகையும் கண்ணீருமாய் உடைந்து போய்க் கிழிந்த காகிதமாய் அவள்.

"ஐயோ...பாதரவே! இப்படியும் ஒரு மனுசன் அடிப்பானா? எம் புள்ளையை இப்படிக் கொன்னுருக்கானே... பாவி..."

அன்றைக்கு —

அம்மாவுக்கும் அய்யாவுக்கும் கடும் சண்டை. வீடு முழுவதும் வசவும் கண்ணீருமாய் உணர்ச்சி வெக்கை.

அ—3

நேரம் ஆக ஆக ஆத்திர வசவுகள் புலம்பலாய்த் தணிய, ஒருவர் விருப்பம் ஒருவர் அறிய...இருவர் கவலைகளும் ஒரே விஷயம்தான் என்று புரிபட...

உணர்ச்சிகள் சமனப்பட்டு...இருவர் கனவுகளும்—வசந்தனின் எதிர்காலமும் படிப்பும்தான் என்று ஒருமனப் பட்டுக் கவலைப்பட்டார்கள்.

சாயங்காலம்—

அம்மா சாம்பிராணி போட்ட தேங்காயெண்ணெயைச் சுடவைத்து, புண்ணுக்குப் போட்டுக்கொண்டு வசந்தனிடம். ''ராசா... செல்லம்...கண்ணு'' என்று குழைந்தாள். ''ஏண்டா, பள்ளிக்கோடம் போகலை?'' என்று கொஞ்சலும் தாங்கலுமாய்க் கேட்டாள்.

வசந்தன் ஒரேபிடிவாதமாய்க் கத்திச் சாதித்தான்.

''நா பள்ளிக்கோடம் போகவே மாட்டேன்...''

அடம்பிடித்த அவனது மறுப்புகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு...பாசக் குழையோடு குடைந்து காரணம் கேட்ட போது—

வசந்தன் கசிந்தான்.

''அஞ்சாப்பு வாத்தியாரை நெனைச்சாலே பயமாயிருக்கு. அடி கொன்னுருவாரு...''

''இதான் காரணமா? அப்ப சரி...நீ இனிமே பள்ளிக்கோடம் போக வேண்டாம். என்ன ராசா...?''

அம்மான்னா...அம்மாதான். நல்ல அம்மா.

''ஆகட்டும்மா...'' அவனுள் குதூகலப் பிரவாகம். மகிழ்ச்சி பூத்துச் சிரிக்கிற நந்தவனமாய்...அவன் மனம். விசிலடித்துக் கும்மாளம் போடுகிற அவனது உணர்வு.

ஆனால் —

அம்மா சாயங்காலமே அஞ்சாப்பு வாத்தியார் ரத்தினவேலுவைப் பார்த்து, விவரம் பூராவையும் விலாவாரியா சொல்லி... ''ஒத்தப்புள்ளை... அதாச்சும் படிச்சு முன்னுக்கு வரணும்னு எங்க ஆசை'' என்று கண்ணீர் வடித்திருக்கிறாள்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. லீவ்... சக சிறுவர்களோடு சுதந்திரமாய் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தான் வசந்தன். ஊர்க்கிணற்றைச் சுற்றிக் கொண்டு ஓடிய குட்டை மாரியப்பனைப் பிடிக்கிற வெறியில் மூச்சுப் பிடித்து வசந்தன் ஓடியபோது—

கிணற்றின் திட்டில் உட்கார்ந்திருந்த ஓர் உருவம், இவனைக் கொத்தாகப் பற்றி நிறுத்தியது. திமிறிக் கொண்டே திரும்பிப் பார்த்த வசந்தனுக்கு—

பயத்தில் 'ஒன்றுக்கே' வந்து விட்டது. டவுசர் 'சொத சொத' வென்று நனைந்து விட்டது. வாத்தியார் ரத்தின வேலுதான்.

கதர்வேட்டியும் கதர்த்துண்டுமாய் உட்கார்ந்திருந்தார். பயத்தில் நாக்கு ஒட்டிக் கொள்ள, இதயம் 'தடக், தடக்' என்று துடிக்க...அழுவதற்காக அவன் வாய் கோணிக் கொண்டிருந்தது. சின்னக் கண்களில் மிரட்சியின் தவிப்பு...ரத்தினவேலு திகைத்தார். நெஞ்சின் ஆழம் வரை ஊசியாய்ப் பாய்ந்து இறங்கிய அந்தக் கண்களின் அச்சத்துடிப்பு...அவருடைய இதயத்தின் அதல பாதாளத்தில் எங்கோ ஒரு மூலையில் குற்ற உணர்வின் முள் உறுத்தல். ரத்தக் கசிவு.

''ஏண்டா...என்னைக் கண்டு இப்படிப் பயந்து சாவுறீக? என்னைக் கேவலப்படுத்துறதுக்கா?'' என்று சுய பச்சாதாபமாய்க் கேட்டவுடன், வசந்தனுக்கு ஒரே புதிர். இவரைப் பார்த்துப் பயப்படுவதா, பரிதாபப்படுவதா?

குளிர்ந்த வார்த்தைகளாகப் பேசினார். ரொம்ப மிருதுவாய்ப் பேசினார். அவன் முன்பு விழுந்து கிடந்த அந்த நல்லிதயம்.

"ஏலேய்...நா அடிக்கத்தான் செய்றேன்டா...எதுக்கு? நீங்க நல்லா படிச்சு, ஒழுக்கமாகி, முன்னுக்கு வரணும்னு தானே? 'பட்டிக்காட்டுப் புள்ளைக படிப்புக்கு லாயக் கில்லே'ன்னு முத்திரை குத்தி வெச்சிருக்கிற பட்டணத்து மேதாவிக மூக்கை ஒடைச்சுக் காட்டணும்னுதானே? என்னைப் பார்த்துப் பயந்து நீங்க ஓடுறதுக்கா? படிப்புக்கே தலைமுழுகுறதுக்கா? ஆடுகுட்டி மேய்ச்சு, காடுகரைகள்லே நீங்க சீரழியுறதுக்கா?"

அவர் சொல்கிற விஷயம் எதுவுமே அவனுக்கு விளங்க வில்லை. மாயாட்டமாய் இருந்தது. ஆனால், ஒன்று மட்டும் அவனது உள்மனதுக்குப் புரிந்தது.

ரத்தினவேலு வாத்தியார் ராட்சஸன் இல்லை. ஒரு தாயிடம் நின்று கெஞ்சுகிற சிறுவனின் குழைவாக அவரை அவன் உணர்ந்தான்.

அஞ்சாம் வகுப்பில் முதல் மாணவனாய்—மானிட்ட ராய்த் திகழ்ந்தான் வசந்தன். ஒரு அடிகூடப் பட வில்லை. ரத்தினவேலு வாத்தியார் அவன் விஷயத்தில் கூடுதல் கவனம் செலுத்தினார்.

ஆறாம் வகுப்புக்கும் ஏழாம் வகுப்புக்கும் ஏதாவது ஒரு பீரியட் எடுக்க வருவார். எட்டு முடிக்கிற வருஷத்தில் அந்தத் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளியாக... உள்ளூரிலேயே எஸ். எஸ். எல். சி. முடித்தான் வசந்தன்.

கிராமத்து எஸ். எஸ். எல். சி. பாமரமாக, திசை தெரியாமல் அவன் குழம்பிக் கிடந்தபோது அவனை மடக்கிப் பிடித்த ஒரே கேள்வி, 'இனி என்ன செய்ய?' என்பதுதான்.

அதற்கும் ரத்தினவேலு வாத்தியாரே உதவி செய்தார். ஐ.டி.ஐ. படிக்கும்படி வழிகாட்டினார். ஐ.டி.ஐ. என்றால் எங்கே போக, எப்படிப் போக, என்ன மார்க்கம் என்று புரியாமல் இருட்டுக்குள் தள்ளாடிய வசந்தனுக்கு ஒளிக் கீற்றாய் வந்து வெளிச்சம் காட்டினார். அவரே அலைந்து திரிந்து, தன் மகனுக்குச் செய்கிற அக்கறையோடு பாடுபட்டு ஐ.டி.ஐ.யில் ஸீட் வாங்கிச் சேர்த்து விட்டார்.

சிமெண்டாலை கர்ப்பமாகி, ஒரு பிரசவத்துக்குத் தயார்நிலையில் இருந்தது. இவன் ஐ.டி.ஐ. முடித்த வருஷத்தில்தான், ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனி குட்டியாக அறிமுகமாயிற்று. அதில் இவனுக்கு வேலையும் கிடைத்து விட்டது.

எல்லோருக்கும்—ஊருக்கும்—சிம்ம சொப்பனமாகத் தோன்றி மிரட்டுகிற வாத்தியார் ரத்தினவேலு, வசந்தனுக்கு ரட்சகர். ஒளிமிகு குலதெய்வம். அவருக்கே அவன் வில்லனாகப் போகிறான் என்பதை அவன் கண்டானா என்ன? குலதெய்வத்துக்குப் பக்தனே பகைவனா?

கண் விழித்துப் பார்த்தபோது மணி 5.10. விடிந்த மாதிரியே தெரியவில்லை. கனத்த இருட்டு கட்டுக்குலையாமலிருந்தது. பூங்கிளி பல்லைத் தேய்த்து முகத்தைக் கழுவினாள். அப்பா கட்டிலில் படுத்திருந்தார். முறையாய் மடித்து விரித்த போர்வை...உறையிட்ட தலையணையின் மேல் இரண்டாக மடித்துப் போட்ட துண்டு. கட்டில் பக்கத்தில் மர ஸ்டூல். அதில் மூடிவைத்த தண்ணீர் சொம்பு.

அப்பாவுக்கு எல்லாம் தெளிவாய் இருக்க வேண்டும். சுத்தமாய் — ஒழுக்கமாய் — இருக்க வேண்டும். எதிலும், எப்போதும், எல்லாவற்றிலும் ஒழுக்கம் தான்!

''ஒழுக்கந்தான் மனுச லட்சணம். கொரங்குலே யிருந்து மனுசன் வெலகி நிக்கிறதே...இந்த ஒழுக்கம்தான். ஒழுக்கந்தான் குகையை வீடாக்கி, மாளிகையாக்கிச்சு... மிருக உறவை அழிச்சு அக்காள், தங்கச்சி, பெண்டாட்டி, அண்ணி, அத்தைன்னு உறவுகளுக்கு அர்த்தம் தந்துச்சு. ஒழுக்கந்தான் கலை, இலக்கியம், சயின்ஸ் எல்லாமே...' சகலமும் முட்டிமோதி, ஒட்டி ஒரசி, ஒலக வாழ்க்கை முழுவதும் ஒரு நேர்கோட்டுலே இயங்குறதே...இந்த ஒழுக்கத்துலேதான். ஒழுக்கந்தான். மனுச அடையாளம் தவறிட்டா... மனுச உருவுலே நடமாடுற மிருகம் தான்.''

இப்படி ஒரு தத்துவமே சொல்வார். அதை எல்லாக் கோணங்களிலேயும் நிருபிப்பார்.

''பிரபஞ்சவெளியிலே எல்லாக் கோள்களும் அததற்குரிய ஒழுக்கத்துலே இயங்குறதுனாலேதான் ஒண்ணை ஒண்ணு முட்டிக்கிடாம...நாள், கிழமை, மாசம், வருசம்ங்கிற கணக்கே வருது. கணிதங்களுக்கான அடிப்படையே நம்பர்களின் ஒழுக்கம்தான். மொழியோட ஒழுக்கநெறிதான் இலக்கணம்...

—இப்படி அடுக்கிக்கொண்டே போவார். 'மனித வாழ்க்கையின் மூலாதாரமான அடிப்படையே ஒழுக்கம் தான்' என்று பிசிறில்லாத ஒழுக்கமாய் விளக்குவார்.

அப்படி அவர் பேசுகிறபோது... 'அப்பா ஒரு சாதாரண கிராமத்து வாத்தியாரல்ல. உலகத்திலேயே ஒரு புதிய தத்துவத்தைக் கண்டுபிடித்து நிர்மாணித்த மகத்தான அறிவாளி' என்று பூங்கிளிக்குத் தோன்றும்.

இந்தப் பீரமிப்பெல்லாம் சின்ன விஷயத்தில் பொசுக்கென்று போய்விடும். அப்பாவின் முன்கோபம்...உருட்டி

விழிக்கிற விழி. முரட்டுத்தனமாய்க் கேள்வி கேட்டுக் குலைபதற வைக்கிற குரூரம்... அரட்டுகிற கொடூரம்...

இதெல்லாம் என்னவகையான ஒழுக்கம்? அப்பாவின் சுபாவ சங்கீதத்தின் அபசுரம் அல்லவா? ஒழுக்கம் தவறிய—இயல்புகெட்ட—குணக்கேடல்லவா?

மாபெரும் கண்டுபிடிப்பாளர் என்கிற—தத்துவவாதி என்கிற—மிகப்பெரிய பலூன் பிரமாண்டத்தை இந்தச் சுபாவ அபசுரம் ஒரு முள்ளாய்க் குத்திக் கிழித்து விடுகிறதே...

அப்பாவின் குறட்டையற்ற நிதானமான உறக்கம்... நெஞ்சுக்குழியின் வெள்ளை ரோமங்கள்... கைகளை மடக்கிக் கன்னத்துக்கு அடியில் வைத்து ஒருக்களித்துப் படுத்திருக்கிற நேர்த்தி...

அப்பாவுக்குள் இன்னொரு முகம்... அன்பாலும் பாசத்தாலும் நிறைந்து ஒளிர்கிற குளிர்முகம்.

அம்மா இறந்தபிறகு மறுதாரம் கட்டிக்கொள்ளாமல் வெறுமையை வரித்துக்கொண்ட அப்பா... ஒற்றை மகளின் எதிர்காலமே மொத்த லட்சியம் என்று தன்னையே அர்ப்பணித்துவிட்ட பாச அப்பா...

பிரஷ்ஷை டப்பாவில் போட்டு விட்டு, நீராகாரம் குடித்தாள் பூங்கிளி. முற்றம் தெளித்தாள். கிழக்கு வானம் சாம்பலாய் வெளுத்துக் கிடந்தது. அதில் ஒற்றை வெள்ளி பளிச்சென்று...

மூன்று நாலு வீடு தள்ளி ஒரு கூரை வீடு. அங்கிருந்து வந்தாள் செல்லம். பூங்கிளி வயசுதான். சிநேகிதி.

''ஓடைக்குப் போய்ட்டு வந்துருவமா...?''

''ம்...''

பூங்கிளி செருப்பைப் போட்டுக்கொண்டு புறப்பட்டாள். இருட்டுள் இருட்டாய் எருமை மாடுகள் பால் பண்ணைக்குப் பால் பீய்ச்சப் போகின்றன. கன்றுக் குட்டிகளின் ஆவலும் குதூகலமுமான விளையாட்டின் 'கடபுட' சத்தம்... ஆ(ழ்)ந்து சோர்ந்து மெதுநடை போடுகிற பொறுமைமிகு எருமைகள், அவ்வப்போது சாணம் போடுகிற சத்தம்...

இருட்டின் முகம், சூர்ய பயத்தில் வெளுக்க ஆரம்பித்தது. எல்லா வீடுகளின் சன்னல்களிலும் ஒருக்களித்த வாசற் கதவுகளிலும் பெண்கள் விழித்துவிட்டதற்கான அடையாளமாய்... விளக்கு வெளிச்சமும் வேலைச் சத்தமும்...

பூங்கிளியும் செல்லமும் வீடுகளைக் கடந்து, உழவுப் புஞ்சையில் நடந்து, ஓடைக்காட்டுவேலி மறைவு நோக்கிச் சென்றனர்.

இது ஒரு தின அவஸ்தை, கிராமத்துப் பெண்களுக்கு. ஆண்களைப் போல் சுதந்திரமாக மனம்போல போனோம் வந்தோம் என்றிருக்க முடியாது.

இந்த இயற்கை உபாதையில்கூட, பெண்கள் பயந்து பயந்து இருட்டுக்குள் ஒளிந்து ஓடைக்குப் போய்விட்டு வந்தாக வேண்டும். வீட்டுக்குள் லெட்ரின் கிடையாது. பொது கக்கூஸ் இல்லை. இருந்தாலும் பராமரிப்பு இருக்காது.

கிராமங்களே நாதியற்றதுகள், கிராமத்துப் பெண்கள், நாதியற்றதுகளின் அலட்சியத்துக்குரியவர்கள்.

புஞ்சைப்பொழியில் பின்னால் நடந்து வந்த செல்லம், மெள்ளக் கிசுகிசுத்தாள், ரகசியம் பேசுகிற குரலில்.

''பூங்கிளி... ஒனக்கு விஷயம் தெரியுமா?''

''என்னது?''

''நம்ம சுப்புத்தாயி மாப்புள்ளே நேத்துச் செத்துப் போய்ட்டாராம்...''

''அடப்பாவமே... நெசமா?'' பூங்கிளியின் உள்மனம் முழுக்க அதிர்ந்தது. நம்ப முடியாமல் திணறினாள்.

''ஆமாங்கே... நேத்துப் பொழுதடைய தாக்கலு வந்துச்சு. அவுக சொந்தக்காரங்க ஏழெட்டுப் பேரு ராத்திரியே போய்ட்டாக.

5

சுப்புத்தாயை நினைக்க நினைக்கப் பூங்கிளிக்கு வருத்தமாயிருந்தது.

'வாழ்ந்த நாள் பூரா நரகம். இனி என்ன செய்ய? தாலியறுத்த முண்டச்சியா, நாதியத்தவளா நிக்கணும். யாரு மூஞ்சியிலேயும் முழிக்குற கொடுப்பினை இருக்காது. இனி இருக்கிற காலமும் சுப்புத்தாயிக்கு நரகந்தான்...'

''நம்ம சுப்புத்தாயிக்கா இந்தக் கதி வரணும்? கல்யாணம் முடிச்சு மூணு வருசங்கூட ஆகலியே...''

''ஆமா...இந்தப் பங்குனி வந்தா மூணு வருசம் ஆகும். சடங்கான மறு வருஷமே 'மூய்ச்சி' வெச்சிட்டாகல்லே?''

''அட்டா... கொழந்தைகூட இல்லேல்லே?''

''ஆமா...ஆனா, ஏழெட்டுப் புள்ளை பெத்தெடுத்தவ மாதிரி ரத்தம் செத்துப் போய்ட்டா. பாவம், எலும்புந் தோலுமா அரை உசுராகிட்டா...''

''அடப் பாதரவே, சுப்புத்தாய் சின்னவயசு...''

"ஆமா, ஏழாங்கிளாஸ் வரைக்கும் நம்ம கூடத்தானே படிச்சா...?"

"படிப்புலே சுமார்தான். வெளையாட்டுலே பெரிய கெட்டிக்காரி. வாய்னா வாய், அப்படி வாய்... பயங்கர வாயாடி..."

"அதான்... வாயெடுக்க வழியில்லாத ஊமைப் பொழைப்புக் கெடைச்சிருக்கு..."

"பாவம்டி, சுப்புத்தாயை நெனைச்சாலே மனசுக்கு என்னமோ மாதிரி இருக்கு..."

"என்ன செய்றது... பொம்பளைக பொழைப்பே அப்படித்தானே இருக்கு..."

ஓடை வந்துவிட்டது. இருவரும் தற்காலிகமாகப் பிரிந்தனர். ஓடைக்குள் இறங்கினர். பூங்கிளிக்குள் சுப்புத்தாய்.

களத்தில் தட்டான்களாய், ஓடிப்பிடித்து விளையாடிய அந்த நாட்கள்... மேல் சட்டையில்லாமல், பாவாடையோடு, ஏழு வயசில் சுதந்திரமாக விளையாடித் திரிந்த கவலையற்ற குதூகல நாட்கள்...

மேலிருந்து துணிச்சலாய்க் கிணறுகளில் குதிப்பாள் பத்து வயசுச் சுப்புத்தாய். பூங்கிளிக்குப் பயந்து வரும். ஆனால், சுப்புத்தாய் விதவிதமாய்க் குதித்துச் சாகசம் காட்டுவாள்.

கமலைக்குழியில் நின்று — கமலைச் சட்டத்தில் ஏறி பம்ப்ஷெட் மொட்டைமாடி மீது ஏறி நின்று — ரொம்ப ரொம்பத் துணிச்சலாய்க் குதிப்பாள்.

கிணறே கிடந்து அலறும். தெறிக்கிற தண்ணீர்த் திவலைகள், சுவரெல்லாம் சளாரென்று போய் விழும். தண்ணீருக்குள் நுரையோடு ஒரு சாயலாய்ப் போய்விட்டு,

வேகமாய் மேலே வருவாள். தண்ணீருக்குமேல் வந்தவுடன் தலையை ஓர் உலுப்பு உலுப்பிவிட்டுச் சிரிப்பாளே. ஒரு சிரிப்பு...அடேயப்பா, உலகத்தையே ஜெயித்த மாதிரியான ஒரு சிரிப்பு.

பூங்கிளிக்குள் கலைந்த கூந்தலும் அழுத முகமுமாய், கிழிந்த சித்திரமாய் சுப்புத்தாய் அவளைச் சுற்றிலும் உட்கார்ந்து கைகோத்து ஒப்பாரி வைக்கிற பெண்கள். சுப்புத்தாயின் பூவை உருவி, பொட்டை அழித்து' வளையல்களை உடைக்கிற குரூரம். அவளைச் சூன்யத்துக்குள் அநியாயமாய் புதைக்கிற சம்பிரதாயங்கள்.

இந்தக் கதி...அவளுக்கா? கிணற்றுக்குள் விழுந்து விளையாண்டால்... கண்கள் ரத்தமாய் சிவக்கும்வரை வரமாட்டாளே சுப்புத்தாய்...முங்கு நீச்சு, மல்லாக்க நீச்சு என்று மாறீ மாறி, கிணற்றுக்குள் வட்டமடிப்பாளே...தண்ணீருக்குள் தொட்டுப்பிடித்து விளையாண்டால், அவளை யாரும் நெருங்க முடியாதே...தொட முடியாதே...மீனைப்போல 'விர்ர்'ரென்று நீந்தி, நீருக்குள் மறைவாளே...

அடப் பாதகத்தி...ஒனக்கா இந்தக்கதி? விளையாட்டில் தோல்வி காணாத அந்தச் சுறுசுறுப்பு, வேகம், வைராக்கியம், துணிச்சல் எல்லாம் வாழ்க்கையின் தோல்வியைத் தவிர்க்க உதவவில்லையா? செயலற்றுப் போயிற்றா? பயனற்றுப் போயிற்றா?

சுப்புத்தாய் ஏழாங்கிளாஸோடு படிப்பை நிறுத்திவிட்டாள். அம்மாகூட காட்டுக்குக் கூலிவேலைக்குப் போவாள். களைவெட்ட, மிளகாய்ப்பழம் பிடுங்க, விதை ஊன்ற, நாற்று நட என்று விவசாய வேலைகளில் கூலிக்குப் போவாள்.

அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. வீட்டில் துணிமணிகளையெல்லாம் ஊற வைத்து சோப்புப் போட்டுக் கொண்டிருந்தாள் பூங்கிளி.

எப்பவும் துள்ளலும் துடிப்புமாய் வருகிற சுப்புத்தாய், அன்றைக்கு கனத்த யோசனையில் மெதுவாக வந்தாள். அவள் வந்தாலே வீடு கலகலக்கும். அவளுக்கு முன்னால் அவள் சிரிப்புச் சத்தம் வந்துவிடும். 'தக்தக்'கென்று பூமியதிர வருவாள்.

எதையாவது சொல்லுவாள். எல்லாவற்றுக்கும் சிரிப்பாள். வகை வகையான சிரிப்பு. பிறர் பேசுகிற பேச்சு முறைகளைக் கிண்டல் பண்ணுவாள். அதே மாதிரி பேசிக் காட்டி நையாண்டி பண்ணுவாள். வீடே சிரித்துக் கலகலக்கிற மாதிரி ஒரே சிரிப்பாணிச் சத்தம்தான். அவள் வந்துவிட்டால் வீடு நந்தவனமாகிவிடும். விதவித வர்ணப் பூக்கள் பூத்துச் சிரிக்கும்.

அந்தச் சுப்புத்தாயா இப்படிப் பூனைபோல வருகிறாள்? அரவமற்று வருகிறாளே...?

சோப்புப் போட்டுக்கொண்டே நிமிர்ந்த பூங்கிளி... மனசுக்குள் கிள்ளுகிற அந்த மாற்றத்தைக் கண்டுகொள்ளாதவளைப் போல வரவேற்றாள்

''வாடியம்மா...கல்யாணப் பொண்ணு. பொண்ணு பார்த்துட்டுப் போனவுடனே, அடக்க ஒடுக்கமா ஆயிட்டியே...பரவாயில்லியே...''

உயிரில்லாமல் சிரித்தாள் சுப்புத்தாய்... உதட்டுச் சிரிப்பில் நிறையச் சுருக்கங்கள். சுருக்க ரேகை நிழலில் சோக இருட்டு.

''என்னடி...ஒரு மாதிரியாயிருக்கே?''

''ஒண்ணுமில்லே...''

''ஏண்டி இப்படி இருக்கே? வாய்விட்டுச் சொல்லித் தொலையேன். கல்யாணத்துலே சம்மதமில்லியா ஒனக்கு?''

''அதுவும்தான்...''

''அப்படீன்னா... கல்யாணத்துலே இஷ்டமில்லியாக்கும்? ஏன், அந்த ஆசை இல்லியாக்கும்? எதுக்குடீ இப்படிப் பம்மாத்துப் பண்றே?''

''பம்மாத்தா? நானா? ஏன்...ஒனக்கு ஆசையிருக்கா?''

''ஒனக்கு மட்டும் இல்லியாக்கும்?''

பாவாடையைக் கும்மி ஒரு நெருக்கு நெருக்கி, நுரையை வழித்துவிட்டு... சேலைக்குச் சோப்புப் போடத் துவங்கினாள். பக்கத்தில் நனைந்து ஊறிக்கிடந்த தாவணிகள், அப்பா வேட்டிகள், துண்டு, சட்டைகள்...

பூங்கிளி அவளைத் திரும்பிப் பார்த்தாள். சுப்பு குழப்பமும் திகைப்புமாய் வாடிப்போய் நின்றாள்.

''என்ன சுப்பு, சொல்லு. மொதல்லே உக்காரு. அப்புறம் சொல்லு...''

உட்கார்ந்தாள். பூங்கிளியை வாஞ்சையும் சோகமுமாய் ஒரு புதிய ஈரப் பார்வை பார்த்தாள். 'விளையாட்டுப் பேச்சு வேண்டாம்டி. என் கவலையைப் புரிஞ்சிக்க முயற்சி பண்ணுடி' என்று அன்பாய் வேண்டுகிற அந்த சோக வேண்டுகோள். பூங்கிளிக்குள் அந்தப் பார்வை இறங்கியது.

ஆழ்ந்த உணர்வில் குழைந்த குரலில், ''என்னடி?'' என்றாள் பூங்கிளி.

''எனக்குப் பயமாயிருக்கு பூங்கிளி. கல்யாணத்தைப் பத்திக்கூட இல்லே. மாப்பிள்ளையை நெனச்சுத்தான் பயமாயிருக்கு.''

''ஏன்ம்மா?''

''ஆளு நல்லாத்தான் இருக்காரு. லட்சணமான ஆளுதா:..?''

''பெறகென்ன?''

''முகமெல்லாம் ஒரு மாதிரியா வெளுத்திருக்கு. ஆளு அரண்டு போயி, வேத்து நெறமாயிருக்காரு...''

''அப்படீன்னா...?''

''ஏதோ ஒரு நோய் இருக்கும் போலத் தெரியுது...''

பூங்கிளிக்குள் ஓடிப்பரவுகிற அதிர்வு நெஞ்சைக் கவ்விப் பிடிக்கிற திகில்.

''அப்படியா...?'' என்று அவள் எதிரொலித்ததில் அந்த கிலி தெரிந்தது.

''ஆமாடி... நகை நட்டு ஒண்ணும் வேண்டாம். ரொக்கமும் வேண்டாம், பொண்ணு மட்டும் தந்தாப் போதும்னு சொல்றதே... அதனாலேதானோ என்னவோ...''

''இருந்தாலும் இருக்கும்'' என்று ஒப்புக் கொண்ட பூங்கிளி, சட்டென்று சொன்னாள்.

''மாப்புள்ளே புடிக்கலே. முடியாதுன்னு சொல்லிரு...''

சுப்பு எதுவும் சொல்லாமல் குழம்பி நின்றாள். பிடிக்குள் சிக்கிக் கொண்ட குருவியாக கதியற்று விழித்தாள். அவள் கண் நிறைய சோகம். திரண்டு நிற்கிற நீர்த்திரள்.

''ஏண்டி சுப்பு, முடியாதுன்னு சொல்ல முடியாதா?''

கண்களின் நீர்த்திரள் முத்தாகத் திரண்டு வந்தது. வலது கண்ணிலிருந்து வரியாய் வழிந்தோடிய நீர்...

''எப்படி முடியும், சொல்லு? குடியிருக்கிற வீட்டைத் தவிர வேறு சொத்துப் பத்து ஒண்ணுமில்லே. கூலிவேலையிலே வவுறு நனையுது. இதுலே அம்மாவுக்கும் சீக்கு. ஒரு

நாதியில்லாம நிக்கோம். 'பொண்ணைக் கரைசேக்காம போய்ச் சேர்ந்துருவோமோ'ன்னு பதறிப் பதறிப் பதைச்சு, அம்மா, நெதம் நெதம் அழுது புலம்புறா. 'இப்ப வந்த எடமே தங்கமான எடம்'னு அம்மா திருப்தியா இருக்கா. 'எப்படியோ மகளைக் கரைசேக்க கடவுளா பாத்து வழிபண்ணியிருச்சு'ன்னு சந்தோஷமா இருக்கா...''

''அதுக்காக பாழுங்கெணறுன்னு தெரிஞ்சும் வுழணுமா?''

''வேற வழி? நாதியத்த ஏழைக்கு வேற கதி ஏது?''

''அதுக்காக நீ இப்ப ஊமையாயிருந்துட்டா காலம் பூராவும் பொலம்பி அழணுமே!''

''ஆமா நெசந்தா. விதிப்பலனை நம்பி இருக்குறதைத் தவிர வேற வழியில்லியே... சொல்லு. அதை நினைச்சு நினைச்சுத்தான் எனக்கு என்னமோ மாதிரியிருக்கு... செத்துத் தொலைச்சிரலாமான்னு தோணுதுடி...''

''அப்படியெதுவும் கிறுக்குத்தனமா செய்ஞ்சு தொலைச்சிராதேடி... பாதகத்தி...''

''வேற என்ன செய்ய?''

விசும்புகிற சுப்புத்தாய். வாழ்வின் அவலத்தில் நிற்கிற பதினேழு வயசுச் சிறுமி. வறுமையின் நிர்ப்பந்தத்தில் கன்னிமையையும் வாழ்க்கையையும் தாரை வார்க்கவேண்டிய கொடுமை...

''இங்கே பாரு சுப்பு, 'மாட்டேன்'னு சொல்லிரு. ஒனக்கு வயசா போச்சு? இன்னும் ரெண்டு மூணு வருஷத்துலே ஒனக்கு ஒரு எடம் கிடைக்காமலா போயிரும்? ஏழைக்கேத்த ஒரு எள்ளுருண்டை இல்லாமலா போயிரும்? மனசைத் திடமா வெச்சுக்க. ஒரேயடியா மாட்டேன்னு சொல்லிரு...''

அவள் அப்படிச் சொல்லவில்லை சுப்பு, ஏழ்மையின் கைதியாய் கட்டுண்டு ஊமையாகிப் போனாள். இன்று...? நிரந்தரச் சூனியத்தில்... சாஸ்வத நரகத்தில்...

பூங்கிளிக்கு ஓவென்று அழணும் போலிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை என்றாலே வசந்தனுக்குப் பெரிய தொல்லை. தொழிற்சங்க வேலைகள் இருந்துவிட்டால் தெரியாது, ஜாலியாய் பொழுது போய்விடும். கமிட்டி கூட்டம் ஏதாச்சும் இருந்தால் அது ஒருவகையான இனிய தொல்லை. ஓடி ஓடியலையணும். வியர்க்க விறுவிறுக்கத் திரியணும். ஆனால் மனத்துக்கு இதமாயிருக்கும். வியர்வைப் பரவசம். ஆத்மார்த்த உழைப்பு.

இன்றைக்கு அதுவுமில்லை. வேலையற்ற பொழுதாய் விரையமாய் நகர்வது, பெரிய இச்சிலாத்தி. இந்த ஓடு போட்ட வீட்டிலிருப்பது அதைவிடப் பெரிய இச்சிலாத்தி. வேக்காடு என்றாலும் கூடுதலாயிருக்கும். வியர்த்துக் கொட்டும். கூடுதல் என்றாலும் கூடுதலாய் நடுக்கம் எடுத்துவிடும்.

காலை ஒன்பது மணியாகிவிட்டது.

அம்மா எட்டு மணிக்கே நச்சரித்தாள்.

''ஏலேய்... சாப்ட்டுக்கோ ராசா. அம்மா வேலைக்குப் போவணும்.''

மாறி மாறி நச்சரிப்பு. சாப்பிட அப்போது மனசில்லை. ''பெறகு சாப்ட்டுக்கிடுதேன். நீ போம்மா'' என்று சொல்லிவிட்டான்.

''புள்ளே... சாப்புடலியே... எப்பச் சாப்டுதானோ? சாப்பிடாமலேயே இருந்துருவானோ'' என்று மருகி மருகிப் புலம்பிய ராமலட்சுமி, அரை மனதாய் காட்டுக்குப் போய்விட்டாள்.

இப்போது வசந்தனுக்குப் பசிக்கிறது. சாப்பிடச் சோம்பேறித்தனமாயிருக்கிறது.

அடுப்பங்கரைக்குள் போகணும். வட்டிலை எடுத்துக் கழுவி... சோற்றுப் பானையைத் திறந்து...சோறுவைத்து, குழம்பு ஊற்றி, ரசம் எடுத்து வைத்து, தண்ணீர் மோந்து வைத்து...சாப்பிட்டு, எல்லாவற்றையும் கழுவி, மூடி வைத்து...அப்பாட்டா நடக்குற காரியமா?

வாத்தியார் ரத்தினவேலு வீட்டுக்குப் போகலாமா? அவரைப் பார்க்கிற சாக்கில் பூங்கிளியையும் பார்க்கலாமே? ஒரு வேளை சாப்பிடச் சொன்னால்...சாப்பிட்டு விடலாமே—

சரி, வாத்தியாரை என்ன காரணமாய்ப் பார்ப்பது? பார்ப்பதற்கு ஒரு காரணம் வேண்டுமே. அதை உருவாக்கணுமே...

யோசனையில் நிமிஷம் கரைய...யோசனையே நிமிஷ நீட்சியில் திசை மாறிவிட...எங்கெங்கோ சுற்றிக்கொண்டிருந்த கணத்தில்—

சட்டென்று அவனுள் ஒரு பளிச்...மின்னல் வெட்டாய் ஒரு ஒளியதிர்வு.

முந்தாநாளைய அவனது பரவச அனுபவம். வாழ்க்கையில் என்றும் அனுபவித்தறியாத அனுபவம்...

ஷிஃப்ட் முடிந்து... தொழிற்சங்க அலுவலகத்துக்கு வந்த வசந்தனிடம், ஏஜெண்ட் எடுத்து நடத்துகிற தோழர், 'செம்மலர்' தந்தார். அந்நேரம் நடந்து கொண்டிருந்த விவாத மும்முரத்தில் முழுக் கவனமும் குவிந்திருக்க, அந்த மாத இதழை வாங்கி அப்படியே பையில் வைத்துக்கொண்டான். புரட்டவேயில்லை.

வீடு வந்து சேர்கிறபோது மணி ஐந்து இருக்கும். ''ஏலேய்...ஒனக்கு ஒரு கடுதாசி வந்திருக்குடா'' என்றாள் ராமலட்சுமி.

''கடுதாசியா?''

''ஆமப்பா.... பொஸ்தகம் மாதிரி பெருசா இருக்கு...''

அவனுள் ஆர்வப் பரப்ரப்பின் ஊற்றெடுப்பு... அவனை அள்ளி விழுங்குகிற ஆவல்... கைகால் கழுவாமல், கைலியைக் கட்டாமல் வந்து பார்த்தான்.

காக்கிக் காகிதம் சுற்றிய ஒரு புத்தகம், தெளிவாய் இவனது முகவரி. இவனது சந்தா கட்டாமலேயே,தபாலில் ஒரு புத்தகமா? எப்படிச் சாத்தியம்? உள்ளுக்குள் புதிர். மகிழ்ச்சியும் பரவசமுமான புதிர்.

உடைத்தான். செம்மலர். அதே பிரதி!

அவனை அள்ளிய ஆர்வம் இப்போது இழுத்துக் கொண்டு சென்றது. ஆர்வமாகவே கரைந்து போய் விட்டான். எல்லையற்ற பரவசத்தில் அவன் கைகளில் நடுக்கம். உடம்பில் எங்கும் மெல்லிய அதிர்வோட்டம்.

பிரித்தான்... மடமடவென்று தாள்கள் சத்தமாய் புரள... ஒரு பக்கத்தில் இவனது கவிதை! வலது மூலையில் 'பேசு பெண்ணே' என்ற கறுப்புத் தலைப்பு இவனுள் ஜிவ்வென்று ஓர் உணர்வு. அவனுள் நூறு நூறு சிட்டுக்குருவிகளின் சிறகடிப்பு. ஆனந்தக் கும்மியடிப்பு!

6

வசந்தன் எழுதிய கவிதை.

முதற் பிரசுரம், அச்செழுத்தில் இவனது ஆத்மா. இவனது எண்ணம். இவனது லட்சியச் சிந்தனை. பரவசத் திணறலில் கண் நெரிபட்டது. கண்ணீரின் உறுத்தல்.

அதைப் படித்தான். பலமுறை படித்தான். பிரதியின் வேறுபக்கங்களைப் புரட்டமனமில்லாமல் அதையே ஒரு கிறுக்கன் மாதிரி திரும்பத் திரும்ப வாசித்தான். சுகமான கிறுக்குத்தனம்.

'ஆறுவது சினம்'
அவ்வை காலத்துக்கு
அவள் வார்த்தை வேதம்.
பெண்ணே,
வேதம் புதுமை செய்.
சமூகக் கோர ரூபத்தின்
அதட்டலிலும் மிரட்டலிலும்
அரண்டு கிடக்கிறாய்.
ஆறிப்போயல்ல...
அச்சக்குளிரில் ஊறி
அறியாமைக்கல்லாய்
உறைந்தே போய்விட்டாய்...
இமயத்துயரங்களை
இதயத்தில் சுமந்து
ஊமையாகி
அழக்கூடச் சுதந்திரமற்று
அரூபமாகியிருக்கிறாய்...
பெண்ணே,
உன் காலம் வேறு.

அவ்வை காலமல்ல...
பாரதியிடம் சுயம் தேடி
பாடம் படிக்க வா...
ரௌத்ரம் பழகு.
வெடிப்புறப் பேசு.
உன் தலைவிதியை
நீயே நிர்ணயம் செய்...''
கீழே 'பூ. வசந்தன்' என்ற இவனது பெயர்.

சந்தோஷம் என்றால் சந்தோஷம், அப்படிச் சந்தோஷம். ஊர் பூராவும் உலகம் பூராவும் ஓடணும். இதைச் சகலரிடமும் காட்டணும். ஆலைத் தொழிலாளி ஒருத்தனின் படைப்பு அச்சாகியிருக்கிறது என்பதைப் பிரபஞ்சமறியக் கத்தணும் போலிருந்தது.

அடக்கிக் கொண்டான். யாரிடம் காட்டினாலும் நல்ல ரியாக்ஷன் கிடைக்கணும். ''அப்படியா? ஓங் கவிதையா? பரவாயில்லியே...ஓங்கிட்டே இம்புட்டுத் திறமையா?'' என்ற பிரமிப்பு கிடைக்கணும்.

அது கிடைக்காது. அலட்சியமே பதிலாய் கிடைக்கும் அசிரத்தையாய்... ''இதுக்கு எம்புட்டு ரூவா கெடைக் கும்?'' என்று அற்பத்தனமே கேள்வியாய் மலரும். ச்சே!

இதை எத்தனை பேர் படிப்பார்கள். எத்தனை பேர் பாராட்டுவார்கள் என்கிற கற்பனை. சிறகு விரிக்கிற கற்பனையின் ஆகாயப் பயணம்.

இந்தக் கவிதை அவனுள் கருக் கொண்ட நேரம்... அவ்வையின் ஆத்திச் சூடியும் பாரதியின் ஆத்திச்சூடியும் வெவ்வேறு கால அலைகளாய் வந்து மோதிய தருணம். அந்தக் கால அலைகளின் பரிணாமமும் அதன் பரிமாண மும் இவனுள் பிரமிப்பான புதிய உணர்வுகளை எழுப்பிய நேரத்தில்—

பூங்கிளியின் நினைவு. ரத்தினவேலு சாரின் அதட்டலிலும் மிரட்டலிலும் பயந்து நடுங்குகிற பூங்கிளி. பயமே சுபாவமாய் மாறிப் போன பூங்கிளி. யாரிடமும் முழுசாய் ஒரு வார்த்தை பேச முடியாதவளாய் ஆகிப்போன அவலம். அதன் சோகம். அவள்பால் இவனுள் எழுந்த பரிவு. பாசம்...விருப்பம்.

இது...அவள் கவிதைதான். அவளைப் பற்றி கவிதை தான். இதில் 'பெண்ணே' என்று அழைக்கப்படுவது... பூங்கிளிதான்!

இதைப் பூங்கிளி உணர்வாளா? மனப்பரவசத்தில் கண்ணீர் உகுப்பாளா? என்னைப் பற்றிய பிரமிப்பான உணர்வில் திளைப்பாளா? இவனுக்குள் அலை அலையாய் நினைவுகள். ஏக்கமும் தாகமுமான நினைவுப்பெருக்கு.

வாத்தியார் உணர்ந்து விடுவாரா? ஐயையோ... என்ன நினைப்பார்? நன்றி கெட்ட பயலே என்று ஆத்திரப்படுவாரா?

இவனுக்குள் முரண்பட்ட நினைவுகள். பூங்கிளி இக் கவிதையின் உட்குரலை உணர்ந்து கொள்ள வேண்டும் வாத்தியார் உணர்ந்து கொள்ளக் கூடாது. இது சாத்தியமா?

வசந்தனுக்கு ரொம்ப பசித்தது. உணர்வுலகைவிட்டு வெளியே வந்தவுடன் பசியின் பிடுங்கல். அடிவயிற்றின் எரிச்சல். தண்ணீர்க் குடித்தான்.

வாத்தியாரிடம் காட்டலாமா? காட்டாமல் இருக்கலாமா? பெருமையும் பூரிப்புமான இந்த வெற்றியை எப்படி மறைப்பது? வாழ்வின் திசைகாட்டியான வாத்தியாரிடம் இதை மறைத்தால்...அவரை அந்நியராக நினைத்து ஒதுக்கியதாக ஆகிவிடாதா?

காட்டினால்...?

பூங்கிளி பற்றிய கவிதைதான் என்று புரிந்துகொள்ள இடமில்லை. பொதுமைப்படுத்தப்பட்டிருக்கிறது. பொதுவாகத்தான் எடுத்துக்கொள்வார்.

மனம் அப்படியே அசைபோட...பூரிப்பும் சந்தோஷமும் ததும்ப வெளியேறினான். அவனுள்—

விடுதலை உணர்வுடன் சிறகடிக்கிற பூங்கிளி.

ஊந்து கடந்து, வண்டிப்பாதைக்கு வந்தவுடன் தெரிகிற அந்தப் பெரிய காரைவீடு. போன வருஷம் 'பால் காய்ச்சிய' புதுவீடு. மொட்டைமாடிக்கான படிக்கூடு உயரமாய்.

ரிட்டையர்டான வாத்தியாரின் ஆயுட்காலச் சாம்பாத்தியம். பூங்கிளிக்கான நகைக்கு ஒதுக்கிய பணம் போக மீதி பூராவும் இந்த வீட்டுக்குத்தான். கொஞ்சம் கடன் கூட வாங்கியிருக்கிறார்.

வீட்டை நெருங்கியவுடன் அறுபட்டுச் சிதறுகிற கனவு. பரவசப்பட்ட மனசில் இப்போது வந்து உட்கார்ந்து கொண்ட பயம். வாத்தியார் பயம். மரியாதை கலந்த பயம்.

இந்த வீட்டில் அஸ்திவாரத்துக்குக் கருங்கல் தூக்கிக் கொடுத்ததிலிருந்து, பெயிண்டிங் வரைக்கும் சகல கட்டங்களிலும் படிந்துள்ள இவன் வியர்வை...

சுவருக்குச் செங்கல்லை நனைத்து நனைத்துக் கொத்தனாரிடம் தந்த நினைவுகள்...மணலைச் சலிப்பதற்குக் கூடை கூடையாக அள்ளிவிட்ட ஞாபகங்கள்... சென்ட்ரிங் முடிந்து இருபது நாட்களுக்குத் தண்ணீர் சுமந்து ஊற்றிய நாட்கள்.

மரம் எடுக்க, சிமெண்ட் எடுக்க என்று ஆத்திர அவசரத்துக்கு ஆலங்குளத்துக்கு ஓடிவந்த அனுபவங்கள்.

அவனுள் ஆழ்ந்த சுகமான பெருமூச்சு. வாத்தியார் இவனுக்குச் செய்திருக்கிற உதவிகளின் கால்தூசிகூடப் பெறாது இவனது உழைப்பு.

அடேயப்பா...... அவரில்லாவிட்டால் இவன் கதி? மம்பட்டி தூக்கிக் கூலிக்கு உழைக்கிற பிழைப்புதான் லபித்திருக்கும். இந்த உத்தியோகம், தொழிற் சங்கம், கலை இலக்கிய வாசிப்பு, கவிதைப் படைப்பு இதெல்லாமே வாத்தியார் ரத்தினவேலு போட்ட பிச்சை. ஞானப்பிச்சை, கல்விதானம்!

இன்றைய இவன், அவரின் லட்சியப்படைப்பு, அவரது பாச முயற்சியின் விளைவு. அவரது ஞான விளைச்சலாய் இவனது இன்றைய கவிதை.

வீட்டு வாசலில் நின்றான். கதர்க் கைலியும் கதர்த் துண்டுமாய் ஈஸி சேரில் வாத்தியார். ஏதோ யோசனையில் வெறித்த பார்வையில் உறைந்த நிலையில்...

''சார்...இருக்கீகளா?''

நினைவுகளை உதறிய சிலிர்ப்பில் சலனமுறுகிற அவரது சிவந்த தேகம். நெஞ்சுக்கூட்டு ரோமங்களில் வெள்ளை மின்னல்கள்.

''வாப்பா...வா... இன்னிக்கு வேலைக்குபோவலியா!''

''இல்லே சார், ஞாயித்துக்கிழமை...''

''ஆமாமா...இன்னிக்கு உனக்கு லீவ் தானே? உக்காரு. அந்த சேரை இழுத்துப்போட்டுக்க...''

பல்யமாக சேரைத் தூக்கிச் சத்தமில்லாமல் போட்டான். ஒடுக்கமாய் உட்கார்ந்தான்.

''என்ன விசேஷம் வசந்தா? அம்மா எங்கே போருக்கா?''

''கூலிவேலைக்குத்தான் சார்...சொன்னாக் கேக்க மாட்டேங்குறா. 'வீட்டுல இரும்மா... வேலைக்குப் போக வேண்டாம்'னு சொன்னா, காதுலேயே போட்டுக்க மாட்டேங்கறா.''

''அது ஒழைச்ச கட்டை. உக்காந்திருக்கச் சம்மதிக்காது. 'கொத்திக் கண்ட கோழியும் நக்கிக் கண்ட நாயும் சும்மாயிருக்காது'ம்பாக. அப்படித்தான் ஒழைச்சுப் பழகிப்போன ஒடம்பும்...''

''அப்படியிருந்துட்டாலும் பரவாயில்லியே. அவா ஒரு 'நொள்ளைச் சொல்லு' சொல்லிக்கிட்டுல்லே வேலைக்குப் போறா சார்...''

''என்ன சொல்லு சொல்லுதா?'' எதையோ எதிர் பார்த்து ஒரு மென்னகை வந்து உட்கார்கிறது அவரது உதட்டில். நரையும் கறுப்புமான கொத்துமீசை அதற்கேற்ப விரிந்து நீள்கிறது!

''கல்யாணத்துக்குப் பெறகு நா அம்மா பேச்சைக் கேக்கமாட்டேனாம். 'வாய்ச்ச கழுதை வாய்க்குக் கஞ்சி ஊத்தாம காயப்போட்டுட்டா, அன்னிக்கும் கொத்து வேலைக்குத்தானே போகணும்? அதனாலே எப்பவும் போல நா இப்படியே பாடுபட்டுட்டுப் போறேன்'ங்கிறா சார்...''

ரத்தினவேலு ஏதோ ஜோக்கைக் கேட்டவர் போல பலத்த வெடிச்சிரிப்பாய் சிரித்தார். அண்ணாந்து சிரிக்கிற சிரிப்பின் அதிர்வில் குலுங்குகிற வயிறு...விரிந்து விலகுகிற வயிற்றின் குறுக்குச் சுருக்கங்கள்.

''அதுவும் சர்த்தானப்பா...அவா சொல்றதும் ஞாயம் தானப்பா'' என்று சிரிப்பின் சமன்நிலைக்கேற்ப சிதறி ஒலிக்கிற அவர் குரல்.

இவனுள்ளும் ஒரு கூச்சச் சிரிப்பு...மெல்லிசாய் புண்படுகிற உணர்வை ஏமாற்றிக் கொள்கிற கூச்சம்.

''என்ன சார், நீங்களும் இப்படிச் சொல்றீங்க?''

''வருத்தப்படாதே வசந்தா...நீ நல்லவன்தான். பாசக்காரன்தான். ஆனா, மனுசக்கழுதை மனசு எப்ப, எப்படி'ஓடும்னு யாரு கண்டா?''

''இல்லே சார்...''

''சரி...அதை விடு. அதது போற பாதையிலே, அப்படியப்படி போகட்டும். பிறவிக்கொணத்துக்கு மட்டை வெச்சுக் கட்ட முடியாது.''

சிரிப்புச் சத்த அதிர்வலையில் ஈர்க்கப்பட்டு உள்ளிருந்து எட்டிப் பார்த்த பூங்கிளி...மாம்பழக்கனிவில் ஒரு குளிர் வெளிச்சம். அந்திச் சூரியனின் ஒளி பரவல். இவனுள் ஜிவ்வென்று சிறகடிக்கிற ஓர் உணர்வு, கண்ணைக்கட்ட முடியாத திண்டாட்டம். 'சலனத்தை சார் கவனிச்சிருவாரோ...'உள்ளுக்குள் எறும்பு கடிக்கிற உணர்வு. எச்சரிக்கையில் பார்வை விலகுகிற பதற்றம். தட்டான் சிறகுகளாய் அடித்துக் கொள்கிற இமைகள்.

இவனுள் இப்போது வேறொரு சங்கடம். உள்குறுகுறுப்பு...கையிலிருக்கிற மாத இதழை எப்படிக் காட்ட? என்ன சொல்லிக் கொடுக்க? தம்பட்டம் என்று நினைப்பாரோ? அவனுள் பின்னிப் பிணைகிற ஆர்வமும் தயக்கமும்...மனசுக்குள் மாரீசமானாய் ஓடுகிற நினைவுகள்... புத்தகத்தைக் காட்டுவதற்கான உரையாடலை எப்படித் துவக்கி, எப்படி நகர்த்துவது என்கிற யோசனைகள். பிடிபடாமல் கண்ணாமூச்சிக் காட்டுகிற கற்பனைகள்...

''என்னப்பா...கையிலே பொஸ்தகம்?''

''இது ஒரு இலக்கியப் பத்திரிகை சார்.''

''அப்படியா? என்னமும் விசேஷமா?''

''ஒண்ணுமில்லே சார்...''

அவனுள் தயக்கம். அச்சம். அதைப் பொய்யாக்குகிற குறுஞ்சிரிப்பு, சிரிப்பின் உள்மர்மமாய் முண்டும் ஒரு தகவல்.

''ஏதோ இருக்கு போலிருக்கே...''

அவனது தயக்கத்தை உடைக்கிற அவரது உசுப்பல்.

''ஆமா சார்...ஒரு கவிதை...''

''யார் எழுதியிருக்கிறது?''

''நா...ந்தான், சார்.''

''நீயா?''

''ம்...சார்—''

''நெசம்மாவா?''

''ஆமா...சார்...''

''எங்கே பாப்பம்...''

நீள்கிற அவரது கை. அவனது ஞானத்தந்தை போஷகர். இவனுள் ஜிவ்வ் விடுகிற சிட்டுக்குருவிகள் ஆனந்தப்பரவசம். பரவசக் குழப்பம்.

''படிச்சிட்டுத்தாரேன்...''

''வெச்சிக்கங்க சார்...ஏங்கிட்டே இன்னொரு காப்பி இருக்கு.''

பூங்கிளி படிப்பாளா? என்ன நினைப்பாள்? இவனைப் பற்றித் த்ப்பாக நினைப்பாளா? உள்மனசை வாசித்து விட்ட இவனது அன்பில் பரவசமடைவாளா?

வாத்தியார் ரத்தினவேலு வாசலில் உட்கார்ந்திருந்தார். மாலை மணி அஞ்சாகி விட்டது. பால் பீய்ச்ச சொஸைட்டிக்குப் போகிற மாடுகள். அந்திச் சூரியனின் நிறம் மாறிய முகம்.

உள்ளிருந்து சின்னச் சின்ன சத்தம். ஏதோ சொல்ல முனைகிற பயந்த சத்தம். துணிப் பொட்டலம் கட்டிக் கிடந்தது. சோப்பு டப்பா பக்கத்தில். பூங்கிளி பயமும் குழப்பமும் பின்னிக்கிடக்கத் திகைத்து நிற்றாள்.

''என்ன...?''

''குளிக்கப் போகணும்ப்பா...'' தொண்டைக்குள் சத்தமாய் அவள் குரல்.

''கூட யாரு வர்றது?''

''செல்லம்.''

''ம். போயிட்டு சீக்கிரம் வந்துரு.''

''ஆகட்டும்பா...''

அதற்குள் அவளுக்கு வியர்த்து விட்டது. தொடைகளில் நடுக்கம். உள் எலும்பே உருவிக்கொண்ட மாதிரியான ஒரு பதற்றம். நெஞ்சுக்குள் நெரிபட்டுத் திணறிக் கொண்டிருந்த ஏதோ ஒன்று விடுபட்ட மாதிரியான ஆசுவாசம். அம்மாடா என்றிருந்தது. பொட்டலத்தை எடுத்து இடுக்கிக்கொண்டு, காலில் செருப்பை மாட்டிக் கொண்டாள். வெளியேறிய அவள்மீது விழுந்த சாயங்கால வெயில் அவள் நிறத்துக்கு முன்னால் நிற்க முடியாமல் வெட்கப்பட்டது.

செல்லமும் வந்து கொள்ள, நடை துரிதப்பட்டது. மதிய கரண்ட்...பொழுதடைகிற வரைக்குத்தான் த்ரீபேஸ் கரண்டிருக்கும். அதற்குள் குளித்தால்தான் உண்டு. முடியுமா? துணிகளை சோப்புப் போட்டு அலசிப் பிழிந்து, குளித்துவிட நேரம் இருக்குமா?—

''வாடி...வெருசாப் போவம்...நேரமாச்சு...''

''ஏண்டி, இப்படிப் பதறிச்சாகுறே? உங்கப்பா என்ன, உன்னை அடிச்சா கொன்னுடப் போறாரு?''

''அதுக்கில்லே செல்லம்...கரண்டு நிக்குறதுக்குள்ளே குளிச்சாகணுமே.''

''சரி, சரி...நடையை எட்டிப் போடு...

செல்லம் என்னமோ அந்தரங்கமாய் சொல்ல வந்தவள், அடக்கிக்கொண்டாள். அந்தரங்கத்துக்குரிய முக்கியத்துவம் கொடுத்துக் கேட்கிறநிலையில் பூங்கிளி இல்லை. காலில் சக்கரம் கட்டிக் கொண்டு திரிகிறாள்.

காடுகளில் அவ்வளவாக ஆள் இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாய் தண்ணீர் பாய்ச்சுகிற ஆட்கள் மட்டும் தான். அதுவும் இடுப்பளவு உயரத்துக்குக் கம்மம் பயிர். கரும் பச்சையாய் புகை படிந்த நிறமாய் கம்மம் பயிர்கள். பணி பிடிக்காத பூங்கதிர்கள் காற்றுக்கு ஆடிக்கொண்டிருந்தன.

நடை நடையாயிருக்க, பூங்கிளி உள் உலகத்துக்குள் நடந்து கொண்டிருந்தாள்.

வசந்தன் எழுதியிருந்த கவிதை. அவன் கவிதை பிரசுரமாகியிருந்த விஷயமே அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'இந்த ஆளுக்கு இதெல்லாம் தெரியுமா? அப்பா பின்னாடியே ஆட்டுக்குட்டிக் கணக்கா ஓடிக்கிட்டிருக்கிற ஆளுக்கு இம்புட்டு வெவரம் உண்டா?'

அவளுள் ஏளனமான ஆச்சரியம். கவிதையைப் படித்தால்...எங்கோ ஆழத்தில் மயிலிறகால் நீவுகிற உள் கூச்சம். புல்லரிப்பான கூச்சப் பரவசம். அம்மாவே தன் மிருதுவான கரத்தால் கூந்தலையும் முதுகையும் வருடி விடுகிற உணர்வு.

'அதட்டலிலும் மிரட்டலிலும்...'

இது தன்னைப் பற்றித்தானா? பூங்கிளி என்ற பெண்ணைப் பற்றித்தானா? என்மீது இவனுக்கு இத்தனை கரிசனமா? அன்பா? அரண்டு மிரண்டு ஒடுங்கிக் கிடக்கிற என் சுபாவம் பற்றி இவனுக்கு இத்தனை அக்கறையா? இவனிடம் இத்தனை நுணுக்கமா?

'வெடிப்புற பேசு' என்கிறானோ. எனக்கு அன்பாக வேண்டுகோள் விடுகிறானா? யாரை எதிர்த்துப் பேச? அப்பாவையா? அப்பாவின் கைத்தடியாய் அலைகிற அவனே இந்த வேண்டுகோள் விடுகிறானா?

அப்படீன்னா... அப்படீன்னா...?

அப்பாவின் மீது அவன் கொண்டிருக்கிற பயத்தைவிட என்மீது அவன் கொண்டுள்ள கருணை கூடுதலானதா? உன்னதமானதா? உண்மையானதா?

வசந்தனைப் பற்றிய அவளது மதிப்பீடு உடைந்து கலகலத்து... அவளுள் எழுகிற புதிய மதிப்பீடு...

ஓடையைக் கடக்கிறபோது, தூரத்தில் பொட்டல் தரிசில் செம்மறியாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. காய்ந்த கரடுகளை நக்கிக் கொண்டிருக்கிற ஆடுகள். பக்கத்தில்-

கம்பை ஊன்றி, அதன்மேல் உடலின் பாரம் முழுவதையும் சாத்திக் கொண்டு நிற்கிற சின்னான், பாவம், பாட்டைப் பறிகொடுத்துவிட்டு ஊமையாகிப்போனவன்.

பூங்கிளிக்குள் முனியம்மாவும் சின்னானும் சேர்ந்து கிடந்த அந்தக் காட்சி... பாவம் முனியம்மா... போட்ட சண்டைகள் யாவும் தோற்றுப்போய்விட, பலியாடாய் வாழ்க்கைப்பட்டுப் போனவள். அடைமழைச் சாரலின் மங்கலான திரையில் வண்ணச் சோக ஓவியமாய் வண்டிப் பாதையைக் கடந்து வந்த காட்சி. டக்கரில் ஏற மனசில்லாமல் தயங்கி நிற்க, "ஏறு ஏறு... டக்கர்லே ஏறு"

என்று குட்டியைப் பத்துகிற மாதிரி துரிதப்படுத்திய மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள்.

கிணற்றில் பம்ப்ஷெட் ஓடிக்கொண்டிருந்தது. நல்லவேளை, ஆண்கள் யாரும் இல்லை.

பூங்கிளிக்குள் ஒரு கனம்... அதன் அழுத்தம்.

ஒரு பொம்பளையோட ஆசைக்கு என்ன மதிப்பு? சொல்லிச் சண்டை போட்டால்கூட அதுக்கு என்ன மரியாதை? மனசில்லாம ஒருத்தன் கூட வாழ்ற வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? சவ வாழ்க்கை... ச்சே!

7

பூங்கிளி பொட்டலத்தை அவிழ்த்து மாற்றுத் துணிகளைத் தனியே எடுத்து வைத்துவிட்டு, மிச்சத் துணிகளை தொட்டி நீருக்குள் அமுக்கி நனைத்தாள். செல்லமும்தான்.

செல்லம் ஒரு துணிக்கு சோப்பு போட்டுக்கொண்டே சொன்னாள்: ''ஏய் ஒனக்கு விஷயம் தெரியுமா?''

''என்ன?''

''முனியம்மா நேத்து வந்துட்டாளாம்...''

''சும்மா வந்திருப்பா... பெத்தவ வீட்டுக்குப் பொண்ணு வர்றது ஒரு அதிசயமா?''

பூங்கிளி அப்படிச் சொன்னாலும், உள்ளுக்குள் நறுக்கிடுகிற உணர்வு... ஏதோ ஒருசோகத்தை எதிர் கொள்கிற மனத்துடிப்பு.

''சும்மா வரலை...''

''பெறகு?''

''கோவிச்சுக்கிட்டு வந்துருக்கா...''

''அப்படியா? அதுக்கென்ன... குடும்பம்னு இருந்தா கோபதாபம் வராமலா இருக்கும்?''

''அப்படியில்லே...இது வேற வெவகாரம்...''

''என்ன வெவகாரம்?''

இவளுள் ஏனோ திக்...திக்கென்றது.

''ரொம்பச் சண்டைச் சத்தம் போலிருக்கு. புருசக்காரன் போட்டு அடிஅடின்னு அடிச்சிருப்பான் போலருக்கு...''

''ஏன்...என்னவாம்?''

''தெரியலை...''

''ஏதும் தப்புக்கிப்புப் பண்ணிட்டாளா?''

''தப்புக்கிப்புன்னா?''

''மப்பேறிப்போன பொம்பளைக செய்ற தப்புதான்...''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே... அதெல்லாம் சுத்தமாத்தான் இருந்துருக்கா. முனியம்மா அப்படிப் போறவளா? அவா தடத்துடலே நடந்து போறவளுக்குக் கூட அந்தப் புத்திவராதே...''

''அப்படியா?'' என்று எதிரொலித்த பூங்கிளிக்குள் ஏளனம்...செல்லத்தின் அப்பாவித்தனத்தின் மீதான இளக்காரம். முனியம்மாதடம் என்னவென்று இவனுக்கல்லவா தெரியும்...

தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த சிறுவன், வாய்க்கால் நீர் நாலா பக்கமும் தெறித்துச் சிதற 'தொப் தொப்' பென்று ஓடிவந்தான்.

''எக்கா பாய்ச்சல் முடியப்போவுது... குளிக்குற துன்னா சீக்கிரமா குளிச்சிருங்க...''

அவ்வளவுதான்... முனியம்மாவைப் பாதியில் விட்டு விட்டு அவசர அவசரமாய்க் குளித்து முடித்தனர். 'அவக் அதாவக்'கென்று குளித்து முடித்துவிட்டு, நிதானமாய் வண்டிப் பாதையில் இருவரும் நடக்க...செல்லம் அடங்கிய குரலில் முனியம்மாவைச் சொல்லச் சொல்ல... பூங்கிளிக்குள் வேதனையும் மலைப்பும் படர்ந்தது!

அது ஒரு வறண்ட கிராமம், சுற்றிலும் வேலிக்கு வேலி மரங்களைத் தவிர, ஒரு பச்சைப் பரப்பைப் பார்க்க முடியாது. காடுகரையெல்லாம் தீப்பிடித்து வெந்து முடிந்த மாதிரி கனல் பறந்தது.

பருத்தி எடுக்கப் போய்விட்டு வந்தாள் முனியம்மா. நாயக்கர் புஞ்சை. ஓய்ந்துபோன பருத்திக்காடு, இலையெல்லாம் தேன்நோய் விழுந்து நிறம் மாறிக் கிடந்தது. காய்ந்த சாணம் கெட்டுப்போய் சம்சாரி பிழைப்பைப் போலவே...

கூடப் பருத்தியெடுத்த பெண்கள், பின்னால் நின்று தாமதிக்க...முனியம்மா மடமடவென்று நடந்தாள்.

முனியம்மாவுக்கு மனசெல்லாம் கிடந்து சலித்தது. ஓடி ஓடிக் குனிந்து பருத்தி எடுத்து இடுப்பெல்லாம் வலியெடுக்கிறது. குறுக்கெலும்பில் உளைச்சல்.

இனி வீட்டிலும் வேலை, வேலை, வேலைகள்தான். உஸ்ஸென்று உட்கார என்னவோ போலிருந்தது. நெஞ்சுக்குள் முட்டிக்கொண்டு வருகிற உணர்வுத் திமிறல் கண்களில் ஈர உறுத்தல்.

துப்புக்கெட்ட பொழைப்புலே வந்து மாட்டிக்கிட்டோமே என்று மனசு கிடந்து மாய்ந்தது.

ஆத்தாளை நினைத்துத்தான் ஆத்திரம் அரளிக் கொட்டையை அரைத்து கிளாஸில் வைத்துக்கொண்டு ஆத்தா அழுத அழுகை...கோபமும் குமுறலுமாய் அவள் வடித்த கண்ணீர். வெறிபிடித்துச் சண்டை போட்ட இவளை ஊமையாக்கி ஒடுக்கிய ஆத்தாவின் கதறல்'

கூழைக் குடிச்சாலும், குடிக்கக் கூழ் இல்லா விட்டாலும், அன்பான வார்த்தை சொல்ற புருசன் இருக்க வேண்டாமா? என்ன ஏது என்று கேட்டு அக்கறைப்படுகிற துணையாயிருக்க வேண்டாமா?' இல்லையே...

புருசனும் அந்நிய மனுசனைப் போல ஒட்டியும் ஒட்டாம இருக்கானே...அவளுக்குள் கவலை நிறைந்த எண்ணங்கள்...

கல்யாணம் முடிந்த புதிதில் நன்றாய்த்தான், இருந்தான். வெள்ளையும் சொள்ளையும் உடுத்த, கொஞ்ச, கெஞ்ச என்று உருகி வழிந்தான். அடிக்கடி கோவில்பட்டிக்கு டவுன் பஸ்ஸில் கூட்டிக்கொண்டு போவான். 'கிளப்' கடைகளில் சாப்பிடச் சொல் வான்.

இவள் மறுத்துச் சிணுங்குவாள்.

''வேண்டாம்...''

''ஏன் முனி...?''

''இம்புட்டு ஆளுக மத்தியிலே, இப்படி எடத்திலியா? ஆத்தாடி...நாமாட்டேன்...''

குறுஞ்சிரிப்பாய்ச் சிரித்து. காதுக்குகிட்டே வந்து கிசுகிசுத்தான். இவள் 'சே' என்று பூரித்துச் சிரித்தாள். வெட்கம் பிடுங்கித்திங்க, பெருமையும் சந்தோஷமும்

அள்ளிக் கொண்டுபோக...சிறுமியைப் போல நாணச்சிரிப் போடு நெளிந்தாள்.

"அது வேற...இது வேற..."

"போ கழுதை...கூச்சப்பட்டா ஒண்ணும் நடக்காது. வா..."

வற்புறுத்தினான்.

கோவில்பட்டியே அவளுக்குப் புது உலகம். பார்த் திராத உலகம்...சின்னப் பிள்ளையாய்-ரொம்பச் சின்னப் பிள்ளையாய் இருந்தபோது, மாட்டு வண்டியில் ஆட் களோடு இருக்கன்குடி மாரியம்மா கோயிலுக்குப்போனது... அரிச்சலாய் ஞாபகத்தில் இருக்கிறது ரொம்ப மங்கலாய்...

வரிசை வரிசையாய் பஸ்கள் ஒன்றையொன்று முட்டிக்கொண்டு, உரசிக்கொண்டு, விலக வழியில்லாமல் 'வீய்ய் வீய்ய்'யென்று விசிலடித்துக்கொண்டு நிறைய பஸ்கள், லாரிகள், வேன்கள்...அடேயம்மா, இமைத்து முழிப்பதற்குள் எத்தனை (ஸ்)கூட்டர்கள்...

ரோடெல்லாம் ஜனக்காடு. விலக இடமில்லை. ரோட்டின் மறுபுறம் பெரிய பெரிய ஓட்டல்கள். ரொட்டிக் கடைகள், புத்தகக் கடைகள், பிஸ்கெட் கடைகள், சேவுக் கடைகள்.

சேவுக் கடைதான் இவளை ரொம்ப ரொம்ப அசத்தும். வட்ட வட்ட இரும்புத் தட்டில் ஆள் உயரத் துக்கு காராசேவு, மஞ்சள் மசேரென்று. அப்படியே வாய் வைத்துத் திங்கணும் போலிருக்கும். செங்கல் சுவர் மாதிரி தேன் கலரில் வரிசை வரிசையாய், உயரமாய் அடுக்கி வைத் திருக்கிற மைசூர்பாகு...பெரிய பெரிய ஈ வந்து வட்ட மடிக்கிற சீனிமிட்டாய், வட்ட வட்ட உய்ரமாய்... கருப்பட்டி மிட்டாய்...

அதை எப்படித்தான் அம்புட்டு லட்சணமாய்—வட்டமாய்—உயரத்துக்கு—அடுக்க முடியும் என்பது இவளுக்குப் பிடிபடாத மர்மம்.

இவளது ஆச்சரிய அறியாமையைச் சொல்லிச் சொல்லி ராக்கப்பன் சிரிப்பான்.

'''மிட்டாய்க் கடையைப் பார்த்த பட்டிக்காட்டான்'னு சொல்றது ஞாயம்தான் போலிருக்கு...சேவுக் கடையைப் பாத்தே இப்படி வாயைப் பொளக் குறியே...'' என்று கேலி பண்ணுவான்.

பதிலுக்கு இவள் ராக்கப்பனைக் கேலி பண்ணுவாள். ''கெணத்துக்குள்ளே எறங்கிக் குளிக்க முடியாம முழி முழின்னு முழிச்சது, அயத்துப் போச்சாக்கும்?''

''அது வேற...''

''என்ன வேற? பத்து வயசுப் பொட்டைப் புள்ளை கூடக் கெணத்துக்குள்ளே முங்குநீச்சு அடிச்சுட்டு வரும்... நீரு... முழுத்த ஆளு... கல்யா...ண மாப்பிள்ளை... திருதிருன்னு முழிக்கலே...?''

ஓட்டல்களே சொர்க்கமாய்த் தெரியும். ஒரு புது உலகமாய் இருக்கும். சுவரில் அடித்திருக்கிற கலர் பெயிண்ட்டே ஓட்டல் முழுவதும் ஒளியாய்ப் பரவ... இவளுக்கு 'இதென்னடா எழவு, இப்படி கலர்லேயுமா லைட் போடுவாக...' என்று ஒரே திகைப்பு.

சினிமாவுக்கும் கூட்டிக்கொண்டு போவான். நல்ல சினிமா, கெட்ட சினிமா என்ற கணக்கேயில்லை— சினிமா...அவ்வளவுதான்! உள்ளே ஜோடி சேர்ந்து உட்கார்வது, சில்மிஷம் செய்வது...காதோரத்தில் வந்து வந்து குறும்பாய்க் கிசுகிசுப்பது...வெட்கிக் குலுங்கி அவள் சிணுங்குவதை ரசிப்பது...

புதிய ஊரின் பக்கத்துவீட்டுப் பெண்களுடன் சிநேகம் கொள்வதற்கே இந்த சினிமாதான் ரொம்பப் பிரயோஜனம். சாயங்கால வேளைகளில் நாலைந்து பேராய் வீட்டு வாசலில் உட்கார்ந்து கொள்வார்கள்.

''ஏய்... புதுப்பொண்ணு... புது சினிமா என்ன பாத்தே?''

இவள் சொல்வாள்...

''கதை சொல்லுடி...'' என்பார்கள். கதை சொல்லிச் சொல்லித்தான் நட்பே மலர்ந்தது. அக்கா, மயினி, அத்தை என்ற உறவே பிடிபட்டது.

கூடிப்பேசிக் கொண்டிருக்கிறபோது ராக்கப்பன் வருவான். வீட்டுக்குள் போவான். அங்கிருந்து கூப்பிடுவான்.

''ஏய் முனியம்மா...இங்க வா...''

அதில இவளுக்கு ஏகப் பெருமை. 'தன் மீது புருசனுக்கு அம்புட்டுப் பிரியம். தான் புருசனுக்கு அம்புட்டு அத்யாவசியம்' என்பதையெல்லாம் உணர்த்துகிற பெருமிதத்தோடு சுற்றிலும் இருக்கிற பெண்களைப் பார்ப்பாள். ''இந்தா வாரேன்...'' என்று இவள் உள்ளே போக, பெண்கள் விடுகிற பெருமூச்சு கேட்கும்...ரொம்பச் சந்தோஷமாயிருக்கும்...அப்படி இருந்த ஆள் தானே?

பொழுதுக்கால் சாய்ந்த நேரம்... நிழல்கள் நீளநீளமாய்க் கிழக்கில் விழுந்து கிடந்தன.

''பெறப்புடு, பெறப்புடு...'' என்று முனியம்மாவைத் துரத்திக் கொண்டிருந்தான். 'டவுன் பஸ்ஸுக்கு நேரமாகிறது' என்கிற அவசரம் அவனுக்கு.

''இந்தா வாரேன்...இந்தா வாரேன்...'' என்று உள்ளிருந்து பதில் தருகிற முனியம்மா...

"இம்புட்டு நேரமா, சீலை கட்ட?"

"நா என்ன செய்ய? எல்லாம்... நீரு பண்ற கொடுமை..."

இவனுக்குள் குறுஞ்சிரிப்பு. மனசெல்லாம் நனைந்து சிலிர்த்துப் போகிற பரவசம். நிஜம்தான்! துணிமாற்ற உள்ளே போயிருந்தாள் முனியம்மா. வேண்டுமென்றே உள்ளே நுழைந்தான் அவன்.

அவள் பதறியடித்து 'ஆ...ஊ...' என்று அலற, அதுவே இவனுக்கு மோக அழைப்பாக ஒலிக்க...

'சீ...தூ...' என்று எம்புட்டோ அவள் திமிறத் திமிற அதுவே இவனுள் சவாலாய்—வெறியாய் மாற...புதுக் கல்யாண ஜோடி.

ஆக... மறுதடவையும் குளிக்க வேண்டியதாயிற்று முனியம்மா. ஆயிற்று, எல்லாம் ரெடியாகி அவள் வெளியே வந்தாள்.

வெற்றி பெற்ற கெளிமிதமும் குறும்பும் மின்னச் சிரித்த ராக்கப்பன், "என்ன?" என்று அர்த்தம் நிறைந்த கேள்வியாய்க் கேட்டான்.

அவள் முகமெல்லாம் மலர்ச்சி. பூவின் மின்னல். வெட்கமும் சிணுங்கலும் உள்பரவசத்தின் வெளிமுகங்களாய்... "ச்சே... நேரங்காலம் தெரியாத ஆளு... வெவஸ்தை வேண்டாம்? பட்டப் பகல்லேயா...யாரும் பாத்தா, உசுரே போயிருக்கும்..."

"எதுக்கு உசுர் போகணும்? பாத்தவுகளும் அனுப்விச்சதுதானே? நாமதா அதிசயமாக்கும்?"

"அதுக்காக? ஒரு வரைமுறை வேண்டாம்...ஆடு, மாடா?"

"சரி...சரி...பெறப்புடு..."

இவன் காலில் செருப்பை மாட்டுகிறபோது, வாசலில் ஒரு சின்ன நிழல். பயந்து பயந்து நுழைகிற பாவாடைச் சிறுமி. அவளைப் பார்த்ததும் ராக்கப்பனுக்குள் திகில். சட்டென்று முகம் அரண்டுபோய்க்கறுத்தது. மகிழ்ச்சியின் உச்சத்திலிருந்தவன், பயங்கரத்தின் கையில் சிக்கிக்கொண்டான். பயமும் தயக்கமுமாய் "என்ன?" என்றான்.

''ராமக்காவுக்கு நெஞ்சு வலிக்காம்... தாங்கமுடியலையாம்...

''அதுக்கு... நா என்ன செய்ய?''

''நீங்க வரணுமாம்... கட்டாயம் வரணுமாம்... சொல்லி அனுப்பிச்சாக...''

அம்புட்டுத்தான். ஒரு சுமையை இறக்கிய உல்லாசத்தில் தட்டானாகச் சிறகடித்துப் பறந்து போய்விட்டாள் சிறுமி. சுமை, இடம் மாறிக் கொண்டது.

வெலவெலத்துப்போன ராக்கப்பனின் முகத்தில் மருட்சியும் திகைப்பும்... பயத்தில் அலைபாய்ந்து தவிக்கிற கண்கள்...

மாற்றமான அவனது முழிப்பாட்டத்தையும் செய்தி வந்த தோரணையிலிருந்த பழைய உறவின் வாசத்தையும் உணர்ந்து கொண்டாள் முனியம்மா. அவளுள் நூறு நூறு பூரான்கள்... ஊர்ந்து நகர்கிற தேள்கள்...

அவளுடைய ஆவேசமும் கொதிப்பும் தகித்தன. கோபமாய் வெடித்தாள்

"யார் அவ, ராமக்கா?''

''அது... அது... வந்து... வேறொண்ணுமில்லே... சும்மா...''

''ஏஞ்சக்களத்தியா? இப்படியொருத்திகூட சகவாசம் வெச்சுக்கிட்டு, என்னை எதுக்கு மூய்ச்சீக?''

"இல்லே முனியம்மா... இதுவேற..." என்று தடுமாறினான். பதறிப் பதைத்தான். "சத்தம் போடாதே, கேவலம்..." என்று வாயை அடக்கினான்.

இப்படித்தான் அந்தப் பூதம், விவகாரமாய் வெளிப்பட்டது.

"போகப் போறீகளா?"

"இல்லே... இனிமாட்டேன். அந்தத் திசையிலேகூடத் தலைவெச்சுப் படுக்க மாட்டேன் முனியம்மா..."

ராக்கப்பன் பயந்து, தவித்துச் சமாளித்ததெல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான். போனான்... வந்தான்... இருந்தான். நிலைமை நீசமாயிற்று.

அப்புறம்தான் இவளுக்கு விஷயமே தெரிகிறது. விசாரிக்க விசாரிக்க, வேதாளம்வேதாளமாய்க் கதைகள்...

புருஷனைப் பறிகொடுத்து, ஒரு பிள்ளையையும் சாகக் கொடுத்துவிட்டு, சொந்த பந்தங்களைப் பகைத்துக் கொண்டு, காடு கரையும் சொந்த வீடுமாய் ராமக்கா தனி மனுசி. வயது முப்பத்தைந்து. இவனைவிடப் பத்து வயது மூப்பு. அவளோடு இவனுக்கு மூன்று வருஷமாய்த் தொடர்பு...

கல்யாணத்துக்காகத் தற்காலிகமாய் நிறுத்தப்பட்டிருந்த உறவுதான், இப்போது மறுபடியும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

முனியம்மாவுக்குத் தீப்பற்றிக் கொண்ட மாதிரியிருந்தது. "இது நியாயமா?" என்று வெறியோடு கேள்வி கேட்டாள்.

"ஞாயமில்லே... ஆனா, வேற வழியில்லே..."

"நீ மனுசந்தானா?"

"என்ன செய்ய? அவா விடமாட்டேங்குறாளே?"

"அப்ப... நா யாரு?"

"யாருன்னா?"

"ஒமக்கு நா யாரு? தேவிடியாளா, பொண்டாட்டியா?"

"எப்படி வேணும்னாலும் வெச்சுக்க... இருக்கணும்னா இரு. இல்லேன்னா போ..."

"அப்புறம் எதுக்கு என்னைப் பெண் பார்க்க வரணும்?"

அவ்வளவுதான்... ஓங்கிய கை மாறாமல் பளார் என அறைந்தான்.

"பொட்டைக் கழுதை... வாயா பேசுதே? நா ஆம்பளைடீ... எப்படி வேணும்னாலும் இருப்பேன்..."

"ஆம்பளைக்கென்ன கொம்பா மொளச்சிருக்கு? பொம்பளை என்ன எட்டு மாசத்துலேயா பொறக்க?"

"ஆம்பளை ஆம்பளைதாண்டி... பொட்டச்சி பொட்டச்சிதாண்டி..."

அடி அடியென்று அடித்துப் போட்டு விட்டான். வீடு நரகமாயிற்று. ராக்கப்பனின் அம்மா, அய்யாவும் அவனுக்கு சப்போர்ட். ராமக்காவின் வீடும் காடு கரையும் சொத்தாகச் சேரும். அதற்காக பிள்ளையைப் பெற்றுக் கொடுக்கிற வேலைதான் முனியம்மாவுக்கு.

சாப்பிடாமல் அழுது புலம்பிய முனியம்மாவை ராக்கப்பனின் அம்மா ஆறுதல்படுத்தினாள்.

"இங்க பாரு... பொம்பளை இப்படியெல்லாம் சரிமல்லுக்கு நிக்கக் கூடாது... ஆம்பளை எப்படியிருந்தா நமக்கென்ன? நாளைக்கு அந்தச் சொத்து வந்துச்சுன்னா, அதை வெச்சு ஆளப்போறது யாரு? ஒ வவுத்துப் புள்ளை

தானே? வீடான வீட்லே சண்டையும் சச்சரவும் அழுகையும் புலம்பமுமாகவா இருக்கணும்? வீட்டை வீடா வெச்சிக்கிடுறது பொம்பளை சாமர்த்தியத்துலேதான்... சகிச்சுப்போற தன்மையிலேதான்..."

முனியம்மாவால் சகிக்க முடியவில்லை. சின்னானை இழந்துவிட்ட காயத்தோடு வந்தவள். இங்கு மருந்து இல்லை. ஆற வழியில்லை... அன்பு இல்லை. மதிப்பு மரியாதை இல்லை. அவமானமும் அடியும்தான்...

இதை எப்படிச் சகிக்க? விடாமல் மல்லுக்கட்டினாள்... மாறி மாறி அடிதான்... தினந்தோறும் சண்டை சச்சரவுகள்தான்.

கடைசியில் — அடித்துத் துரத்தப்பட்டே விட்டாள்... முனியம்மா ஊர் வந்து சேர்ந்தாள்.

செல்லம் சொன்ன விஷயம் பூங்கிளிக்குள் கொதித்தது. ஒரு பெண்ணின் வாழ்க்கை இப்படியும் சீரழியணுமா? ஆளும்பேருமாய்க் கூடி அவள் வாழ்க்கையையே நாசம் செய்துவிட்டார்களே...

தலைநிமிர்ந்து நிற்கவிடாமல் ஆக்கி விட்டார்களே...

பூங்கிளி சேலை துணிமணிகளைக் காயப்போட்டாள். நினைவுகளின் நச்சரிப்போடு வீடு வாசலைப் பெருக்கினாள்.

வாத்தியார் ரத்தினவேலு கேட்டார்:

"காபி இருக்கா?"

பக்கென்றது பூங்கிளிக்கு, ஐயையோ... அப்பாவுக்குச் சாயங்கால காபி தரலையே... பதற்றத்தில் உள் ஒடுங்க, பதில் சொல்லக்கூட நா வராமல் அடுப்பங்கரைக்குள் ஓடினாள்.

8

ராக்கப்பன் முனியம்மாவைக் கூப்பிட வந்திருந்தான் முன்னிலும் இழிந்த நிலையில், செத்த பிரேதமாய் அவன் பின்னால் போனதைப் பார்க்கப் பார்க்கப் பூங்கிளிக்குப் பாவமாக இருந்தது.

...முனியம்மா கோபித்துக்கொண்டு வந்த பத்து நாட்களுக்குள் ஊரெல்லாம் செய்தி பரவிவிட்டது. ராக்கப்பன் முன்னாடியே ஒரு முற்றிய பெண்ணோடு தொடர்பு வைத்திருந்திருக்கிறான். இது இப்போதும் நீடிக்கிறது. 'அப்படித்தான்' என்று அதிகாரமாய்ச் சொல்லிவிட்டான். முனியம்மா அடிபட்டு, வதைபட்டு, சீப்பட்டுப் போய் வந்திருக்கிறாள் என்கிற விஷயம் ஊரறிந்த ரகசியமாய்க் கிசுகிசுவென்று பரசியமாகிவிட்டது.

முனியம்மாவின் ஆத்தா முத்துலட்சுமிக்குப் பேரிடியாக இருந்தது. உலகமே தலைப்புரட்டியாய்ச் சுற்றுவது போலிருந்தது.

''இப்படியும் வாய்லே மண்ணள்ளிப் போடுவாகளா, பாவிப் பயக? தெய்வத்தை நம்புற மாதிரி, மலையா. நம்பிக் காரியம் பண்ணுனதுக்கா இந்தக் கொடுமை? எங்குலையிலே தீ வெச்ச பாவிக... விளங்குவாகளா! நாசமாப்போக...ஒருநாள் பேதியிலே ஒருமிக்கப்போக...''

புலம்பிப் புலம்பி மறுகினாள். பம்ப்ஷெட்டில் தலையைக் கொடுத்து, ஈரச்சேலையோடு பெருமாள் கோயிலில் அமர்ந்து நெஞ்சிலடித்து ஒப்பாரி வைத்து அழுது சபித்தாள்.

''சாதிமாங்கன்னு, நா... ஒருத்தன் உதுரத்துலே உத்தமி வவுத்துலே பொறந்த பத்தினி நா... என்

'வாய்'லே விழுந்தவுக தப்பிக்கவே முடியாது. எங்குலை கொதிச்சுத் தவிக்குற மாதிரியே அவுகளும் போகணும். ஐயா, சாமி... நீருதான் பொறுப்பு...'' என்று சாமிக்கே உத்தரவு போடுகிறவளாய் அழுகையும் கோபமுமாய் அங்கலாய்த்தாள். ஈரச்சேலை, ஈரக்கூந்தலோடு கோயில் முன்னால் செம்புழுதியில் புரண்டாள். ஒட்டுப் புல்லும் நெருஞ்சிமுள்ளும், காய்ந்து போன ஆத்திச்செடி களும் உடம்பெல்லாம் குத்துவதை மனக்கொதிப்பில் உணரவேயில்லை முத்துலட்சுமி.

வேசடை தீர உருண்டுவிட்டு, மார்பில் அடித்து அடித் துக் கதறிவிட்டுக் கோயிலைப் பார்த்து ஏதோ பேசுகிற மாதிரி ஜாடை காட்டினாள்.

'நீதான் பார்த்துக்கணும் ... நீதான் பொறுப்பு... இல்லே, ஓம் மூஞ்சியிலே கூட முழிக்க மாட்டேன்...' என்பது போல சைகை செய்தாள்.

'பெத்து வளர்த்த ஆசை மகளைக் கதறக் கதறப் பாழுங்கெணத்துலே புடிச்சுத் தள்ளிட்டோமே...' என்கிற குற்ற உணர்ச்சி. அதன் உறுத்தல்.

முத்துலட்சுமிக்குள் சாமியே இறங்கி அருளாகி விட்ட மாதிரி ஆவேசமாகி விட்டாள். ஊர்ப் பெரியாட்கள் வீடுகளுக்கெல்லாம் நடந்தாள். கண்ணகியாய்ப் புலம்பி, நியாயம் கேட்டாள்.

''நம்பி வாக்கப்பட்டுப் போன நம்மூர்ப் பொண்ணுக்கு ஒரு ஞாயம் வேண்டாமா? நீதியத்துப் போச்சா? நம்ம ஊருலே நீதி வாங்கிக் குடுக்க வலு இல்லாமப் போச்சா? நீங்க ஆம்பளைக இல்லியா?'' என்றெல்லாம் அவலமும் ஆவேசமுமாகப் புலம்பினாள். நாட்டாண்மைக்காரர் வீட்டிலும் போய்க்கிடையாய்க் கிடந்து நச்சரித்தாள்.

பல முயற்சிகளுக்குப் பிறகு, ஒரு நாலைந்து பெரிய மனிதர்கள் நியாயம் கேட்டு அய்யனேரிக்குப் போனார்கள்.

''நம்பி வந்த பொண்ணை நட்டாத்துலே எப்படி விடலாம்?'' என்று கேட்டனர். அந்த ஊர் நாட்டாண்மையும், பெரியாட்களும் கூடியிருந்தனர். சபை நடுவில் தலை குனிந்து நின்றான் ராக்கப்பன்.

''கல்யாணத்துக்கு முன்னாடி எளவட்டப்பய 'இப்படி அப்படி' இருக்குறது சகசந்தான்...ஒரு பொண்ணு கழுத்துலே மூணு முடிச்சுப் போட்ட பெறகாச்சும் புத்தி தெளிஞ்சு இருக்க வேண்டாமா? அப்படியில்லேன்னா, ஊரு கூடி மூய்ச்சி வெச்சிருக்குற கல்யாணத்துக்கு என்னய்யா அர்த்தம்?''

— இப்படி இந்த ஊர்க்காரர்கள் கேட்க...அந்த ஊர் நாட்டாண்மை, ''என்னடா சொல்லுதே?'' என்று ராக்கப்பனை அதட்ட...ஆள் ஆளுக்கு அவனைக் கண்டித்துப் பேச, ஆத்திரமும் அறிவுரையுமாய் வார்த்தைகள் தெறித்தன.

''ஊரை மதிச்சாச்சும் ஒழுக்கமா இருக்க வேண்டாமடா? தொட்ட ஒறவு, விட்ட ஒறவு எல்லாத்தையும் தொலைச்சுத் தலை முழுகிட்டு, வந்த பொண்ணை மதிச்சு வாழ வேண்டாமடா?''

ராக்கப்பன். முனியம்மாவைக் குறை சொன்னான். அவள் குணத்தைக் குறை சொன்னான்.

''சண்டைக்காரியா இருக்கா...எந்நேரமும் சிடுசிடுப்பும் வசவும்தான்...வீட்டுலே நிம்மதியில்லே...நின்னா குத்தம், நிமிர்ந்தா குத்தம்னு குத்தம் சொல்றதே பொழப்பாகிப் போச்சு...'' என்றெல்லாம் அடுக்கினான். அவன் சொல்லுக்கு நியாயம் கற்பிக்கிற அவனது பெற்றோர்.

"பொம்பளைன்னா அடக்கம் வேண்டாமா? ஒரு சொல்லுக்காச்சும் பணிஞ்சு போக வேண்டாமா? ஒரு படியாச்சும் கொறஞ்சு இருக்க வேண்டாமா? முனியம்மா அப்படியில்லே ... வார்த்தைக்கு வார்த்தை எதுத்துப் பேசுறா...வளைஞ்சு குடுக்கறதே இல்லே...எம் புள்ளே பொழப்பே நிம்மதியில்லாமப் போச்சு இந்தப் பொம்பளையாலே ..."

ஊர் பஞ்சாயத்து எல்லாவற்றையும் கேட்டது. எல்லா நியாயமும் பேசியது. கடைசியில் இப்படி முடிவாகியது.

"ராக்கப்பன் முனியம்மாவைக் கூட்டி வெச்சு வாழணும்...முனியம்மாவும் பணிஞ்சு, அடங்கிக் குடும்பம் நடத்தணும். அதுக்கேத்த மாதிரி, முனியம்மாவுக்கு நாலு பேரு புத்தி சொல்லணும்..."

வீட்டு நடையில் குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருந்தாள் முனியம்மா. முழங்காலின் மீது முகம் புதைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். முழங்காலுக்கும் முகத்துக்கும் நடுவில் கிடந்த புறங்கைகளில் கண்ணீர் வரி வரியாய்...

சுற்றிலும் ஊர்ப் பெரியவர்கள்...

"பொண்ணுன்னா பூமிமாதா மாதிரி...பொறுமையாயிருக்கணும்..."

"வாயிருக்குங்குறதுக்காக வார்த்தையைக் கொட்டக் கூடாது...கேள்வி மேலே கேள்வியா கேட்டுக்கிட்டிருந்தா குடும்பம் நடத்த முடியுமா? கோர்ட்தான் நடத்த முடியும்.

"ஆம்பளை பாதுகாப்புதான் பொம்பளைக்குப் பெருமை... ஆம்பளையைத் திருத்துகிற உத்தியோகமா

பொண்டாட்டிக்கு? ஒருத்தரை ஒருத்தர் கொறை சொல்லிக்கிட்டேயிருந்தா, குடும்பம் எப்படி நடத்த?''

''சண்டை சத்தம் போடாம...இருக்குற குத்தம் கொறைகளைச் சகிச்சுக்கிட்டு, மென்னு முழுங்கிட்டு, கூடிமாடிப் பேசிப்பழகிச் சந்தோஷமாயிட வேண்டாமா?''

குத்தம் பாத்தா சுற்றமில்லேன்னு பெரியாளுக சும்மாவா சொன்னாக? புருசன் குத்தத்தையே பெரிசு படுத்திக்கிட்டிருந்தா...பிரியமும் பாசமும் எப்படிவரும்?''

—இப்படியே ஆள் ஆளுக்குப் பேசினர்.. ஒரு குடும்பத்தை வாழவைக்க வேண்டுமென்ற நல்நோக்கோடு தெரிந்தநியாயங்களைக் கூறினர். நடப்பிலிருந்த சமூகச் சட்டங்களை அவளுள் திணித்தனர். 'இதுதான் நடப்பு... இப்படித்தான் உன் பாதை' என்று அச்சுறுத்தி உணர்த்தினர்.

அவள் ஆத்மாவில் நெருப்பு வைத்தனர். எண்ணெய் ஊற்றினர். அணைந்து போகாமல் கொழுந்து விட்டெரிய வைத்தனர். அவளைச் சாம்பலாக்குவதில்-சுயத்தைச் சுட்டெரித்து நிறம் மாற்றுவதில்-சிந்தனை பலாத்காரத்தின் மூலம் அவளைப் பணியவைப்பதில்-பயமுறுத்தி ஒடுக்குவதில்-உணர்வுரீதியான மாற்றம் நிகழ்த்துவதில் சன்னஞ்சன்னமாய் வெற்றியடைந்து வந்தனர்.

ஆனால். முனியம்மா பிடித்து வைத்த பொம்மையாய் இறுக்கமாயிருந்தாள். எவ்விதப் பதிலுமற்ற மௌனத்தில் உறைந்து கிடந்தாள். தலையில் வந்து விடிந்த விதியை எண்ணிய கலக்கத்தில் உடைந்து. கலங்கிக் கரைந்து கொண்டிருந்தாள்.

அவள் மௌனம், பெண்களுக்கே பிடிக்கவில்லை.

''அப்பவும் இப்படியா ஒரு பொட்டச்சி குத்துக்கல்லு மாதிரி அசையாம உட்கார்ந்திருக்கிறது? சொல்றவுகளை யெல்லாம் அலட்சியம் பண்ற திமிரைப்பாரு...பொம் பளைக்கு இம்புட்டுத் திமிரும் தினவும் இருக்கலாமா இருந்தா. பொழைக்க முடியுமா?''

''அதானே...கொஞ்சமாச்சும் வளஞ்சு குடுக்க வேண் டாமா? நிமிர்ந்த மாதிரியே போக முடியுமா? வாய்ச்ச வாசலுக்கேற்ற மாதிரி கொஞ்சம் குனிஞ்சு நடக்க வேண் டாமா? கழுதை...திமிர் பிடிச்ச கழுதை...''

முனியம்மா உள்ளுக்குள் நொறுங்கி நொத்தவிடாகிப் போய்விட்டாள். உடைந்து கரைந்துவிட்டாள். பெண் களின் அபிப்பிராயங்கள் அவளுள் பெரும் சக்தியாகச் செயல்பட...தனக்குத்தானே குற்றவாளியாக உணர ஆரம் பித்துவிட்டாள்.

ராக்கப்பன் நாலாம் நாள் வந்தான். ஆக்கி அவித்துப் போட்டாள் முத்துலட்சுமி. அவளுக்குச் சந்தோஷம். மகள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி என்கிற நம்பிக்கை.

செத்த பிரேதமாய் அவன் பின்னால் மூட்டை முடிச் சுகளோடு புறப்பட்டுப் போனாள் முனியம்மா.

பூங்கிளிக்குப் பார்க்க பார்க்கப் பாவமாயிருந்தது. சீரழிந்த சித்திரமாய்ச் சிதைவுபட்டு, சிதைந்த வாழ் வுக்கு—சிதைக்கு—தயாராகி முனியம்மா செல்கிற பயங் கரம். பூங்கிளிக்குள் நடுக்கம். மொத்தச் சமூகமே குரூர வடிவம் கொண்டு முற்றுகையிடுகிற நிஜத்தை உணர்ந்த அச்சம்.

விடிந்தால் திங்கட்கிழமை. முக்குரோட்டில் தென் புறத்தில் பந்தல் போடுகிற வேலை. தொழிலாளர் களோடு சேர்ந்து வசந்தனும் கடப்பாரையால் குழி

தோண்ட, இன்னொருவன் மண்டி போட்டுக் குழிக்குள்ளிருந்து மண்ணை அள்ளி வெளியில் போட்டான்.

வரதன் வந்தார்.

"குழியைத் தோண்டுகிற வேலை எல்லாரும் செய்யலாம்...ஒனக்குன்னு ஒரு வேலையிருக்கு..."

"என்ன வேலை?"

"நாளைக்குப் பந்தல்ல நெறைய அட்டைக மாட்டணும். அதுக்கான வாசகங்களை நீ போய் தயாரி..."

"அப்படியா?"

"ஆமாம்...கவிஞன்ப்பா நீ...ரொம்பக் கவிதையா எழுதிராதே...ஜனங்களுக்குப் புரியற மாதிரி எழுது..."

வசந்தன் கடப்பாரையைக் கைமாற்றி விட்டு டீக் கடைக்குப் போனான். டீயடித்தான். இரண்டாவது காட்சி சினிமாவுக்குப் போகிற ஆண்கள், பெண்கள்... பந்தல் போடப்பட்டுக் கொண்டிருப்பதைக் கேள்வியோடு பார்த்துவிட்டுச் செல்கின்றனர். அவர்கள் முகத்திலும் கண்ணிலும் 'என்ன பந்தல்...எதுக்கு?' என்ற கேள்விகள்...

தொழிற்சங்க அலுவலகம் நோக்கி நகர்ந்த வசந்தன் முன்னிலையில் ஒரு சைக்கிள் வந்து நின்றது. பின்பக்கமாய் வலதுகால் சுழற்றி சைக்கிளை விட்டிறங்கிய போலீஸ்காரர். "சார்...வணக்கம் சார்..." என்கிற போலீஸ்காரருக்கு நடுத்தர வயசு.

"வணக்கம் சார்..."

"என்ன சார். பந்தல் ஏற்பாட்டைப் பார்த்தா ரொம்பப் பெரிசா தோணுதே... உண்ணாவிரதத்துலே ரொம்பப் பேரு உட்காரப் போறாகளா?"

"ஆமா சார், ஐநூறுக்குக் குறையாது..."

"மைக் ஏற்பாடு உண்டா?"

"ம்...அதுக்கெல்லாம் பர்மிஷன் வாங்கியாச்சே..."

"வாங்கியாச்சு...அதான் தெரியுமே. உங்க யூனியன் வேலைகளே பெர்ஃபெக்டா இருக்கும்னு..."

போலீஸ்காரரின் மரியாதையான பேச்சு, குளிர்ந்த நட்பார்ந்த புன்னகை...எல்லாம் இவனுக்குள் பூவை அள்ளித் தூவின. 'அடடா! இந்தக் காட்சியைப் பூங்கிளி பாக்கணுமே...இந்த ஆளுக்கு இம்புட்டுச் செல்வாக்கா என்று மலைக்கணுமே...'

அவனுள் சரேலென ஓடுகிற சம்பந்தமற்ற நினைவு... பூவாச நினைவு...

"நாளைக்கு நடக்கப்போற உண்ணாவிரதத்துக்கு யார் சார் தலைமை? யார் யார் வாழ்த்துரை? முடிச்சு வைக்கப் போறது யாரு?"

"எதுக்குக் கேக்குறீக?"

"மேலேயிருந்து கேட்டுக் குடையுறாங்க சார்... வயர்லெஸ் அலறுது, எங்களை உஸ்ஸுன்னு உக்கார விடாம..."

குற்றஞ்சாட்டுகிற தொனியிலேயே புகழ்கிற அந்த போலீஸ்காரரின் சாமர்த்தியம். வசந்தனுக்குள் பிரமிப்பு.

"சார்...சொல்லுங்க, நா குறிச்சிக்கிடுறேன்..."

"இல்லே சார், நீங்க கேக்குற டீட்டெயில்ஸ் பூராவும் வரதனுக்குத்தான் தெரியும். அந்தத் தோழர் அந்தா இருக்கார், பாருங்க..."

"யாரு வரதனா? நம்ம தலைவர்தானே? தெரியுமே.. அப்ப சரி சார்..."

போலீஸ்காரர் சட்டென்று வசந்தனை வெட்டி விட்டார். வரதனை நோக்கி நகர்ந்தார்.

மூக்குரோடு மாம்பழ நிற ஒளி மழையில் ஜெகஜோதி யாய்த் தெரிகிறது. ஏதோ மாயலோகம் போல. எல்லாம் பொய் பொய்யாய்த் தோன்றுகிற ஒளி.

நாளைய உண்ணாவிரதத்தைச் சொல்கிற வால் போஸ்டர்கள்... எங்கு திரும்பினாலும் அதுதான்!

'வியர்வை மக்களின்
திரள் பட்டினிப் போர்!
'பொதுத்துறைத் தொழில்கள்
தேசத்தின் ஆலயங்கள்'

என்றார் ஜவஹர்லால்நேரு. 'பொதுத்துறை ஆலைகளைத் தனியாருக்குத் தாரைவார்த்திட முனையும் அரசின் மக்கள் விரோதப் போக்கைக் கண்டிக்கிறோம். வன்மையாக எதிர்க்கிறோம். ஆலயங்கள் ஏலம் போகச் சம்மதியோம்! பொதுமக்களே...வாருங்கள், போரில் பங்கெடுக்க...'

டீக்கடைகளில், வெத்திலைப் பாக்குக் கடைகளில், பலசரக்குக் கடைகளில்—எல்லா இடங்களிலும் வால் போஸ்டர்கள். கூடிக் கூடிப் பார்க்கிற ஆட்கள்...இவனுக்குள் குழந்தைத்தனமான ஒரு பெருமிதம். இந்த வால் போஸ்டர் மேட்டர் தயாரித்ததும் இவன்தான்.

வரதன் ரொம்பத் திறந்த மனசோடு பாராட்டினார்.

"ஏய் எழுத்தாளா, நீ செலக்ட் பண்ணியிருக்குற நேரு கொட்டேஷன் இருக்கே...அதுதான் டாப்! ஆலயங்களை ஏலம் போடுறாகன்னு சொல்றப்பதான், ஆன்மீகப் பெருமையிலே ததும்புற நம்ம ஜனங்களுக்குச் சுள்ளுன்னு கோபம் வருது..."

உண்ணாவிரதப் போராட்டம் நடக்கிற பந்தல் முழுக்கத் தொழிலாளர்கள். பாண்ட்டிலும் கைலியிலும்'

வெள்ளை வேட்டியிலுமாய் அவர்கள்! பந்தல் சுவர் முழுக்க அட்டைகள். வெள்ளை பேப்பர் ஒட்டப்பட்ட அட்டைகளில் நீலத்திலும் பச்சையிலுமாக எழுத்துக்கள்!

'சுயராஜ்யம் பெறக் குருதி கொட்டிய தியாகிகள் கனவு இதுதானா? முதலாளிகளின் தனிராஜ்யமாகத் தேசம் ஆவதா?'

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!— வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்ற மகாகவியின் மகோன்னதக் கனவுகளை நிந்தனை செய்வதா?

'வேர்த்திடும் தொழிலாளர் கூட்டத்தின் உழைப்பில் வந்த ஆர்த்திடும் எந்திரக் கூட்டங்களைத் தனியாரிடம் தாரை வார்த்திடவோ? பாரதிதாசனே, உன் கவிதை பொய்யாகவோ?'

'உலகத்துக்கோர் புதுமையாம், ஒப்பில்லாத சமுதாய மாம்... பொதுவுடமைச் சிந்தனை, உப்பில்லாத பண்ட மாக மாற்றப்படுவதா? பிரம்மதேவர்கள் ஊமையாகக் கிடப்பதா?'

'உப்புச் சத்தியாக்கிரகம் நடத்திய தேசத்தில், உப்புக் காய்ச்சும் தொழிலும் கூட அந்நியர் கையிலா?'

'பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை போகவோ? நாங்கள் ஆண் பிள்ளைகள் அல்லவோ?'

—இப்படியான வாசகங்கள். கவிதைகளா, கோஷங் களா என்று இனம்பிரிக்க முடியாத சங்கமிப்பு! சங்கமமே ஓர் அழகாய் படிப்போரின் நெஞ்சைக் கவர்வதாய்...

கூட்டங்கூட்டமாய் வந்து வேடிக்கை பார்க்கிற மக்கள்... வாசகங்களை வாசிக்கிறவர்கள்... அவர்கள் முகத் தில் ஒளிர்கிற பாராட்டு மின்னல்கள்...

வசந்தனுக்குள் அலை அலையாய்ப் பரவசம். பசியின் அழற்சி தெரியவில்லை. உழைப்பின் சோர்வு தோன்ற வில்லை, மனநிறைவு... மக்களோடு சேர்ந்து கிடக்கிற மகிழ்ச்சி. நீருக்குள் கிடக்கிற மீனின் சந்தோஷம்...

வந்து போகிற பஸ்கள், வேன்கள், சைக்கிள்கள், பஸ்ஸில் ரத்தினவேலு. ஜன்னல் வழியாகப் பார்த்தார். வசந்தன் அவருள் வெறுப்பின் அலைகள். மனசின் ஆழத் தில் எழுகிற கசப்பு உணர்ச்சி.

'நாயைக் குளிப்பாட்டி நடுவீட்லே வெச்ச கதை தானோ? இந்தப் பய உருப்படவே மாட்டானோ? இவ னுக்கு எதுக்கு அரசியலும் காடேத்தும்? தேவையா? வேலை போச்சுன்னா என்ன பண்ணுவான்? உப்புக்கல் லுக்குக்கூடப் பெறமாட்டானே... ஊஹூம், இவன் ஒப் பேறவே மாட்டான். நடுத்தெருவுலதான் நிக்கப் போறான்...'

அவருள் அலை அலையாய் வேதனை எண்ணங்கள்...

9

நேற்றுதான் வந்து சேர்ந்திருக்கிறாள் சுப்புத்தாய். ஒரு நாடகத்தில் நடித்து முடித்துவிட்டு நரம்பும் தோலு மாய்த் திரும்பியிருக்கிறாள். இனி அவள் நடிப்பதற்கு நாடகமுமில்லை...வேடமுமில்லை. வெறுமையாய் நாளை யும் பொழுதையும் தின்று ஆயுளைக் கழிக்க வேண்டியது தான்.

ஊரிலுள்ள பெண்களெல்லாரும் படைபடையாய் வந்து துக்கம் விசாரித்துவிட்டுப் போனார்கள்.

விதியின் அநீதியை உணர்ந்த கொதிப்பில் கிராமத்துப் பெண்களின் ஈரமனப் புலம்பல். இரக்கத்தின் ஊற்றுகள் அவர்கள் கொதிச்சொற்களில், பாவம் என்கிற அங்கலாய்ப்புகளிலும் அனுதாபங்களிலும் ததும்பி நின்ற அன்பு மனம், அன்பு மணம்.

எல்லாம் ஆயிற்று. அனுதாபங்களையும் ஆற்றாமைகளையும் ஈரச்சொற்களில் உணர்த்திவிட்டு. வாழ்வின் அழைப்புக்குச் செவிசாய்த்து அவரவர் பாதைகளில் போய்விட்டனர்.

சுப்புத்தாய்க்குப் பாதையேது? பயணமேது? பொழுது முச்சூடும் சுவரில்சாய்ந்து,சரிந்து கிடந்தாள். அழுது அழுது வற்றிப்போன- உலர்ந்த-மனம். சோகச்சிலுவை மனசின் உறுப்பாய் அப்பிக்கொள்ள, அதன் பார அழுத்தத்தில் நினைவுகள் நசுங்கிக் கிடக்க...அடித்துப் போட்ட குருவியாகக் கிடந்தாள். என்னத்தை அழுக? அழுது ஆகப்போறதென்ன இனி?

...கல்யாணம் முடிந்த அந்த ராத்திரி புதுப்பாய். புதுத் தலையணை, புது ஜமுக்காளம்...அதன் புது வாசம்.. குத்து விளக்கின் சுடர் வெளிச்சம்...பணியாரம், ஆரஞ்சுப் பழம் வகையறாக்கள்...

உள்ளே வந்த சுப்புத்தாயை ஆசையோடு வந்து தொட்டான் முருகேசன். முகத்தில் ஆசை...ஆவல் பரபரப்பு...அடியில் ஒருவிதப் பயம்.

அவன் தொடல் எந்தவித உணர்வையும் இவளுள் ஏற்படுத்தவில்லை. ஊரறிய, நாலு பேரறிய, ஓர் ஆடவனுடன் தனித்துவிடப்பட்டிருக்கிறோம் என்கிற லஜ்ஜை மட்டுமே. பலி என்று தெரிந்தே கழுத்தை நீட்டிய நிஜ நிலைமை. அதன் அவல உணர்வு மட்டுமே நெஞ்சில்.

''என்னைப் புடிச்சிருக்கா?''

மனசுக்குச் சம்பந்தமில்லாமல் தலை மட்டும் ஆடியது.

"உட்காரு..."

உரசிக்கொண்டு உட்கார்ந்த அவனிடம் மெல்லிய பதற்றம். வேறு ஒரு பேச்சும் பேசாமல், ஒரு சடங்கு சாத்திரம் எதுவும் பாராமல், எடுத்த எடுப்பில் ஜாக்கெட்டின் ஊக்கில் கைபோட, அவள் செருப்படி பட்ட மாதிரி அவமானமாய் உணர்ந்தாள்.

அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள் முருகேசனின் தொடர்ந்த முன்னேற்றம். நடுங்கும் கைகளோடு ஆக்கிரமிப்பு. அவளுக்குள் பரவசம் இல்லை. பூரான் ஊர்கிற மாதிரியான அருவை. அதைச் சகித்துத் தீரவேண்டிய நிதர்சனம் பற்றிய பிரக்ஞை. சகித்துச் சகித்து...உணர்வுகள் சமனப்பட்டு பூரான், மனிதக் கை ஸ்பரிசமாய்த் தோன்ற...அவளுக்குள் வயசுக்குரிய கிளர்ச்சி. மெள்ள மெள்ளக் கிளர்ந்தெழுகிற பூதம். சடாமுடிகளோடு ஆடிக் குலுங்கி யெழுகிற பூதம். எழுந்தால் அடங்காத பயங்கரப் பூதம். மாயப்பூதம்...உணர்ச்சிப்பூதம்...

பூதமாகவே அவள் மாறிவிட...குழைந்து கனிந்து ஈரநிலமாய் அவள் நெகிழ்ந்த கணத்தில்...

அவனைக் குலுக்கிய இருமல், மூச்சுவிட முடியாத தொடர் இருமல், நெஞ்சைப் பிடித்துக்கொண்டு தவித்துத் தவித்து இருமிய இருமல், இளைப்பும் சளியுமாய்த் தொண்டைக்குள் கொழ கொழத்தது. இருமலின் உக்கிரமத்தில் கண்ணுமுழி தெறிக்கிற மாதிரி இருந்தது

அப்படியே நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டே முருகேசன் பாயில் சுருண்டு விழ—மாயபூதத்தின் உலுக்கலில் சுப்புத்தாய். அந்தரத்தில் சுழற்றி வீசியெறிப்பட்டவளாக, அவளின் தேகத்தகிப்பு...உணர்ச்சித் தவிப்பு...

சூறையாடிய இருமலில் ஓடிக் களைத்த நாயாகக் குப்புறக்கிடக்கிற அவன். இளைப்பின் இயக்கமாய் அவன்

உடம்பே விம்மி விம்மியடங்க...அவன் தொண்டைக்குள் சளியின் சலசலப்பு.

அவனை ஒரு புழுவைப் பார்ப்பதைப் போல பார்த்தாள் சுப்புத்தாய். அவள் கண்களின் விளிம்பில் மனசின் கொதிப்பு... காயம்பட்ட நிராசையின் சீற்றம்...அவமதிக்கப்பட்ட பெண்மையின் ஆறாக்கோபம்.

நோயாளி மனுசனைக் கண்டு அனுதாபப்பட முடியாத நிலையில்...அவலத்தில் நிறுத்தப்பட்டுவிட்டோமே என்கிற ஆற்றாமை. அவனை அப்படியே ஒரு மிதி மிதித்துத் தள்ளணும் போல ஓர் உள்தீவிரம்.

வாய்த்த விதியை எண்ணி உடைந்தவளாய் துணி மணிகளை ஒழுங்குப்படுத்திக் கொண்டாள்.

முதல் ராத்திரி மட்டுமல்ல...எல்லா ராத்திரிகளுமே இதுதான் கதை. இதே அவஸ்தை.

அவனது சில்மிஷங்கள்... வெறித்தனங்கள்... ஆக்கிரமிப்புகள்...பூதத்தின் எழுச்சி கூட நேரத்தில் இருமல், இளைப்பு, சரிவு.

இவளுக்கு உயிர்வாதை.

இதே தொல்லை. டி.பி. நோயாளிக்குள் ஹார்மோனின் அதீதச் சுரப்பு... அதன் குணவெளிப்பாடு... இவளது நரகமாய் நீள...

செத்துச் செத்துப் பிழைத்தாள். உள்ளுக்குள் மூர்க்கமாய் எழுகிற கொலைவெறி.

நெஞ்சுக்குள் நெறுநெறுப்பு, பற்கடிப்பு...தன் தலையைத் தானே பிய்த்துக்கொள்ள வேண்டும் போல வெறி.

வீடே பேய் வீடாய்த் தோன்ற, பயத்தில் உறைந்தவளாய் வெளித் திண்ணையிலும் வாசலிலுமாய் எந்நேரமும் உட்கார்ந்திருப்பாள்.

''சுப்பு...ஏய் சுப்பு...''

உள்ளிருந்து முருகேசன். குழைவும் கெஞ்சலுமான அழைப்பு.

''ம்...''

இவள் உள்ளே போகப் பயப்படுவாள். தேகமே நடுங்கும். மனம் கிடந்து எரியும்.

அவன் திரும்பத் திரும்ப நச்சரிப்பான். தாங்க முடியாத ஆங்காரத்தில் ''என்ன்...ன'' என்று கத்திக் கொண்டே உள்ளே போவாள்.

''வெண்ணி வேணும்...''

''வேஷக்கார நாய்'' என்று வைதுகொண்டே அடுப் பங்கரைக்குள் போவாள். வெந்நீரைத் தருவாள். கிளாஸை வாங்கிப் பக்கத்தில் வைத்து விட்டு அசட்டுத் தனமாய் இளிப்பான். கையைப் பிடித்து கெஞ்சலாய் வருடுவான்.

''ஏன் சுப்பு, எம்மேல கோவமா?''

''இல்லே. சந்தோஷந்தான். பொங்கி வழியுது...''

''எதுக்கு இப்படி வெறுத்துப்போய் பேசுதே?''

எழுந்து நெருங்குவான். உரசி நிற்பான். தோளில் கை போடுவான். கை அங்கு, இங்கு என்று அலையும். அத்துமீறி அலைகிற கைகள்... அவளுள் பற்றிக்கொண்டு எரிகிற தீ. தீயின் நாவுகள், கொலைப்பசியோடு எரிகிற ஜ்வாலைகள்.

''கையை வெச்சுகிட்டு சும்மா கிடங்க...''

''எதுக்குக் கிடக்கணும்? தாலிகட்ன புருசன்...''

''நல்ல புருசன்...! எதுக்கு என்னை இப்படிக் கொல்லுறீக? நா என்ன பாவம் செஞ்சேன்...?''

''நா கொல்லவா செய்தேன்?''

''வாழவா விடுறீக? இப்படி என்னை நரகத்துலே போட்டு வறுத்தெடுக்கிறதை விட ஒரேயடியா கொன்னு போட்டுருங்களேன்...''

''நாந்தான் சாகணும்...''

''செத்துத் தொலைய வேண்டியதுதானே? யாரு வேண்டாம்னது?''

வெளியே போய் வாசல்படியில் உட்கார்ந்து கொள்வாள். அவளுள் கண்மூடித்தனமான உணர்வுகள்...யார் மீது பாய்வது என்று புரியாத குருட்டுக் கோபத்தின் ஆவேச முட்டல்.

தப்பிக்க வழியற்ற நரகம். வாழ்வின் கவர்ச்சி முழுதும் தூரக் கனவாயிற்று. உயிரே சுமையாகிவிட, அழகு, இன்பம், பூ, மகிழ்ச்சி போன்ற மெல்லுணர்ச்சிகள் யாவும் அறிமுகமற்ற பொய்யாகிவிட... மனசில் விரக்தி மட்டுமே மிஞ்சும். விரக்தியே பொங்கும்.

தலைக்கு எண்ணெய் தேய்க்கிற ஆர்வம் இருக்காது சடை போட்டு பூ வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் தோன்றாது. குளிக்கவே வெறுப்பாக வரும். அழுக்குத் துணியை மாற்றி வேறு சேலை உடுத்த விருப்பம் வராது. கம்மங்கூட்டில் — வேறு இடத்தில் — ஜாக்கெட் கிழிந்திருந்தால்கூட அதை மறைக்கச் சுரணையே வராது. பெண்ணுக்குரிய இயல்போ — உயிர்ப்போ இல்லாமல், வெறித்த பார்வையாக — நடமாடும் இரும்புத்துண்டாக அலைவாள்.

அந்தக் கட்டத்தில்தான் முருகேசன் மண்டையைப் போட்டான். முதன் முதலாய் உள்ளுக்குள் விடுதலையை உணர்ந்தாள்...சுப்புத்தாய்...

அம்மா வீட்டில் தனித்திருந்த சுப்புத்தாய் பக்கத்தில் பூங்கிளியும் செல்லமும் உட்கார்ந்திருந்தனர். பூங்கிளிக்கு அழுகை அழுகையாக வந்தது... வெள்ளைச் சேலை உடுத்தியிருக்கிற சுப்புத்தாயைப் பார்த்து.

கல்யாணத்துக்கு முன்பு — இவள் மறுக்க வேண்டிய நேரத்தில் வாயைத் திறந்திருந்தால், உதறிப் பேசியிருந்தால், துணிந்து மனசை வெளிப்படுத்தியிருந்தால்...

இந்த நரக வாழ்க்கையில் சிதைந்து போகாமலிருப்பாளே... பூங்கிளிக்குள் சோகமயமான நினைவுகள்...

பொழுதடைகிற நேரம்... மொட்டைமாடியில் தண்ணீர் தெளித்துப் போட்டாள் பூங்கிளி. இடுப்பு உயரத்துக்கும் மேல் கட்டப்பட்ட கைபிடிச் சுவர். ராத்திரியில் மாடியில் படுத்தால் சுகமாயிருக்கும். தண்ணீர் தெளித்துப் போட்டால்தான் சூரியவெக்கை தணியும். முதுகு வலிக்காது.

ரத்தினவேலு வந்தார். அவர் வந்தவுடன் அவளுள் புயம்.

"பூங்கிளி... சாப்ட்டுருவமா?"

இயல்பு கெட்டுப்போன பயந்த சுபாவத்தில் பூங்கிளி தத்தளித்தாள். "ஆகட்டும்ப்பா..." என்று சொல்லக்கூட முடியாமல் தடுமாறி, தலையை மட்டும் அசைத்தாள்.

"சோறு வை..."

கால் கையைக் கழுவிக்கொண்டு வந்தார். உட்கார்ந்தார். இவள் ஃபேன் சுவிட்சைத் தட்டிவிட்டாள். சாப்பாடு வைத்து குழம்பு, ரசம் எல்லாம் தனித்தனியாய் பாத்திரத்தில் ஊற்றிப் பக்கத்தில் வைத்துவிட்டு, அடுப்பங்கரை வாசலில் ஒடுங்கிப்போய் நின்றாள்.

ஏறிட்டுப் பார்த்தார். அவர் பார்வையில் தெறித்த கண்டனமும் கோபமும்... இவளுக்குள் பயப் படபடப்பு, பரிதவிப்பு, என்னவோ ஏதோவென்ற இனம்புரியாத பதற்றம்... வியர்த்துக் கொட்டியது.

''தண்ணி மோந்து வைக்கிறது இல்லியா?'' அதட்டலாய் அவரது குரல். அதற்குப் பிறகுதான் இவளுக்கு விஷயமே புரிபட்டது. நடுங்கும் கைகளோடு தண்ணீர்ச் சொம்பை வைத்தாள்.

குனிந்து சாப்பிடத் துவங்கினார்.

அப்பாவிடம் பூங்கிளி பல தடவை அடி வாங்கியிருக்கிறாள். எத்தனை தடவை இருக்கும்? ஆயிரம் தடவை. அதற்கும் மேல்தான்.

கடைசியாக வாங்கிய அடி எப்போது?

அப்போது—

பூங்கிளி பத்தாவது படித்துக் கொண்டிருந்தாள். தாவணி போட்டு விட்டாள். தாவணியில் நிஜமாகவே அழகாயிருப்பாள். நல்ல சிவப்பு. உடுக்கைமாதிரி உடம்பு வாகு. வயசுக்கு மீறிய தோற்றம்.

அவளை ஏதோ ஒரு பள்ளி மாணவன் கேலி செய்ததாக வாத்தியார் ரத்தினவேலு கேள்விப்பட்டிருக்கிறார். கேலி செய்யப்பட்டதும் பூங்கிளிக்குத் தெரியாது.

பையன் பக்கத்தூர்ப் பையன். அடித்தால், வேறு மாதிரியான விவகாரமாகி விடும். பள்ளி விட்டு வீடு வந்து வீட்டு வேலைகளைப் பூங்கிளி பார்த்துக் கொண்டிருந்த போது ரத்தினவேலு வந்தார். கோபமாய் வந்தார். மிளகாய்ப் பழமாகக் கண்கள்.

பளார் பளார் என்று அறைகள். இவளுக்குத் தீப் பட்ட மாதிரியிருந்தது. துடியாய்த் துடித்தாள்.

"நாளையிலேயிருந்து நீ பள்ளிக்கோடமும் போக வேண்டாம்... ஒரு கோடமும் போகவேண்டாம்...பேசாம வீட்டுலே இரு கேவலப்பட்டுப்போய், பொம்பளைப் புள்ளை படிச்சுக் கிழிக்க வேண்டியதில்லே..."

எதற்காக அடித்தார்...ஏன் ஆத்திரப்பட்டார் என்கிற விஷயமே, இவளுக்கு ரொம்பநாள் கழித்துத்தான் தெரியும். எப்படியோ படிப்பு நின்று போயிற்று.

ஒழுக்கத்தைப் பற்றி ரொம்ப உபதேசிப்பார். 'பெண் பிள்ளையின் பேரை உச்சரித்து, தெருவில் எவனும் பேசக்கூடாது...பேசுகிற மாதிரி பெண் நடந்து கொள்ளக் கூடாது' என்று எச்சரிப்பார்.

அதுதான்...கடைசியாய் வாங்கிய அடி. அப்புறம் அடிபடவேயில்லை. அதட்டல்...கண்டிப்பு...ஆத்திரமான சீறல்...கோபக் கத்தல் எல்லாம் உண்டு. அடி மட்டும் கிடையாது. வளர்ந்த புள்ளையை அடிக்கக்கூடாது என்று முடிவெடுத்திருப்பாரோ...என்ன இழவோ...

சாப்பிட்டு முடித்த கையோடு வெளியேறப் போனவர். திரும்பி மகளைப் பார்த்தார்.

''நீ சாப்ட்டுட்டுப் படும்மா...'' என்று கனிவோடு கூறிவிட்டுப் போனார்.

சாப்பிட்டு முடித்தாள். எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தினாள். அப்பாவுக்குக் கட்டிலைப் போட்டு போர்வை, தலையணை போட்டுச் சரிப்படுத்திவிட்டு, செம்பில் தண்ணீர் வைத்து, ஒரு தட்டால் மூடி வைத்து விட்டு...

பாய், தலையணையோடு படியேறினாள். மொட்டை மாடியில் செங்கல் தளம்...தண்ணீர் தெளித்த இடம்... பாதத்தைக் குளிர்ச்சியாய் முத்தமிட்டது. பாயை விரித்

துப் படுத்தாள். தலையில் மல்லிகைப்பூ உறுத்த, தலையை மட்டும் தூக்கிப் பூவைச் சற்று ஒதுக்கிக் கொண்டாள்!

நிலா வெளிச்சம்... பால்நிற ஒளி... தூசி மேகங்கள் அடர்த்தியற்ற விரிவாய்க் கிடந்தது. முக்கால் நிலா, அந்தப் பஞ்சு மேகங்களை ஒளியால் நனைத்துக்கொண்டே நகர்கிறது. நிலாவைக் கண்ட அச்சத்தில் ஆகாய முகம் வெளுத்துக் கிடக்கிறது.

நிலாவில் நங்கூரமிட்ட அவள் பார்வை...நகரும் நிலா. ஒரு கறுப்புக் காளைமாடு படுத்துக்கிடப்பது போல...தலையை நிமிர்த்திக் கொம்புகளோடு சிலிர்ப்பது போல, நிலாவுக்குள் நிழலிருட்டு.

இருட்டு என்றாலே பொய்தான். பொய், வெவ்வேறு தோற்றம் காட்டும். கற்பனைக்கும் ஊகத்துக்கும் வளைந்து கொடுக்கும். ஒளி அப்படியல்ல, உண்மையானது. வன்மையானது. எல்லாருக்கும் ஒரே நிஜமாய்... நிறமாய்...தோற்றமளிக்கும். ஒளி என்றாலே சுயமானது சுத்தமானது...மாசு மருவற்றது என்பதால், தன்னைத் தானே தெளிவாக எளிமையாகக் காட்டிக் கொள்ளும். பிறவற்றையும் தெளிவாக்கும். இருட்டு. எல்லாவற்றையும் மறைக்கும்...கண்ணையே கட்டும்.

பூங்கிளியின் சிந்தனை...தறிகெட்ட காட்டாறாய்... வரைமுறையற்ற பாதையாய்...வரம்பற்றுப் பாய்ந்தது. அப்படிப் பாயவிடுவதிலுள்ள சுதந்திரம், அவளுக்குப் பிடித்திருந்தது.

உச்சிவெயிலாய்ச் சுட்டெரிக்கும் அப்பாவுக்குள்ளும் உட்கார்ந்திருக்கிற ஒரு நிலா. குளிர்ச்சியான நிலா. பாசமுள்ள நிலா...இனிமையும் கனிவும் இரண்டறப் பின்னிப் பிணைநத நிலா...

பதினோரு வயசாகும் வரை கட்டிலில் கூடப் படுக்கச் சொன்ன நிலா. பாசக் குழைவாய் வருடி... 'காலை

மேலே போட்டுக்க' என்று அன்பைப் பொழிந்த நிலா· ராஜா-ராணி கதைகள் சொன்ன நிலா—புலி சிங்கம், பூனைக் கதைகள் சொன்ன நிலா...எல்லாக் கதைகளிலும் ஒழுக்கமுள்ளோர் வெற்றி பெற, ஒழுக்கமற்றோர் தோல்வி யுற்ற நடப்புகளையே சொன்ன நிலா...செத்துப்போன அம்மாவின் அருமையை உணரவிடாமல், அருமையைப் பொழிந்த நிலா...

அப்பா ..நிலாவா, சூரியனா? அசலில் அப்பா எது? நிலா நிஜமா...சூரியன் நிஜமா? கோபமாய் அதட்டி, அடித்து, அரட்டிப் பயமுறுத்துகிற சூரியன் நிஜமா? கதை சொல்லிப் பண்பை வளர்த்து, அம்மாவாய் அன்பு காட் டிய நிலா நிஜமா? ரெண்டுமே அப்பாதானா? ரெண்டில் எது அசல்? எது வரித்துக் கொண்டது?

இல்லை...ரெண்டுமே அப்பாதான். அச்சுறுத்துகிற வரும் அப்பாதான்...ஆராதனைக்குரியவரும் அப்பாதான் அம்மாவாகவும் இருந்து நிலா வெளிச்சம் பொழிய வேண் டிய மனக்குழைவில் நிலாவாகிப் போனார். தந்தைக்குரிய பாச உணர்வில் இயல்பாகவே நிலாதான். முன்கோபம் என்கிற விஷயத்தில் மட்டுமே சூரிய சுபாவம். ஒழுக்கமாய் பெண்ணை வளர்க்க வேண்டுமே என்கிற பயத்தின் காரணமாய் வெளிப்பட்ட அதட்டல், மிரட்டல், அடி· எல்லா சூரிய குணங்களும்...

நாதியற்றுப்போய் சுற்றியலைந்து வந்த ஒரு கறுத்த மேகத்துண்டு, நிலாவை மறைத்து நிழலை உண்டாக்கி யது. மறைத்த மேகத்துக்கும் இரக்கப்பட்ட நிலா, அந்த மேகத்தின் விளிம்புகளுக்குத் தங்கமுலாம் பூசித் தகதகக்க வைத்தது.

நிலா நகர்கிறதா...மேகம் நகர்கிறதா? நிலா ரொம்ப வகமெடுத்து விரைகிற மாதிரியானதோர் தோற்றம்...

நிலா உடைந்து, சதுர சதுர ஒளித்துண்டங்களாய் குவிந்து கிடக்கிறது. ஒவ்வொரு ஒளித்துண்டாக எடுத்து, வசந்தன்...வாங்கி வாங்கி அடுக்கி சாந்தைப் போட்டு இழுவுகிற கொத்தனார். சாந்தும் ஒளி நிலவாய் பிரகாசிக்கிறது.

ஒளிச் செங்கல்களாய் உயர்கிற நிலாச் சுவர். நிலாச் சுவரில் பெரிய பெரிய எழுத்துக்கள். 'பேசு பெண்ணே' என்று பேசுகிற நிலாச்சுவர். 'வெடிப்புறப் பேசு' என்று நெஞ்சுக்குள் சத்தமாய் கிசுகிசுக்கிற நிலாச்சுவர். ரொம்ப அன்பான நிலா...அம்மாவைப் போல மிருதுவான நிலா... மனசுக்குள் ஊடுருவி, அங்குள்ள பய இருட்டைத் துழாவித் துடைத்து, கருணையைப் பொழிகிற நிலா...

நிலாச்சுவர் முழுக்க வசந்தனின் முகம்...தென்றல் முகத்தில் அரும்பு மீசை...அவனது கனிந்த—பொருந்திய உதடுகளில், புன்னகை நிலா...ஆழ் மனசில் மயிலிறகாக வருடிச் சிலிர்க்கச் செய்கிற நிலாப் புன்னகை...

அவன் மெள்ள மெள்ள உறக்கத்தில் புதைய... தென் திசைக் காற்றின் மெல்லிய பாடல் காதோர ரோமங்களுடன் அந்தரங்கம் பேச...அவள் காலடியில் வெட்டுப் பட்ட தலை மட்டும் வந்து விழுகிறது. பார்த்தால் முனியம்மா தலை.

கனவு கலைந்து திடுக்கிட்டு எழுந்தாள் பூங்கிளி.

10

காற்று சுகமாக அடித்தது. மனசுக்குள் மெல்லிய கீதமாய் ஊடுருவிப் பாய்ந்து பரவுகிற காற்று. ஓட்டு வீட்டின் இறுக்கமும் புழுக்கமும் எரிச்சலாய் இருக்க, கட்டிலைத் தூக்கி முற்றத்தில் போட்டுப் படுத்திருந்தான்

வசந்தன். காற்றின் கிசுகிசுப்பான மென்தழுவல். நிலாவின் புன்னகைக் குளிர் வெளிச்சம். சட்டையில்லாத உடம்பின் ரோமக் கால்களில் முட்டி உரசுகிற சின்னக் காற்று.

அவனுக்குள் முட்டிக்கொண்டுநிற்கிறகவிதைஉணர்வு... உள்ளுக்குள் மாயக் கற்பனைகள்...நிலவின் தகதகப்பை பால்நில வெளிச்சத்தின் அமைதியை, காற்றின் ஸ்பரிச மென்னகையை வார்த்தைப்படுத்திப் பார்த்தான். வார்த்தைகள் முழுவதும் வற்றிப்போன மாதிரியான ஒரு வெறுமை...தேடித் தேடியலைகிற மனம்... பின்பக்கமாய் வந்து தொட்டுவிட்டு ஓடி ஒளிந்து கொள்கிற சொற்கள்... வார்த்தைகளின் தொடர் கண்ணாமூச்சி.

கண்ணாமூச்சி விளையாட்டில் களைத்துப்போன இவன், தோல்வியின் ஒப்புதலோடு அயர்ந்து போய் நிலாவைப் பார்த்தான். அவனது தோல்வியைப் பரிகசித்துக் கைதட்டிச் சிரித்துக் குதிக்கிற வார்த்தைகள்.

பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரத்தின் வரிகளில் மனம்.

'என்னருமைக் காதலிக்கு வெண்ணிலாவே-நீ இளையவளா மூத்தவளா வெண்ணிலாவே...'

காதலி மயக்கத்தில் திளைக்கிறபோதுகூட கவிதையின் குறும்பு... கொழுந்தியாளிடம் விளையாடிப் பார்க்கிற கேலி...நிலாவைச் சீண்டுகிற நையாண்டி... ''நீ எனக்குக் கொழுந்தியாளா, மதினியா'' என்று வினவுகிற சேட்டை.

இத்தனை நுட்பமான நளினக் கற்பனையை எளிய வழக்குச் சொற்களில் பூவை வீசுகிற மென்மையோடு

சுண்டியெறிகிற நேர்த்தி... மகாத்மா பண்பை எளிய தோற்றத்தில் வெளிப்படுத்திய காந்தியைப் போல...

துளசிச்செடி போன்ற இப்பேர்ப்பட்ட கவிஞனை 'கவிஞனே இல்லை' என்று சொல்லத் துணிகிற சில விமரிசகர்களின் அத்துமீறல். அற்புதக் கவித்துவத்தை அடக்கமாய் வெளிப்படுத்துகிற கிராமத்துப் பாமரனை அங்கீகரிக்கத் தயங்குகிற நகரத்துப் படிப்பாளிக் கர்வம்...

வசந்தனுக்குள் நீள்கிற நினைவுகள்...குறியற்ற திலசயில் அர்த்த அடர்த்தியில் தன் போக்காய் நீள்கிற நினைவுகள்...சுற்றிச் சுழன்று வட்டமடித்து பூங்கிளியிடம் வந்து மண்டியிடுகிற நினைவுகள்...

ராஜபாளையத்தில் பாரதியார் கவிதைகள் என்று ஒரு நூல் விலை கொடுத்து வாங்கினான்.

'அன்பு நண்பன் வசந்தனுக்குப் பாசத்துடன் பாலரமணி...'

புத்தகத்தின் முதல் பக்கத்தில் ஒரு நண்பனை விட்டு இப்படி எழுதச் சொல்லி, அந்தப் புத்தகத்தை வாத்தியார் ரத்தினவேலுவிடம் தந்தான்.

''என்னப்பா...இது?''

''ஒரு பிரண்டு இந்த புக்கை எனக்கு அன்பளிப்பா குடுத்தான்...''

''நீயே வைச்சுக்க வேண்டியது தானே?''

''இல்லே சார்...ஏற்கெனவே எங்கிட்டே இதே புக் இருக்கு சார்...இதை நீங்க வெச்சுக்கங்க. ரெஸ்ட்டான டயத்துலே படிச்சுக்கலாமே...''

''அதுவும் சரிதான்...''

இவனுக்குள் ஒரு தந்திரத்தில் வெற்றி பெற்ற சந்தோஷம்...பூங்கிளி படிப்பதற்காக பாரதி புத்தகம் ஒன்றை வழங்க ஆசைப்பட்டான். நேரில் தருகிற தைரியம் வரவில்லை. சுற்றி வளைத்து ஜாடை மாடையாய் கொடுத்து விட்டான்.

பூங்கிளி படிப்பாளா? பாரதியின் கவிதைகளில் லயிப்பாளா?

அவனுள் புல்லரிப்பாக ஓடுகிற பரவசச் சிலிர்ப்பு. நிலா வெளிச்சத்தைப் பார்த்தான். படப்புகளில்—வேப்ப மரத்தில் படிகிற வெளிச்சம் ... அதன் நிழல்கள்... இருட்டற்ற கருமை. வீட்டின் முன் சுவரில் ஊர்கிற ...ற்றைப் பல்லி...இரை கண்டுவிட்ட அதன் மகிழ்ச்சி... மெதுவாகப் பம்மி நகர்கிற அதன் எச்சரிக்கை...சிலிர்ப்போடு பாய்கிற வேகம்...தப்பித்தோடிவிட்ட பூச்சி.

பூங்கிளியும் அப்படியாகி விடுவாளா? ஏமாந்த பல்லியாக இவன் நிற்க நேர்ந்திடுமா?

சார் பழக்கத்தில் சமீபமாய் முகம் காட்டுகிற மாற்றம்...வித்தியாசம்...வயிற்றில் புளியைக் கரைக்கிற மாற்றம்...வசந்தன் அவருக்குச் சமீபமாய்ப் பிடிக்காமல் போன மாதிரி தெரிகிறது. இவனது காரியம் எது அவருக்குப் பிடிக்கவில்லை?

கவிதை பிரசுரமான விஷயம் குறித்த பாராட்டைக் கூடச் சொல்லவில்லை. மௌனத்தில் அதை மூழ்கடித்து விட்டார். ஒருவேளை, இவனது கவிதை பிடிக்கவில்லையோ...கவிதையில் வெளிப்படுகிற சமுதாய அக்கறையை அவர் ரசிக்கவில்லையோ?

சொன்னால் பணிய மாட்டான் என்பதால், வெறுப்பு உணர்வை வார்த்தையாக்காமல் இருக்கிறாரோ...உபதேசிக்காமல் கௌரவமாய் ஒதுங்குகிறாரோ...ஒதுங்கு

வதன் மூலம் இவனை அந்நியப் படுத்துகிறாரா? அந்நியப்படுத்தலே இவனுக்கான உணர்த்தல் முறை என்று தந்திரம் கடைப்பிடிக்கிறாரா?

வசந்தனுக்குள் மெல்லிசான படபடப்பு ... முகம் காட்டுகிற அச்ச உணர்வு...பூங்கிளி தூரம் தூரமாய் நகர்ந்து செல்வதாய்ப் பிரமை. இவனுக்கும் அவளுக்குமான இடைவெளி பிரமாண்டமாகிறது.

வாத்தியார் சாரின் வெறுப்பு. இவனது தொழிற்சங்க ஈடுபாடு மீது இருக்குமோ?

'பூங்கிளியை வசந்தனுக்குத் தந்தாலென்ன?' என்கிற எண்ணம் அரும்பவே விடாமல் செய்து விடுமா, அவரது வெறுப்பு? அதற்காகத் தொழிற்சங்க ஈடுபாட்டை இழப்பதா? சமூகச் செயல்பாடுகளைச் சுருக்கி, ஒடுங்கிக்கொள்வதா? முடியுமா... சாத்தியமா? ஓர் ஆலைத் தொழிலாளியால் அது இயலுமா? தான் உண்டு தன் பாடுண்டு என்று அற்ப சுயநல உணர்வோடு நத்தையாக உள் ஒடுங்க முடியுமா?

ஆலைத் தொழிலாளி என்பவன், மனிதகுல வளர்ச்சியின் நீட்சியில் மிக மிகப் புதியவன். நவீனமானவன். இந்த யுகத்தின் நவீனப் படைப்பு அவன். விஞ்ஞான யந்திரங்களின் இயக்கத்தில் உயிர்ப்பு கண்டவன்.

இவனது தொழில் நரம்புகள் சமுதாயத்தின் சகல மூலைகளுக்கும் ரத்தம் அனுப்புகின்றன. இந்த நரம்புகளின் சிக்கல், சகல மூலைகளிலும் பிரதிபலிக்கும். சமுதாயத்தின் அதிர்வுகளும் நரம்புகளைத் துடிக்கவைக்கும். சமுதாயமயமாகிப்போன இவன், இயல்பிலேயே நடப்புலகத்தின் தலைவன். இவனால் எப்படிச் செயற்கையான ஒரு வட்டத்துக்குள் ஒடுங்கிக்கொள்ள முடியும்? நரம்புகளை அறுத்துக்கொண்டு எப்படி உயிர் வாழ?

அப்படி உயிர் வாழ்ந்தாலும் அது வாழ்க்கையாகுமாக ஒளியை இழந்த கண்களாக, உஷ்ணமிழந்த நெருப்பா?

இயல்பற்ற பிழைப்பில் என்ன அர்த்தம் இருந்துவிட முடியும்?

பூங்கிளிக்கு விலை - இவனது சுயமா, அசலா?

வாத்தியாரைக் கடந்து பூங்கிளியின் மனதில் இடம் பிடித்தால்... அவள் வசீகரிக்கப்பட்டால், சுயத்தை இழக்காமலேயே பூங்கிளியைக் கிரீடமாகப் பெற இயலும்.

அது நடக்குமா? சாத்தியமாகுமா?

ஆழ்ந்த பெருமூச்சோடு வெளியுலகுக்கு வந்தான். நிலா வெளிச்சத்தை உணர்ந்தான்.

பூங்கிளி இவனை எப்படி ஈர்த்தாள்? இவ்வளவு தூரம் இவனை அலைக்கழிய வைக்கிற அளவுக்கு எப்படி வசீகரித்தாள்? அவளது அழகா? தேக சௌந்தர்யமா? நிலவைப் பழிக்கும் அவளது முகமா? தேகக் கச்சிதமா? தித்திப்பூவின் மலர்ச்சி வண்ணமா? எது... எது... எது...?

இல்லை... இல்லை... இந்த அழகல்ல... இந்த வெளி சமாசாரமல்ல... காரணம்.

தாயற்ற சிறுமியாய் - உணர்வு ரீதியான தனிமையில் அநாதையாய் வளர்ந்தவள் என்கிற இரக்கம்... வாத்தியாரின் முரட்டுத்தனமான அதட்டல்களிலும், அடிகளிலும் அதிர்ந்து அதிர்ந்து பயமே சுபாவம் என்று மாறிப்போன அவளின் நிலை குறித்த பரிதாபம்.

மனசறிந்து, உணர்வின் மெல்லிய துடிப்பறிந்து அன்பும் பாசமும் செலுத்திப் பராமரித்து, அவளுக்கு அவளது மகிழ்ச்சியை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் உணர்ந்த கருணை உணர்ச்சி...இவைதான் நிஜம்.

மனப்பாலைவனமாய்த் தகித்துக் கிடக்கும் அவளது உள் உலகத்தில் அன்புச்சுனையாய்ப் பரவவேண்டிய தேவை உணர்ந்த பரிவு. ஆத்மாவின் உள்பசியை உணர்ந்த ஆத்மாவின் துடிப்பு.

இதுதான் நிஜமான காதலா? காதலின் இலக்கணமே இதுதான்ா? சரி, அவளுள் இந்த ஊற்று உண்டா? இவனைப் பற்றி என்ன நினைக்கிறாள்? எப்படி அறிய?

குழப்பம் சூழ்ந்த எண்ண நீட்சியே உறக்கமாய் வந்தது.

இயல்பு நிலைக்கு வரமுடியவில்லை முனியம்மாளுக்கு. சகிக்கக்கூடாததைச் சகித்துக்கொள்ளும்படி நிர்ப்பந்தப் படுத்துகிற சமூகச் சூழல். இதற்குப் பணிந்து நடப்பது அவமானமாக உணர்கிறாள்.

அவளுக்குள் உயிர்ப்பு இல்லை. யந்திரமாய் நகர்ந்தாள். ஆக்கி அவித்தாள். மாமியாருக்குக் கொட்டினாள். ராக்கப்பனுக்கும் கொட்டினாள்.

ஆனால், அவள் வாழவில்லை, மனம் ஒன்றிய வாழ்க்கை வாழவில்லை. கடனே என்று சுமந்து கழித்தாள், நாளையும் பொழுதையும்.

வேலைகளெல்லாம் முடித்து, படுக்க ஒன்பது மணியாகிவிட்டது. ஒரு உறக்கம் உறங்கி முழித்துவிட்டாள். பக்கத்தில் ஆணின் ஸ்பரிசம். ஒருக்களித்துப் படுத்திருந்த நிலையில் திரும்பிப் பார்த்தாள்.

ராக்கப்பன்... இடுப்பின் குறுக்கே கைபோட்டு வயிற்றை வருடினான், இவளுக்குத் தீப்பட்ட மாதிரி எரிந்தது. மனசெல்லாம் தீக்காடு. சட்டென்று விலகிக் கொண்டாள்.

''என்ன?''

வெளிப்பட்ட அவளது வெறுப்பு உணர்ச்சி, அவனுக்குச் செருப்படி பட்டமாதிரி அவமானமாயிருந்தது.

''என்ன னொன்ன... தொடக் கூடாதா?''

''அதுக்குத்தான்...ராமக்கா இருக்காள்லே?''

''தாலி கட்டுனது அவளுக்கா?... ஒனக்குத் தானே?''

''தாலிக்குக் கட்டுப்பட்டு இருக்கணும்லே?''

''பொம்பளைக்குத்தான் தாலியும் கட்டுப்பாடும்... தெரியுமா?''

''கட்டுற ஆளுக்குக் கட்டுப்பாடு இல்லியோ?''

''இல்லே...முருகனுக்குத் தெய்வானையும் வள்ளியும் இருக்கலே? தெய்வானையைவிட நீ ஒசத்தியா?''

''பாஞ்சாலிக்கு அஞ்சு பேரு இருந்தாக...நானும் வெச்சிக்கிடட்டா? நீரென்ன... அர்ச்சுனரைவிட ஒசத்தியா?'

''ஏய்ய்...'' என்ற வீறிடலோடு எழுந்தான். ஆத்திர வெறி. போக்கிடமற்ற குருட்டுக் கோபம். எழுந்த வேகத்தில் ஓங்கி அவளை ஒரு மிதி மிதித்தான்

''பேச்சா பேசுதே? யார்கிட்டே பேசுதே? வெட்டிப் பொளந்துருவேன், பொளந்து...அஞ்சு பேரா வேணும் ஒனக்கு? அம்புட்டு மப்பா ஒனக்கு?''

சாமக்காட்டின் அமைதியைக் கிழித்துக் கேவலப்படக் கூடாதே என்று சத்தமில்லாமல் அழுதாள். பெத்த ஆத்தாவை எண்ணி, படைச்ச பிரம்மனை எண்ணி, வர்ய்ச்ச தலையெழுத்தை எண்ணி, விக்கி விக்கி அழுதாள்.

நேரம் ஊர்ந்தது. நத்தையாய் நகர்ந்தன சில நிமிஷங்கள்—மீண்டும் ராக்கப்பன், அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். தொட கை நீள்வதை மனசால் உணர்ந்தாள் முனியம்மா. இறுகலான சீறலாய் சீறினாள்

"மானரோசமுள்ள ஆம்பளையா இருந்தா... என்னைத் தொடக்கூடாது...ஆமா சொல்லிட்டேன்."

"ச்சேய்..." என்று வெறுத்துப்போய் சீறினான். விரக்தியின் விளிம்பில் வருகிற எரிச்சல்...தேகமெல்லாம் தீயாய்ச் சுட்டுத் தகிக்கிற எரிச்சல்.

விருட்டென்று எழுந்தான் ராக்கப்பன். கதவைத் திறந்து, டபாரென்று அறைந்து சாத்திவிட்டு, தெருவில் இறங்கினான்.

கிராமத்து ஜாமத்தில் முனியம்மா உறக்கமின்றி அவலத்தை நினைத்து அழுது புலம்ப...அவன் ராமக்கா வீட்டுக்குள் நுழைந்தான்.

உறக்கச்சடவு நீங்காத நிலையில் ராமக்கா கொட்டாவி விட்டாள்...

"என்ன வந்தது?"

"சும்மா தான்..."

வயது முப்பத்தைந்து இருக்கும்...வயது தோன்றாத கட்டு விடாத தேகம்...கறுப்புத்தான் என்று கழித்துக் கட்ட முடியாத கறுப்பு. ஒரு வகையான புது நிறம் கன்னக் கதுப்பில் படர்ந்திருக்கிற கறுப்புத் தேமல் அதுவே அவளுக்கு ஒரு லட்சணம்.

அவள் வெறுப்பும் அலட்சியமுமாய் பார்த்தாள்.

"தெறந்த வூட்லே நாய் நுழஞ்சமாதிரி வந்தா என்ன அர்த்தம்...?"

அவனுக்குள் அதிர்வு...இங்கும் இப்படியா? தன்னைத் தானே ஓர் அவலமாய் உணர்ந்தான் நாதியற்றுப்போன உணர்வு...

"அப்போ...நா வரக்கூடாதா?"

''வந்தா பொம்பளையை மதிச்சு வரணும். அதான் பெருமை, சந்தோஷம். போக்கத்துப்போய் வரக்கூடாது. அங்க விளக்கமாத்து அடி வாங்கிக்கிட்டு இங்க வந்தா என்ன அர்த்தம்? விளக்கமாத்தைவிட நா மட்டமா?''

''மட்டம்னு யாரு சொன்னது?''

''இனி...சொல்லவேற செய்யணுமாக்கும்? நடக்குற நடப்புலேயே தெரியலே? ஊரு ஒறவு பூராத்தையும் பகைச்சுக்கிட்டேன்...சொந்தபந்தக்காரங்களை அண்ட விடாம ஆக்கிட்டேன்...இதுக்குக் கெடைச்ச பலன் இது தான்...''

ரெண்டாம்பட்சமாய் தான் ஆக்கப்பட்டதில் புண் பட்டுப்போன அவளது உணர்ச்சி...பெண்மைக்குரிய சீற்றம்.

ராக்கப்பனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அழுகை அழுகையாய் வந்தது. அப்படியே சோர்ந்துபோய், சற்றுத் தள்ளிக்கிடந்த குத்துரலில் உட்கார்ந்தான். உள்ளங்கைகளில் முகம் புதைத்து...உடல் குலுங்கினான்.

கர்வம் எல்லாம் உடைந்து ஒரு நாதியற்ற குழந்தை போல அழுகிற முழுத்த ஆண்மகனைப் பார்த்தாள். இளகிக்கொண்டிருந்த மனசை இறுக்கமாக்கிக் கொண்டு கேட்டாள்.

''என்ன அழுகையா?''

''ப்ச்ள்ச்சூ...''

வெள்ளைச் சட்டையை மாட்டிக்கிட்டு...பொண்ணு பாக்கப் போகையிலே இந்தப் புத்தி இருந்துருக்கணும்...''

''அதான்...நா செய்ஞ்ச மடத்தனமே...''

''அன்னிக்கு நா படிச்சுப் படிச்சு சொன்னேன்லே? வேண்டாம் வேண்டாம்னு மறுகித் தவிச்சேன், கேக்கலே.

இப்ப என்னாச்சு? எனக்கு வீண் பொல்லாப்பு. ஒரு பொண்ணோட குடியைக் கெடுத்த பாவின்னு எனக்குப் பேரு. தேவையா?''

''அதான்...தப்பு...அப்ப எங்கம்மா பேச்சைக் கேட்டது மடத்தனம்...''

அவனுக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. எடுப்பார் கைப்பிள்ளையாகிப் போனோம் என்கிற சுய உறுத்தல்.

...சிரித்துச் சிரித்துப் பேசினாள் ராமக்கா அப்போது! 'கொழுந்தா...கொழுந்தா' என்று விரட்டிக் கேலி பண்ணினாள். கேலி பண்ணிச் சிரித்து ஆளைச் சாய்த்தாள்.

''வீட்லே நாலு மூடை கம்பு கெடக்கு...அதைப் பெரட்டி உள்ளே போட்ரணும். கொழுந்தா...வந்து மூடையைத் தூக்கிப் போட்டுருங்களேன்...''

அறைக்கு மூடை தூக்கிப்போடப் போனவன்தான்...

இவனும் இளவட்டப்பயல். பேயாய்த் திரிந்தான். இப்ப என்னடாவென்றால்...மூலை மூலைக்குப் பந்தாடுகிறார்கள்...இவன் கிடந்து சீரழிய வேண்டியதிருக்கிறது.

''சரி...அப்ப நா போறேன்...''

''எங்க?''

''வீட்டுக்குத்தான்...''

''சாப்ட்டாச்சா?''

மெள்ளத் திரும்பினான்.

எங்கோ ஒரு மூலையில் இளக்கம் காணுவதாய் ஓர் உணர்வு. அவனுள் சலனம், சபலம். பொய் சொன்னான்.

''சாப்டலை...''

''அப்ப...சாப்ட்டுப் போவலாம்...''

எழுந்தாள். சோறு வைத்தாள், இவனும் உட்கார்ந்து சோற்றைப் பிசைந்தான்.

பக்கத்தில் உட்கார்ந்தாள் ராமக்கா. அவள் முகத்தில் கவலை ரேகைகள்...கண்களில் பயத்தின் நிழல்...ஏதோ யோசிக்கிற தீவிரம்.

''என்ன...?'' என்றான்.

''பயமாயிருக்கு ..''

''என்ன...பயம்?''

''பழனிச்சாமி பாக்குற பார்வையே சரியில்லே.''

பழனிச்சாமி என்பவன், ராமக்காவின் புருஷனின் ஒன்றுவிட்ட தம்பி. ராமக்காவின் சொத்து அந்நியப் பயலான ராக்கப்பனுக்குப் போவதில் அவனுக்குச் சம்மத மில்லை. மற்ற உறவினர்களெல்லாம் சண்டை சத்தம் போட்டுவிட்டு, கேவலத்துக்கு அஞ்சி ஒதுங்கி விட்டனர்

''உதிர்த்துன கழுதை, ஊருக்குப் பெரிய கழுதை அதுகூட எதுக்கு வம்பு?'' என்று விலகிக்கொண்டு தன் பாடு ஜோலிகளைப் பார்க்கத் துவங்கி விட்டனர்.

அப்படி ஒதுங்குகிறவனாகப் பழனிச்சாமி தெரிய வில்லை. ''ரெண்டில் ஒன்று பார்க்காமல் விடுவதில்லை'' என்று கறுவிக் கொண்டிருக்கிறான்...

ராக்கப்பனுக்குள்ளும் ஜில்லிடுகிற பய உணர்வு கிலியைக் காட்டிக் கொள்ளாமல், சமாளித்தான்.

''அப்படியா? அவனாலே என்ன செய்துற முடியும்?''

''யாரையாச்சும் சாய்க்காம, அவன் ஓயமாட்டான். அவனைப் பாக்குறப்பவெல்லாம் எனக்கு 'பக், பக்'குன்னு வருது... குலையே நடுங்குது...''

''கொலைக்குற நாயி கடிக்காது. பயப்பட வேண்டாம்...''

''சரி...பாத்துக்குவம்...''

சாப்பிட்டு முடித்துவிட்டு அவன் போகவில்லை. அங்கேயே படுத்துக் கொண்டான்!

11

தாலியறுத்து விதவையாக வீடு திரும்பிய ஆறு மாதத்துக்குள். சுப்புத்தாய் இப்படி 'ஊர் வாயில்' விழுவாள் என்று நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை பூங்கிளிக்கு மனசு சகிக்கவில்லை. நினைக்க நினைக்கக் கொதித்தது.

...சீமான் வீடா? விதவையாகிப் போன துக்கத்தை எத்தனை நாள் கொண்டாடுவது? வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக்கவா முடியும்? வயிற்றில் ஈரத் துணியைக் கட்டிக்கொண்டா படுக்க முடியும்?

வறுமையும் பசியும் சுப்புத்தாயின் துக்கத்தைக் காலில் போட்டு மிதித்துவிட்டு, 'கூலிவேலைக்குப் போ' என்று புறங்கையால் அடித்துத் துரத்தின. வேறு வழி?

கூலிவேலைக்குக் காடுகரைக்குப் போக ஆரம்பித்தாள். நாராயணமூர்த்திதான் ஊரில் பெரிய சம்சாரி. தினந்தோறும் பத்துப் பெண்களுக்குக் குறையாமல் கூலி வேலைகளுக்குத் தேவைப்படும். பெண்களோடு சேர்ந்து அவரது புஞ்சைகளுக்குத்தான் பதிவாக வேலைக்குப் போவாள் சுப்புத்தாய்.

அவருக்குக் கல்யாணமாகி ரெண்டு பிள்ளைகள். நல்ல சிவப்பு. தேகமெல்லாம் அடர்த்தியாய் ரோமக்கட்டு. நல்ல குணமானவர். இரக்க சுபாவம்.

வேலைக்கும் போகத் துவங்கிய ஒரு மாதத்திலேயே புஞ்சையில் களை வெட்டு நடந்தது. வேலையை மேற்பார்க்க வந்திருந்த நாராயணமூர்த்தி கேலியும் கிண்டலுமாய் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள்—.

அம்மாவின் துணிமணிகள், இவளது உருப்படிகளை எல்லாம் அள்ளிக் கொண்டு நாராயணமூர்த்தி புஞ்சைக் கிணற்றுக்குக் குளிக்கப் போயிருந்தாள். கூடவே வேலைக்கு வருகிற மாரியம்மா...

"நீ முன்னாலே போய்க்கிட்டேயிரு நா பின்னாடியே வந்துருதேன்" என்றாள்.

அதை நம்பிப் போனாள். அவள் வரவேயில்லை. பம்ப்செட் ஓடிக் கொண்டிருந்தது. வெள்ளிக்கற்றையாய் தண்ணீர் தடதடத்தது.

துணிமணிகளை அலசித் துவைத்துக் கொண்டிருந்தாள் சுப்புத்தாய். நாராயணமூர்த்தி அப்போது வந்தார்.

ஒதுங்கிக்கொள்ளும்படி கையசைத்தார். தடதடப்புச் சத்தத்தைத் தள்ளி வந்தாள். அவளுக்குள் பயப் படபடப்பு.

"நா வெளியூருக்கு போவணும், குளிச்சிட்டுப் போயிருதேன்."

அவசர அவசரமாய் முங்கிக் குளித்தார். ரெண்டு நிமிஷத்தில் தலையைத்துவட்டிவிட்டு, தொட்டியைவிட்டு எழுந்து விட்டார்.

அவர் பம்ப்செட் மறைவில் ஒற்றையடிப் பாதையில் போய்விட்டார்.

சுற்றும்முற்றும் பார்த்தாள். துணி மணிகளை அலசி முடித்தாள். சுற்றிலும் ஒரு ஈக்குஞ்சுகூட இல்லை. சுதந்திரமாகக் குளித்தாள். பாவாடையை மார்பு வரை கட்டிக்கொண்டு... ஆளில்லை என்கிற தைரியத்தில் கூடு தலான விடுதலை உணர்ச்சியோடு நிதானமாகக் குளித்தாள்.

குளிக்கக் குளிக்கச் சுகமாக இருந்தது. குளித்து முடித்து விட்டு, துணி மாற்ற பம்ப்ஷெட் ரூமுக்குள் நுழைந்தாள். ஈரப் பாவாடையை மார்புக்குமேல் ஒரு கையால் பிடித்திருந்தாள்.

மூச்சு விடுகிற சத்தம்... அந்நியமூச்சு... ஆண் மூச்சு... அண்மையில் மூச்சு... பச்சென்று மனசு திடுக்கிட... அவள் திரும்புவதற்குள் ஓர் ஆண் தழுவல். அவள் தேக மெல்லாம் ரோமங்களின் உரசல்.

பதறிப்போய் அவள் கத்துவதற்குள்— திமிறுவதற்குள் ஆக்கிரமிப்பு. அத்து மீறலான அரவணைப்பு. விசு வாசத்துக்குரிய புஞ்சை முதலாளி. அவரா இப்படி என்று யோசிக்கக்கூட விடாத அவரது ஆவேசம்.

அவளுள் உறங்கிக்கிடந்த பூதம்... உணர்ச்சிப் பூதம். பசித்துப் பசித்து வெறியடங்காப் பூதம்.

அந்த பூதம் அடங்குகிறது. அலறுகிறது. தாளமுடியா மல் கதறுகிறது. ஐயா சாமி என்று மண்டியிட்டுப் புலம்பு கிறது.

எத்தனையோ முறை சீண்டப்பட்டு — உசுப்பப்பட்டு எழுந்த பூதம். இப்போதுதான் பணிந்து பம்மிக் கிடக் கிறது.

அவளது பெண்மை, இன்றுதான் முழுசாக முகு மலர்ந்திருக்கிறது. ததும்பி மகிழ்ந்திருக்கிறது.

பெண்ணாய்ப் பிறவியெடுத்த இன்பத்தை நுகர்ந்திருக்கிறாள்...

நாராயணமூர்த்தி போய்விட்டார். அவள் பம்ப்ஷெட் ரூமுக்குள்ளேயே கிடந்தாள். அவமானத்தை மீறுகிற நிறைவு. இழிவைத் தாண்டுகிற திருப்தி. வீழ்ச்சியை மிஞ்சுகிற மகிழ்ச்சி...

'நாளைக்கு இது வெளியே தெரிந்தால்...' வருகிற பயத்தை உணர்ந்தாலும் மனசின் மூலையில் ஒருசிலிர்ப்பு. ஆயினும்...

சத்தமில்லாமல் குலுங்கிக் குலுங்கி அழுதாள் சுப்புத்தாய். எதற்காக அழுகிறோம் என்றே தெரியவில்லை.

வீட்டில் வட்டிலில் போட்டு ஆற அமர உட்கார்ந்து ரசித்துச் சாப்பிட வேண்டிய சோற்றை... இப்படித் திருட்டுத்தனமாய்ச் சாப்பிடும்படியாகி விட்டதே என்கிற அவலத்தை எண்ணி அழுதாளோ?

ஆனால், அடிக்கடி சாப்பிட்டாள். பம்ப்ஷெட் மோட்டாரின் பின்னணி இரைச்சலில் சாப்பிட்டாள்.

ஊரின் கண்கள் ரொம்பக் கூர்மை... சலனத்திலேயே புயலை ஊகிக்கிற கூர்மை.

பேச ஆரம்பித்தது. பார்த்தும் பாராமல் பேசியது. நேரில்கூடப் பேசத் துவங்கியது.

முதலில் நடுங்கினாள். பதறிப் பதறிச் செத்தாள். அழுகையும் புலம்பலுமாய் ...பயலும் திகிலுமாய் நாளை கழித்தாள். அவமானத்துக்கு அஞ்சினாள்.

ஆனாலும் பம்ப்ஷெட் பக்கம் போகாமலிருக்க அவளால் முடியவில்லை. ஊரின் பேச்சுக்குப் பயந்து பயந்து நடுங்கிய சுப்புத்தாய். 'ஆமாம்... ரொம்ப யோக்கியம்தான். இந்த ஊர்லே எல்லாப் பொம்பளை

களும் உத்தமிகளாக்கும்? பத்தினிகளாக்கும்? பேச வந்துட்டாளுக' என்று நினைக்கவும் பேசவும் ஆரம்பித்து விட்டாள்.

எல்லாவற்றையும் கடந்த பின்னாலும் கூட. நெஞ்சின் ஆழத்தில் ஒரு முள்ளின் உறுத்தல். 'ஒருநல்ல குடும்பத்துக்குள்ளே சனியனாய் நுழைஞ்சிட்டோமோ...'

நாராயணமூர்த்தி வீட்டில் அவ்வப்போது வருகிற சண்டை... சத்தம். பெரியவீடு என்பதால் சத்தம் வெளியே வராவிட்டாலும்... அதன் தொனிகள்...

உண்டுமுடித்துப் படுத்தால்...மனசுக்குள் அந்த முள்... உறுத்துகிற முள்...முள்ளை நனைத்துக் கொண்டு கசிகிற ரத்தம். சத்தமில்லாமல் அழுவாள்...சுப்புத்தாய்.

அந்த முள்ளின் வேதனையையும் கடந்து பம்ப்ஷெட்டுக்குப் போகத்தான் செய்கிறாள்.

உடம்புக்காக மட்டுமல்ல...வேறு என்றும் இருக்கிறது. முக்கியமானது. அத்தியாவசியமானது. மறுமணம் என்கிற நேர்வழி தடைசெய்யப்பட்டிருப்பதால், குறுக்குவழியிலாவது பெற்றுத் தீரவேண்டிய அத்தியாவசியம்.

பூங்கிளி வந்து சிறிச்சிறிப் பேசினாள். ''ச்சீ...நீயும் ஒரு பொண்ணா? ஒரு குடும்பத்தையே நாசமாக்குறியே... ஒனக்கு வெக்கமாயில்லே? பாவம்னு தெரியலே?''

ஆத்மாவின் அலறலாய் அவள் அந்தச் சீறு சீறிப் பேசியவுடன் மௌனமாய் அழுது கரைந்த சுப்புத்தாய்— காய்ந்த உதடுகளை மெள்ள அசைத்தாள்.

''ஏண்டி...எங்க அம்மா செத்துட்டா...அதுக்குப் பெறகு எனக்கு யாரு ஆதரவு? யாரு பாதுகாப்பு? எனக்கு நாதி நாத்தங்காலா யாரு இருப்பாக? சொல்லுடி... சொல்லு...அதுக்குத்தா இவரு...''

பூங்கிளி அதிர்ந்து ஆடிப்போனாள். அவள் கேள்வி யின் உக்கிரமத்தில் ஊமையாகிப் போனாள்.

எங்கோ சேவல் சிறகடித்துவிட்டுக் கூவுகிற சத்தத் தில் ராமக்காவுக்கு முழிப்பு தட்டிவிட்டது. எழுந்தாள் அவிழ்ந்து கிடந்த தலைமுடியை உதறி முடிந்தாள். பக்கத் தில் ராக்கப்பன். தூக்கச்சடவோடு கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தாள்.

சாணம் எடுக்கணும். முற்றம் தெளிக்கணும். மாடு களுக்குக் கூளம் போடணும். பால் பீய்ச்சணும்...

இருக்கிற வேலைகள் மனசுக்குள் தோன்ற, ஆயாச மாக இருந்தது. முடங்கிக்கிடந்தால் எம்புட்டுச் சுகமாக இருக்கும் என்று முகம் காட்டுகிற ஏக்க உணர்வு.

அதையும் ஒரு பெருமூச்சாய்க் கடந்தாள். வெளியே வந்தாள், கதவைத் திறந்து. கட்டுக்குலையாமல் கனத்து நின்ற இருட்டு. கீழடிவானத்து மேகங்கள் கருஞ்சிவப்பாய் முகம் மாறியிருந்தன.

தலைவாசலுக்கு வலதுபுறம் தொழுவம். விரிந்து பரந்த மாட்டுத் தொழுவம், இவள் உள்ளே நுழைவதற்கு முன்பே—பசு மாடுகள் வெருண்டு தடதடக்கிற சத்தம்... கயிற்றை இழுத்துக்கொண்டு திமிருகிற பயவெறி.

இவளுக்குள் ஏதோ ஒரு சந்தேகம்...அடிமனசில் குறு குறுக்கிற திகில்...“என்னாச்சு இதுகளுக்கு? ஏன் இப்படி வெருளுதுக? ஏதாச்சும் பூச்சி கீச்சியைப் பாத்துருச்சா...?”

இவளுக்குள் வெளிப்படுகிற எச்சரிக்கையான முணு முணுப்பு. வீட்டுக்குள் திரும்ப வந்தாள். கழற்றிப் போட்டிருந்த பேட்டரிக்கட்டைகளைப் போட்டுக் கொண்டு டார்ச் லைட்டோடு மறுபடியும் தொழுவுக்குள் நுழைந்தாள். மாடுகளின் முன்பக்கமாய்ப் போய், காடி

யில் டார்ச் லைட்டை அடித்துப் பார்த்தாள் சந்தேகப் படும்படியாக ஒன்றுமில்லை. என்ன ஏது என்று புரியாத குழப்பத்தில் யோசித்துக் கொண்டிருந்தபோது—

அவள் முகத்தில் டப்பென்று வந்து விழுந்த துண்டு... துண்டு விழுந்த கணத்திலேயே முகம் முழுவதும் மூடப் பட்டு...பின்பக்கத்தில் வேகமாக முறுக்கப்பட்டு...

பதற்றத்தில் அவளுக்குள் பந்தாகச் சுருண்ட உயிர் பகீரிட்ட மனசுக்கு அலறக்கூட அவகாசமில்லை. அலற முடியவில்லை. கண்களையும் நாசியையும் உதடுகளையும் இறுக்கி அழுத்துகிறது துண்டு முகமூடி.

உயிர்காப்புப் போராட்டத்தில் திமிறுகிறாள். முறித்து இழுக்கிறாள். உஹூம், முடியவில்லை. மீள்வதற் கான போராட்டத்தில் முகத்தை அண்ணாந்து திரும்பிய கணத்தில்— .

முகத்தின் குறுக்காக வந்து விழுகிற அடி. விறகுக் கட்டையின் ஓங்கிய அடி. உயிர்ப் பறவை றெக்கை யடிக்க நாசியில் ரத்தம் கசிகிற ஈரப்பிசுபிசுப்பு. அவ்வளவு தான். எல்லாம் இருண்டு விட்டது. ராமக்கா என்ற பெயரில் இருந்து வந்த அந்த உடம்பு துவண்டு சரிந்தது.

கீரிச்சான் பறவை இருட்டு வெளுக்கிற பயத்தில் கீச்சிடுகிறது. ஆந்தை ஒன்று நாராசமாய்க் கத்திக் கொண்டு, றெக்கையடித்துத் தொழுவத்தின் முகடுக்குள் பதுங்குகிறது.

முற்றம் தெளிக்க ஓசிச்சாணம் எடுக்க ராமக்காவின் தொழுவத்துக்குள் நுழைந்த ஒரு பெண், உயிரறுந்த குரலில் வீறிட்டுக் கதற...பீதியூட்டும் அந்த வினோதக் கதறலில் மொத்த கிராமமும பதறிபடித்துக் கொண்டு வர...

ஒரே மனிதக் கசகசப்பு...அதிர்ச்சியும் திகைப்புமாய்ப் புலம்பித் தவிக்கிற ஜனங்கள். புலம்பக்கூடப் பதறிப்போய் அச்சத்தில் மூச்சு முட்டிப் போய் நிற்கிற பெண்கள்...

தொழுவத்துக்குள்—

மாடுகளின் காலடியில் ராமக்காவின் பிரேதம். அலங் கோலமாகக் கிடக்கிறாள். அவள் மூக்கிலிருந்து ரத்தம் வழிந்த அடையாளம். கருஞ்சிவப்பாய் உறைந்து விட்ட உயிர் ரத்தம்.

மாராப்புச்சேலை ஒதுங்கி இருக்க மல்லாந்து கிடக் கும் அவளின் கண்கள் வெறித்த நிலையில். அதில் உறைந்து போய் உட்கார்ந்திருக்கிற அச்சம். பின்பக்கமாய் நீண்டு கிடக்கும் கைகளில் மாட்டுக் குளம்புகளின் மிதித் தடங்கள்...

மனிதக் கசகசப்பில் விழித்த ராக்கப்பன், பதறி யடித்துப்போய் வந்து பார்த்தான். ஜனக்கூட்டம் இவனைக் கவனிக்கவில்லை. இவன் நிலவரத்தைக் கண்ட தும் அப்படியே கதிகலங்கிப் போய்விட்டான். உள் நரம்புகள் சகலமும் அறுந்து கொண்டது மாதிரியான அதிர்ச்சிமிக்க தளர்வு.

''ஐயையோ...குடிமுழுகிப் போச்சே...'' என்று உள் ளுக்குள் நொறுங்கிப் போனான். கொலைப்பழி இவன் தலையில் விழுமே...

தோற்றுப்போய் ஒதுங்கியிருந்த ராமக்காவின் உறவினர்கள் இவனது தோலை உரித்துவிடுவார்களே... இயலாமையில் கட்டுண்டு, பொறாமையில் குமுறிக் கொண்டிருந்த அவர்கள், இதுதான் சமயம் என்று இவன் மீது பாய்ந்து க்டித்துக் குதறிவிடுவார்களே...

இவனது கூடா உறவையும் சொத்துக்காக இவன் செய்கிற அத்துமீறலையும் முனியம்மாவுக்குத் துரோகம்

செய்ததையும் தட்டிக்கேட்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த மொத்த ஊரும்... 'இதுதான் சாக்கு' என்று ஒன்றுசேர்ந்து பாயுமே...பாய்ந்து அமுக்குமே... அமுக்கித் தீர்த்துக்கட்டிடுமே...

இப்ப என்ன செய்ய? அவனுள் குழப்பமும் பயமும் மண்டிக்கொள்ள... முனியம்மாவை நினைத்து வருந்தினான்.

'பாவம்...அவளைக் கல்யாணம் பண்ணி நாசம் பண்ணுனேன்... அவ கதறிய கதறல், வடிச்ச கண்ணீர் விட்ட சாபம் சும்மா போகலை... சூறாவளியா வந்து சுத்தியள்ளிக்கிட்டுப் போகுதே...இனி, அவள் கதி...?'

எல்லாம் ஒரு சில கணங்கள்தான். நொந்து நொறுங்கிப்போன மனசோடு—சூனியம் சுமந்த நினைப்போடு—மெள்ள நழுவி...ஓட்டம் எடுத்தான்.

எங்கே...? என்ன செய்ய...? எத்திசை நோக்கி...? எந்தக் கேள்விகளுக்கும் பதிலற்ற வெறுமையோடு ஓடினான். வாழ்க்கையைவிட்டு— கடமைகளை விட்டு— கட்டிய மனைவியைவிட்டு—ஏன், தன்னையேவிட்டு— தாறுமாறாய் ஓடினான் ராக்கப்பன்.

நாலைந்து நாட்களுள்—

அந்த ஊர் ரொம்பச் சிரமப்பட்டு விட்டது. 'யார் மீது இந்தக் கொலைபழி விழுமோ?' என்ற பயத்தில் அவனவன் மூச்சு முட்டிப் போய்க் கிடந்தான்.

ராமக்காவை வாய்க்கும் கைக்கும் வைதுகொண்டேயிருந்த பெண்கள்—

இப்போது—

அலங்கோலமான பரிதாபத்தில் செத்துக்கிடந்ததைப் பார்த்ததும் பதறிப் போனார்கள். மனம் நடுங்கிப்

போனார்கள்... ஆளாளுக்கு நிஜமான பரிதவிப்போடு அங்கலாய்த்தனர்.

"ஐயையோ பாதரவே... இப்படியுமா ஒரு பொம்பளைக்குச் சாவு வரணும்...?"

"அதைச் சொல்லு...எதுக்குச் சாகிறோம், யாரு கொல்றான்னு தெரியாமலேயே அவ உசுர் போயிருச்சே... அடக் கொடுமையே... உசுர் போகையிலே அவ மனசு எப்படிக் கிடந்து துடிச்சதோ... தவிச்சதோ..."

"கொண்டவனும் போயிட்டான்... உத்தவுகளும் ஒதுங்கிக்கிட்டாக... மூப்பது வயசுகூட வராத ஒரு பொண்ணு, ஒத்தையிலே எப்படி உசுர் வெச்சு வாழறது? தொணைக்கு ஒருத்தனைச் சேத்துக்கிட்டா... இந்தக் கேவல வாழ்க்கைகூட அவளுக்கு முழுசா லபிக்கலியே..."

"பொண்ணா பொறந்தாலே பாவந்தா... எல்லாக் கேவலமும் அசிங்கமும் அவ தலையிலேதான் வந்து, விடியும். சமுத்திரமா அழுது கரையுறதும் அவதான்... சந்தனமா மண்ந்து தேயறதும் அவதான்...சாக்கடைப் பேச்சா பேசுறதும் அவளைத்தான்..."

"அப்பவும் ராமக்கா தலையெழுத்து மாதிரி கோண எழுத்து யாருக்கும் அமையக்கூடாதுடியம்மா... ஒரு வம்சத் தொடர்ச்சிகூட இல்லாம, பூண்டோட போய்ச் சேந்துட்டாளே, பாதகத்தி..."

—இப்படித் தெருவுக்குத் தெருவாகக் கூடிக் கூடிச் சோகமாய் அங்கலாய்க்கிற பெண்கள், கண்ணீரும் கரகரத்த குரலுமாய்க் கலங்கிச் சிதைந்தனர்.

போலீஸ் வந்தது. போலீஸாரின் காக்கி உடுப்புகளும் கனத்த தடிகளும் கடுகடுத்த அதட்டல்களும் ஆட்களை அரள வைத்தன. நாலா சில்லறையாகச் சிதறி ஓடினர்.

அரண்டு ஓடாமல் மிஞ்சி நின்ற கிழடு கட்டைகளிடம் சப்-இன்ஸ்பெக்டர் விசாரித்தார். நயந்தும் அதட்டியும் விசாரித்தார்.

முனியம்மா பஞ்சாயத்து-ராக்கப்பன் உறவு-சொந்த பந்தப் பகை எல்லாவற்றையும் சேகரித்துக் கொண்டார், காணாமல் போய்விட்ட ராக்கப்பன்மேல் சப்-இன்ஸ் பெக்டர் குறி விழுந்துவிட்டது என்று ஊரெல்லாம் ஒரே பேச்சு.

பிரேதத்தை அறுத்து, ஓலைப்பாயில் கட்டிக்கொடுத் தார்கள். யாரிடம் ஒப்படைக்க...? பழனிச்சாமி வகை யறாக்களிடம்தான் ஒப்படைத்தார்கள், சட்டப்படி.

பழனிச்சாமி திகைப்பும் குழப்பமும் தாளமுடியாமல் அரண்டுபோய்க் கிடந்தான். பேயறைபட்டவன் போல, உயிர் வற்றிப்போய்...உணர்ச்சி மரத்துப் போனவனாய்க் கலங்கிக் கிடந்தான்.

அவனைச் சுற்றிலும் நீண்டு நெருங்குகிற கொடிய கரங்கள்...கொலைத்தாகமாய் வந்து நீண்டுகிற நீசக் கரங்கள்... அதன் நகங்களின் கூர்மை இவனது ரத்தத்தில் பதியுமோ...சதைகளைக் கிழிக்குமோ...

அவனுக்குள் அச்சப்பேயின் வெறியாட்டம்...

ராக்கப்பனின் அம்மா...அன்றைக்கு அழ ஆரம்பித் தவள், நிறுத்தவேயில்லை.

"முனியம்மா...ஒனக்கு நா செஞ்ச பாவத்துக்குத்தான் ஏந்தலையிலே இப்படி இடி வந்து விழுந்துருக்கு... எம் புள்ளே ஜெயில்ல கெடக்கணுமே... தூக்குலே போட்டுரு வாகளே...எங்க வம்சப்பேரு துலங்க,ஒரு ஜீவன் இல்லாமப் போச்சே..." என்று அழுது அரற்ற ஆரம்பித்தாள்.

முனியம்மாவுக்கு வருத்தமோ, சோகமோ ஏற்பட வில்லை. இன்னும் சொல்லப் போனால், நெஞ்சின் அடியாழத்தில் ஒருவிதக் குரூர நிறைவுகூட முகம் காட்டியது.

'ஆளும் பேருமா கூடி ஏந்தலையிலே நீங்க வெச்ச திப்பந்தம்தா, இப்ப உங்க வம்சத்தையே கருக்கிருச்சு' என்ற எண்ணம்கூட ஏற்பட்டது.

ஆனால், தனது சொந்த நிலை குறித்து நினைக்கிற போதுதான், சூனியமாகிப் போனதை அறிந்தாள். அதற் காக அழவும் முடியவில்லை... அழாமல் இருக்கவும் முடிய வில்லை.

அத்தைக்காரி நாலைந்து நாளாய்ப் பச்சைத்தண்ணீர் பல்லில் படாமல் அழுகையும் புலம்புலுமாய்க் கதறிக் கதறித் தொண்டையே உடைந்து ஈனக் குரலில் கசிந் தாள்.

பார்க்கப் பார்க்கப் பாவமாயிருந்தது முனியம் மாவுக்கு.

அவளுள் முதன்முதலாய் அவள்மீது சுரந்த கருணை...

"அத்தை...இந்தாங்க, இந்த காபியாச்சும் குடிங்க..." நிமிர்ந்து பார்த்தாள்.

"அடியாத்தி...ஓங்கால்ல பட்ட புழுதியைத் தொடக் கூட எனக்கு அருகதையில்லேடியம்மா...ஓம் பொழப்புல மண்ணள்ளிப் போட்டு, ஒன்னை மொட்டமரமா ஆக்குன பாவி நா... நீ எனக்கு காபி கொடுத்து, அத்தைன்னு வாய்குளுரக் கூப்புடுதே...ஓம்மூஞ்சியை எப்படி ஏறெடுத் துப் பாக்க...? ஏது தைரியம் எனக்கு...?"

நடந்ததையெல்லாம் கேள்விப்பட்டுப் பூங்கிளி மனம் துடித்தாள். பேச வேண்டிய நேரத்தில் மௌனம் காட்டி,

பலியாடாய் வெட்டுப்பட்ட முனியம்மாவை நினைக்க நினைக்க மனம் கிடந்து தவித்தது.

12

ரெண்டு மூன்று நாளாய் வசந்தனுக்கு இதே சிந்தனை தான். கேட்பதா, வேண்டாமா? வாத்தியாரிடம் போய்க் கேட்கிற தைரியம் வருமா? நா இடறுமா? மனம் தயங்குமா? வார்த்தைகளை விழுங்கி விடுமா? கனவுகளைச் சாம்பலாக்கி விடுமா?

மாறி மாறி யோசனைகள். அனுமார் வாளாய், சுருள் சுருளான யோசனைகள்...குழப்பமும் திகைப்புமான யோசனைகள்...

கேட்கிற சூழலையும் விதத்தையும் விதவிதமாக மனதுக்குள் காட்சிப்படுத்தினான். காட்சியின் ஒவ்வொரு முடிவும் அவலமாயிருந்தது அதிர்வாக இருந்தது.

அவனைத் தளர வைத்து ஊமையாக்குகிற நினைவோட்டம். அவனுள் சுபாவமாய் வளரும் தைரியத்தின் ஆணிவேரை அரிக்கிற குருபக்தி. முன்முயற்சிக் கொழுந்தைக் கிள்ளிவிடுகிற ஆசான் நேயம்.

வசந்தனுக்குள் மகாகவியின் கவிதைகள். பாரதியின் கவிதைகள் அவனுக்கு இலக்கியம் மட்டுமல்ல...வேதம். வாழ்வின் பாதை. பாதையில் படியும் வெளிச்சம். இலக்கை நோக்கி முன்னேற வைக்கும் சாட்டை.

'மிடிமையில் அழிந்திடேல்'

'மீளுமாறு உணர்ந்துகொள்'

'நொந்தது சாகும்'

'நேர்படப்பேசு'

'அச்சம் தவிர்'

மீசைக் கவிஞன் இவன் ஆன்மாவை முறுக்கிவிட்டான். தளர்ந்து கிடந்த வசந்தனுக்கு ஒரு தைரியம். ஒரு மீட்சி. ஒரு விடுதலை. அடிமை மோகத்தில் சுகம் கண்ட மனதுக்குள், ஒரு விடுதலை உணர்ச்சி. சுயம் தேடல். சுயத்துக்கான செயல் ஊக்கம். கனவுகள் கைவரக் காரியம் செய்கிற துணிவு.

இதுதான் விடுதலையின் சுபாவமா? தன் தலை எழுத்தைத் தானே எழுதிக் கொள்ளும் தன்னம்பிக்கையை விடுதலை தருமா?

வசந்தன் ஒரு முடிவோடு எழுந்துவிட்டான்.

வெளியே வந்தான். சாயங்கால வெயில் நிழலை நீளமாக்கியிருந்தது. அவனுள் அவன் விசுவரூபமெடுத்திருந்தான்.

'நொந்தது சாகும்... நிஜம்தான். எனது கனவு நொய்ந்ததல்ல. வலுவானது. விடுதலை பெற்ற ஆத்மாவைப் போல் சுயமானது. வீரியமிக்கது. அன்பால் நிரம்பியிருப்பது. கருணையால் ததும்புவது. தாயில்லாத பெண்ணின் உள்மனச்சோகத்தை. தகப்பனை இழந்த சோக மனதால்தான் துல்லியமாய்த் தொட்டு உணரமுடியும். அப்படித் தொட்டு உணர்ந்த பரிவுணர்ச்சியில் அரும்பிப்பூத்த அன்பு இது. அன்பில் முகிழ்த்த கனவு இது.

இந்தக் கனவுக்குக் கால்களுண்டு. ஆழப்பதிந்த வேர்களுண்டு.

அதோ...வாத்தியார் வீடு. புதிய காரை வீடு. கொஞ்சம் கடனைச் சுமந்து நிற்கிற வீடு.

வாத்தியார் ரத்தினவேலு கையும் துண்டுமாய் வாசலுக்கு வெளியே வந்தார். காலாற் ஆற்றுப் பக்கம் நடந்து போவதற்காக வருகிறாரோ...

இவனைப் பார்த்தவுடன் அவர் முகத்தில் ஒரு சிறிய புன்னகை, சிக்கனமானதல்ல, கஞ்சத்தனமான புன்னகை. சம்மதமின்மையான புன்னகை.

''என்ன சார்...வெளியே போறீங்களா?''

''ம்...''

''நா கூட வரட்டா?''

வர்றதுன்னா வா. தோள்லே ஏறிக்கிட்டா வரப் போறே...வேண்டாம்னு சொல்றதுக்கு? பாதையிலே தானே நடக்கப்போறே?''

வெறுப்போடு எடுத்தெறிகிற வார்த்தைகள். வசந்தனின் தொழிற்சங்க ஈடுபாடு அவருக்குப் பிடிக்கவில்லை. இவனது கவிதை முயற்சிகளும் அவ்வளவாய்ப் பிடிக்கவில்லை. 'கற்பனையிலே மிதக்கிறான். வாழ்க்கையைத் தவறவிட்டு விடுவான்' என்கிற அபிப்பிராயம். வேலை போச்சுன்னா...இவனுக்கு யார் நாதி? ஒரு உப்புக்கல்லுக்குக்கூடப் பெறுவானா? தெருநாய்கூட இவனைச் சிந்துமா? அறிவு கெட்டுப்போய், சங்கம் சங்கம்னு அலையுறானே...உருப்படுற வழியைப் பாக்கமாட்டானோ... தறுதலைப் பய.'

அவருக்குள் இம்மாதிரியான நினைவோட்டம்.

பிரம்பு வெச்சு அடிச்சுத் திருத்துகிற வயசு இல்லே தோளுக்கு மேலே வளர்ந்துட்டான். மீசை முளைச்சிருச்சு. சொந்த அறிவு மேலே ரொம்ப நம்பிக்கை. சொல்லித் திருந்த மாட்டான். நாசமாயிருவான். உருப்பட மாட்டான்.

ஊரைக் கடந்து விட்டார்கள். தோட்டங்களுக்கு நடுவே வெள்ளை நாடாவாய் நீள்கிற ஒற்றையடிப் பாதை இருபக்கத்திலும் நெருக்கமாய் நெருஞ்சி முள்செடியின் படரல். அதன் மஞ்சள் மஞ்சளான பூக்கள் மூக்குத்திகளை அள்ளிச் சிதறிய மாதிரி.

ஓடைக்குள் இறங்கினர். காற்றுக்கு ஆடும் வேலி முள்ளின் கிளைகள் துண்டை உருவுகின்றன.

"என்னப்பா... உங்க தொழிற்சங்க வேலைகள்லாம் எப்படி இருக்கு?"

"இருக்கு சார்..."

"உங்க ஃபாக்டரியைத் தனியாருக்குக் குடுத்துட்டா. சில வொர்க்கர்ஸுக்கு வேலை போகும்லே?"

"போகலாம் சார்..."

"தொழிற்சங்க ஊழியர்களைத்தான் மொதல்லே களையெடுப்பாங்க... இல்லே?"

"அப்படியெல்லாம் நடந்துராது சார். கோர்ட் இருக்குல்லே? அங்க போகலாம்லே?"

"கோர்ட்டுக்குப் போகலாம். ஜெயிக்கிறதும் தோக்குறதும் பின்னாடிதானே தெரியும்...?"

வசந்தனுக்குள் பூரான் ஊர்கிற உணர்வு...

பயப் படபடப்பு... தனது பாதையை மறிக்கிற மாதிரியான கேள்விகள். தன்னை ஊமையாக்குகிற அஸ்திரங்கள்.

'பேச்சைத் துவக்கி எப்படி அதைக் கேட்பது' என்று யோசித்துக் கொண்டிருந்த அவனுக்கு, இந்தக் கேள்விகள் ரொம்ப அச்சுறுத்தலாக இருந்தன. தைரியம் பறித்தது.

உள்ளுக்குள் முண்டாசுக் கவிஞன்... 'விடுதலை, விடுதலை விடுதலை' என்று பறையடித்த மகாகவி. 'வெடிப்புறப் பேசு' என்று துப்பாக்கியாய் வெடித்தவன்.

"சார்...உங்ககிட்டே ஒண்ணு கேக்கணும்..."

"கேளு..."

அவர் முன்னால்... இவன் பின்னால்... அவரது கதர்த் துண்டின் அசைவிலேயே நடையின் லயமும், முதுகின் சலனமும் இவனுக்குத் தெரிகிறது.

"கேக்கவா, வேண்டாமான்னு ரொம்ப நாளா யோசனை. தயக்கம் சார். கேக்க வேண்டிய நேரத்துல கேக்காம விட்டுட்டா... கிடைக்க வேண்டியதை இழந்துரணுமே என்கிற பயத்துலே, தைரியத்துலேதான் சார்... இப்பக் கேக்கப்போறேன்..."

"எதுக்கு இப்படிச் சுத்தி வளைக்குறே? சட்டுன்னு கேளு..."

"சார்... பூங்கிளியை..."

"ம்..."

"..."

"கேளு... ஏன் தயக்கம்? டக்குன்னு பேசப்பா..."

"பூங்கிளியை எனக்குக் கல்யாணம் பண்ணித் தருவீகளா சார்?"

கேட்டவுடன் அவனுக்குள் முரண்பட்ட உணர்வு. கட்டையாய் அழுத்திய கேள்வியைக் கேட்டுவிட்ட ஆசுவாசம், நெஞ்சுக்குள். அத்துடன் கூடவே திகில். கிலி-என்ன ரியாக்ஷன் வாத்தியாரிடம் வெளிப்படுமோ என்கிற அச்சம்...

முன்னால் நடந்த வாத்தியாரின் முதுகையே நுட்பமாய் பார்த்தான். கண்ணில் இதயம் வந்து நின்றது.

ரத்தினவேலு 'தக்க்'கென்று நடையை நிறுத்தினார். திரும்பிப் பார்ப்பாரோ என்று இவனுக்குள் 'பக்' கென்றது. திரும்பவில்லை. அப்படியே நின்றிருந்தார். ஒரு நிமிஷம். யுகமாய்க் கனத்து... நகர மறுத்த நிமிஷம்.

ரத்தினவேலுக்குள் சன்னென்று சீறிக்கொண்டு வந்த முன்கோபம்... திரும்பாமலேயே புறங்கையால் சப்பென்று அறைந்து விடலாமா என்கிற உள்தீவிரம்...

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

அத்துமீறலான கேள்விதான். இருப்பினும், பாவலா செய்யவில்லை. பம்மாத்துப் பண்ணவில்லை தந்திர சாமர்த்தியம் காட்டவில்லை. நேருக்கு நேராக நேர்படப் பேசியிருக்கிறான். நேர்மையான தொனியில் நாகரிக மாகக் கேட்டிருக்கிறான். எந்தப் பதிலையும் எதிர் கொள்கிற மனத்துணிவோடு கேட்டிருக்கிறான்

என்ன பதில் சொல்ல? எப்படிச் சொல்ல? உருப் படாத பயலாகிக் கொண்டிருக்கிற இவனுக்கா என் பிள்ளை? என் மகள்மீது ஆசைப்பட இவனுக்கென்ன தகுதி? நாலு கவிதை எழுதியவுடன் தன்னை மகாகவி என்று நினைத்துக் கொண்டானா? உருப்படாத தொழிற் சங்கத்தில் சேர்ந்து திரிகிற இவன், அதையே தலைவருக் குரிய தகுதி எனத் தற்பெருமை கொண்டிருக்கிறானா? உத்தியோகத்தையே பறிகொடுக்க இருக்கிற இவன்... எப்படி என் மகளைக் கேட்கிற தைரியம் கொண்டான்?

''சார்...''

''ம்...''

அவரது 'ம்'மில் ஓர் இறுக்கம். உறுமல் போன்ற 'ம்'... அதன் தொனியே முழுப்பதிலாக முழுமறுப்பாக இவனுக்குள் பளிச்சிட... அடர்த்தியாய் வந்து கப்புகிற சோகம். அடி வயிற்றில் சட்டென்று தோன்றியவெறுமை.

பூங்கிளியை இழக்கப்போகிறோம் என்கிற நுண்ணுணர்வின் அவஸ்தை.

கற்றையாய் வந்து நெஞ்சுக்குள் அறைந்த துயரத்தில் சொற்கள் உடைந்து, குழைந்து, ஈரச்சொற்களாய் நெகிழ்ந்து தொனிமாற...

''சார்... கேட்டது தப்பா இருந்தா மன்னிச்சுருங்க...

''ம்...''

திரும்பாமலேயே நடந்தார். எடுத்து வைத்த அடியில் அவரது மனச்சலனம்... நாலாவது எட்டில் சலனமற்றுப் போன பழைய நிதானம். ஒரு சீர்த்தன்மை.

''சரி... நா 'வெளியே' போய்ட்டு வீட்டுக்குப் போறேன். நீ போ...''

சாதாரணமாய்ச் சொன்னாலும் 'விட்டு விலகிப்போ' என்று உத்தரவிடுகிற தொனி, ஆழத்தில், 'பேச்சை முடிச்சுக்கோ' என்பது போன்ற அந்த ஸ்வரத்தின் ஆழத்துக்குள் 'உறவை நிறுத்திக் கொள்' என்ற நிர்த்தாட்சண்யமும் உட்கார்ந்திருந்தது.

திரும்பிக்கூடப் பார்க்காத அவரது மூர்த்தன்னியம்.

வசந்தன் அவமானமாய் உணர்ந்து நடையை நிறுத்த, அவர் நடந்துகொண்டிருந்தார்.

பூங்கிளியின் கழுத்தில் பூமாலைகள். மாலைகளுக்கெல்லாம் மகுடமாய்க் கல்யாண மாலை. ரோஜாப் பூக்களும் வாசனைப் பூக்களுமாய்த் தொடுத்து, ஜரிகை நூல் பின்னிய மாலை.

காரிலிருந்து இறங்கித் தயங்கித் தயங்கி ஏதோ ஓர் அந்நிய வீட்டுமுன் நடக்கிறாள். முகம் தெரியாத பெண்கள், கோலாகலமாய் ஆரத்தி எடுக்கின்றனர்.

ஒற்றை மனுஷியாய் நிற்கிற அவள் காலில் கலர் நீரை ஊற்றுகின்றனர்.

அந்த வீட்டுக்குள் வலது பாதத்தை வைக்கிறாள். அவளுக்குள் பகீரென்கிற பய உணர்வு. பாதம் தரை காணவில்லை. கீழே கீழே போக... தரை தட்டுப் படாமல்... முடிவில்லாப் பாதாளமாய் வெறுமை தட்ட... காலை உருவப் பார்க்கிறாள். உருவவும் முடியவில்லை.

மீளமுடியாத பள்ளத்தில் வீழ்ந்து கொண்டிருப்பதை உணர்கிற கிளி... நெஞ்சம் அடித்துக்கொள்ள... விழித்துக் கொண்டாள் பூங்கிளி. அலறிக்கொண்டு எழுந்த பூங்கிளியின் தேகமெல்லாம் வியர்வைப் பெருக்கு. மனம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

'அம்மாடி... எவ்வளவு பயங்கரக் கனவு' என்று உள்ளுக்குள் ஒரு நினைவு. கண்ட கனவை நினைத்துப் பார்த்தாள். கால் இன்னும் நழுவிக்கொண்டு போவதாய் ஒரு திகில் உணர்வு.

மங்கலான விடிவிளக்கின் பச்சை வெளிச்சத்தில் மணி பார்த்தாள். சுவர் கடிகாரம் 4.45 என்றது.

பதற்றமாய்ச் சுற்றும் முற்றிலும் பார்த்தாள். பற்றிப் பரவிக் கிடந்த மனச் சூனியம். மனித மன வாடையற்ற பாலை. நெஞ்சுக்குள் முட்டுகிற உணர்வு களைப் பகிர்ந்துகொள்கிற ஓர் ஆத்மா இல்லை. மூச்சு முட்டலாய்த் திணறச் செய்கிற இந்த வெறுமை.

பிரமாண்டமாய் அம்மாவின் அருமை அற்றலைந்து தவிக்கும் மனசுக்கு ஆறுதலாய் அரவணைத்துப் பரிவாய் வருடிக்கொடுக்கிற அம்மா இல்லை என்கிற கனத்த சூனியம்.

அழவேண்டும் போலிருந்தது பூங்கிளிக்கு. வாய்விட்டுக் கதறி அழவேண்டும். மனசின் கனத்தையெல்லாம்

கரைத்துவிடுகிற அழுகை. அதற்கும் வழியில்லை. நடையில், கட்டிலில் படுத்திருக்கிற அப்பா.

நேற்றுச் சாயங்காலம், காலாற நடந்துபோய் ஆற்றுப் பக்கம் சுற்றி விட்டு அப்பா வந்தார். கருகரு வென்று பொழுது மயங்கிவிட்டது.

நடைக்குள் வந்தார். உள்ளறைக்குள்ளும் வந்தார். பூங்கிளி பதறிப்பதைத்துப் போய் எழுந்தாள். என்னவோ ஏதோவென்கிற உதைப்புடன் மிரட்சியாய் நிமிர்ந்தாள்.

அந்த மிரட்சியான பார்வையால் குத்துண்டவர் போல ரத்தினவேலு மனசுக்குள் மறுகினார். 'பாவம், தாயில்லாப் பிள்ளை. ஒழுக்கம் தவறிடக்கூடாதேங்கிற எண்ணத்துலே ரொம்ப அரட்டி வெச்சிட்டேன். வெயில் படாத செடி மாதிரி ஆகிப் போய்ட்டாள். வேருமில் லாம, உயிருமில்லாம வெளுத்துப் போய்ட்டாள்...'

"பூங்கிளி..."

ரொம்ப நாளைக்கு முந்தைய மிருது, அப்பா குரலில். மனசுக்குள் ஊடுருவி...மென்மையும் தாய்மையும் நிறைந்த பழைய அப்பாவைக் கொண்டு வந்தது.

"ம்..."

"வேலைகளை முடிச்சிட்டியாம்மா?"

"முடிச்சுட்டேன்ப்பா..."

"சாப்டலாமா?"

"ம்..."

"பூங்கிளி, நாளைக்கழிச்சு அமாவாசை. வர்ற வெள்ளிக் கிழமை ஒன்னைப் பெண் பார்க்க வர்றாங்க. செங்கல்பட்டுக்காரங்க...பலசரக்குக்கடை வெச்சிருக்கான் பையன்..."

''ம்...''

அவனுக்குள் சிறகடிக்கிற படபடப்பு. றெக்கை ரெண்டும் மாரடிக்க, பிடிபட்ட புறாவாய்ப்பதறும் மனசு.

''நம்ம வட்டாரத்துப் பையன்தான். ஒம்பது படிச்ச வுடனே செங்கல்பட்டுக்குப் போயிட்டான். பலசரக்குக் கடையிலே சம்பளத்துக்கு இருந்துருக்கான். இப்ப சொந்தமா பலசரக்குக் கடை... நல்ல ஏவாரம்... முன்னேற்றம்... சொந்தமா ஒரு வீடுகூட அங்க வாங்கி யிருக்கானாம்...'

அவர் முகத்தில் ஒரு மகிழ்ச்சி. கண்களுக்குள் ஒளிப் புன்னகை. அந்த ஒளி அவள் முகத்திலும் பரவ முடியா மல் தோற்றுப்போய் அந்தரத்திலே நின்று விட்டது.

உணர்ச்சியற்ற மகளின் முகம். மகிழ்ச்சியின் ரேகை தட்டுப்படவே இல்லை. பயத்தின் காரணமாக இருக்குமோ? தேற்றிக் கொண்டார் மனசை.

''சரி, சோறு வை...''

''ஆகட்டும்பா...''

சாப்பிட்டு முடித்துவிட்டு நடைக்கு வந்தார். ஈஸி சேரில் சாய்ந்த அவருக்குள், கனத்த நினைவு மேகங்கள்—

அடுப்பங்கரைக்குள் இருந்த பூங்கிளிக்குள் இனம் புரியாத குழப்பம். திகைப்பு.

'என்னாயிற்று அப்பாவுக்கு?''

பெண் கேட்டுப் பலதடவை தூதுகள் வந்ததுண்டு. அப்போதெல்லாம் ஆயிரத்தெட்டுக் கேள்விகளைக் கேட் பார். குடைந்து குடைந்து எடுப்பார்...கடைசியில், ''கொஞ்சம் யோசிக்க வேண்டியிருக்கு... தாக்கல் சொல்லி யனுப்பறேன்,. பெறகு பொண்ணு பாக்க வரலாம்.''

தகவல் சொல்லியனுப்ப மாட்டார். தட்டிக் கழித்து விடுவார். அந்த நிதானம் என்னாயிற்று? நீண்டயோசிப்பு எங்கே போயிற்று? இப்போது என்ன வந்து விட்டது?

வந்த இடத்தில் அதிகமாகக் கேள்வி கேட்கவில்லை சாத்திரத்துக்கு ஒரு சில விஷயம் பற்றி விசாரித்தார். அவ்வளவுதான். வெள்ளிக் கிழமை பெண் பார்க்க வரும் படி கூறிவிட்டார்... என்ன இது அவசரம்? அவசரத்துக்கு என்ன காரணம்? இவள் காரியங்களில் ஏதேனும் ஒழுக்க மின்மையைக் கண்டுவிட்டாரா?

காரணமில்லாமல் அப்பா காரியமாற்ற மாட்டார். அவர் காரியங்களுக்குள் ஆழமான உள்ளர்த்தங்கள் ஒளிந்திருக்கும். வலுவான நியாயம் மறைந்திருக்கும்.

அப்பா சொன்ன 'வெள்ளிக்கிழமை'க்கும் வந்த கனா வுக்கும் முடிச்சு உண்டா? இருக்குமோ? வெள்ளிக்கிழமை இனம் பார்க்க முடியாத பாதாளமா? மீள வழியற்ற கொடிய பள்ளமா? கனாவுக்கு அர்த்தம் உண்டா? பலன் உண்டா?

கல்யாண ஊர்வலம் கனாவில் வந்தால்... சாவு! மரண ஊர்வலம் வந்தால்... நனவில் மங்கள காரியம்! இப்படிக் கனாவில் காட்சிகளுக்கு எதிர்மறைப் பலன் சொல்வார்களே... அப்படியானால், வெள்ளிக்கிழமை... நல்லது நடக்குமா? மங்கள காரியமாக நிறைவுறுமா? நல்ல வாழ்க்கை நிச்சயமாகுமா?

சம்பந்தமில்லாமல் வசந்தனின் முகம் உள்ளுக்குள். 'பேசு பெண்ணே' என்ற கவிதை. அவ்வப்போது அப்பா வுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிற போதெல்லாம் அடுப்பங்கரை நோக்கி மின்னல் வெளிச்சமாய் வந்த அவன் கள்ளப் பார்வைகள்... இனம் புரியாத வேதனை... ஆழத்தில் ஒரு பிசைவாய்.

சகல நினைவுக் கழிசடைகளையும் அள்ளிக் கொட்டு கிற மாதிரி ஒரு நீண்ட பெருமூச்சு.

13

வெளியே மனித அரவம்... விழித்துக் கோண்ட கிராமச் சலனம். சிறகடித்துக் கொண்டு தெருவுக்குப் பறந்து வருகிற கோழிகளின் 'கேர் கேர்' என்கிற சத்தம்... மணி 5-30 ஆகிவிட்டது... எழுந்தாள் பூங்கிளி. முகத்தைக் கழுவி, வாயைக் கொப்பளித்தாள். இன்னும் இருக்கிற இருட்டு... விடியல் சத்தங்களை உள்ளடக்கிய கனத்த இருட்டு.

ஓடைக்கு ஓடினாள். கிராமத்துப் பெண்களுக்குக் காலைக்கடனே பெரும் சுமை. இருட்டுப் பிரிவதற்குள் போய் வந்துவிட வேண்டிய நிர்ப்பந்தம், பெண்களுக்கு மட்டும்.

ஓடைக்குப்போய்விட்டு வந்தாள். தெரு...ஒன்றிரண்டு பெண்களின் நடமாட்டம் மட்டுமே. தெருவிளக்கின் மங்கலான வெளிச்சக் கஞ்சத்தனம். தெருவுக்குள் நுழைந்து, ஒரு சந்துக்குள் ஊடுருவி வந்தால், இவளது வீடு. சந்துக்குள் கற்றையாய்ப் பதுங்கியிருக்கும் மை யிருட்டு.

சந்துக்குள் பாதி வந்திருப்பாள்... ஒரு சுவாசச் சத்தம்...ஆண் சுவாசம். பயத்தின் அடர்த்தியில் கனத்துப் போன சுவாசச் சத்தம். இவளுக்குள் அதிர்ச்சி. சப்த நாடியும் உறைந்து போகிற திகில்...தவிப்பு...குப்பென்று நெஞ்சுக்குள் பயம்.

இப்படியே திரும்பி ஓடிவிடலாமா? தெருவிளக்கின் வெளிச்சப் பாதுகாப்புக்குப் போய்விடலாமா? தேங்கி

ணாள்...ஒரு கணம்தான் பின்புறமாய் ஒரு எட்டு வைத்து விட்டாள்.

''பூங்கிளி...ஓடிராதே...'' - வசந்தனின் கிசுகிசுப்புச் சத்தம். ''போயிராதே. ஒன்னைப் பாக்குறதுக்காக இன்னிக்குப் பூராவும் ஒறங்காமக் காத்திருந் தேன்...''

''எதுக்கு?''

''ஒண்ணுமில்லே...இந்தா...''

''என்னது?''

''ஒரு காயிதம்...படிச்சுப் பாரு. அப்பாகிட்டே காட்டிடாதே. படிச்சுட்டுக் கிழிச்சுப்போட்டுரு...'' அவன் கைக்குள் திணிக்கப்படுகிற ஒரு காகிதம்.

''நா போறேன்'' என்கிற வசந்தனின் சத்தம் அவன் நடந்துபோகிற பாதங்களின் சத்தம்.

இவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆயினும் பயம் விலகிவிட்ட நிம்மதி. ஆசுவாசம்...அவிழ்த்து விடப்பட்ட பசுக்கன்றாகத் துள்ளிக்கொண்டு பாய்ந்தாள். வீட்டுக்குள் நுழைந்தாள். அப்பா நடையில் இன்னும் உறங்குகிறார். அடுக்களைக்குள் வந்தாள். கைக்குள் சுருண்டு மடங்கிக் கிடந்த கடிதத்தை விரித்தாள்.

அவளுக்குள் ஒரு படபடப்பு...! ஆர்வப் பரபரப்பு...! உள்ளிருந்து பீறிடுகிற பரவசம்... அவளது ஆத்மாவுக்குள் ஒரு குதூகலம்.

''என் உயிரில் கரைந்த உன்னதமே,

உன்னை நான் என்னவளாக்கிக் கொண்டேன் என்னளவில். இரவும்பகலும் உன்னைப் பற்றிய எண்ணங்கள். என்னுள் எழும் கவிதைகளெல்லாம் உன்னைச் சுற்றியேதான். நீ அப்படியா? எனக்குத்

தெரியாது. ஆனால் என் நிலையிலுள்ள எல்லா இளைஞர்களைப் போலவே நானும் நினைக்கிறேன்... 'நீயும் அப்படித்தான்' என்று!

நான் காட்டிக்கொள்ள முடியவில்லை. இடையில் சுவராக அப்பா. அவர் எனக்குக் குரு... ஆசான்... வாழ்வின் சாரதி...என்னை ஆக்கிய கர்த்தா... உனக்கும் அவர் கர்த்தா உனக்கு பாசப்பயம்... என்னுள் குரு பயம்.

நாம் வாழ்விலும் இணையவேண்டும் என்ற என் உயிர்க் கனவை அப்பாவிடம் சொன்னேன். மறுத்து விட்டார். இப்போது என்னுள் போராட்டம்...தவிப்பு... உறக்கமிழந்த ராத்திரிகள்.

மறுப்பை மறுத்துவிடலாமா? உன்னைக் கூட்டிக் கொண்டு எங்காவது ஓடிப்போய்விடலாமா? உன் சம்மதத்தோடு நம் காதலைக் காப்பாற்றி விடலாமா? எண்ணிப் பார்த்தேன். இல்லை...அது நியாயமில்லை.

குடும்பபாதுகாப்பையும் சமூகப் பாதுகாப்பையும் கடந்து காப்பாற்றப்படுகிற காதலுக்கும், வாழ்வுக்கும் எதிர்கால உத்தரவாதம் உண்டா? தனிமைப் பட்டுப் போன தம்பதிகளுக்கிடையே எழும் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு யார் இருப்பார்?

அதை விடவும் முக்கியமாக...அப்பாவின் கௌரவத்தையும் ஆத்மாவையும் காயப்படுத்திவிட்டு நாம் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியும்?

முன்கோபம் என்கிற ஒரு குறையைத் தவிர, எந்த ஊனமுமில்லாத அப்படிப்பட்ட மனிதப் புனிதரின் மனதைக் கீறிவிட்டு நம் காதல் துளிர்த்தால், அது ஒரு பாவ வாழ்வல்லவா? அப்பாவின் ஒப்புதலோடு,

சமூகத்தின் அங்கீகாரத்துடன் நாம் இணைந்தால், அதுவே சரியான வாழ்க்கை. நீதியான மனுஷ வாழ்க்கை.

இந்த முடிவுக்கு வந்த பிறகு, இந்தக் கடிதம் எழுதப்படுவது எதற்காக? எனக்கே தெரியவில்லை. என் கனவை உன்னிடம் சொல்லி உனது நிம்மதியைக் கொல்லவா? இல்லை...உன்னிடமிருந்து நான் எதையோ. எதிர்பார்க்கிறேன். உன்னிலிருந்து வெளிப்படுகிற ஏதோ ஒன்றின் மூலம்தான் சிறைபட்டுக் கிடக்கும் நம் கனவு விடுதலை பெற்று நிஜமாகும் என்று என் ஆத்மா எந்நேரமும் கூவிக்கொண்டேயிருக்கிறது. அந்தக் கூவல் தான் இந்தக் கடிதம்.

உன் நினைவில் உயிர் வாழும்
இனிய தோழன்.''

வசந்தனின் கடிதத்தில் அவனது முழுமை, அவனது காதலின் முழுமை, நிதானம் நிறைந்த பண்பின் முழுமை, விருப்பு வெறுப்பைக் கடந்து மதிப்பிடு செய்கிற அறிவின் முழுமை.

இவனுக்குள் இத்தனை ஆற்றலா? இவளது அப்பாவையே இவளுக்கு முழுப்பரிமாணத்தில் அறிமுகம் செய்கிறானே...

வெள்ளிக்கிழமை நினைவில் முள்ளாக உரசி உறுத்தியது.

'அப்பாகிட்டே காட்டிடாதே...படிச்சுட்டுக் கிழிச்சுப் போட்டுரு...' - வசந்தனின் பயத்தில் நனைந்த கிசுகிசுப்பு.

அவள் அந்தக் கடிதத்தைக் கிழித்துப் போடவில்லை. பத்திரப்படுத்திக் கொண்டாள்.

அந்த வெள்ளிக்கிழமை வந்து போய்ப் பதினைந்து நாட்களாகிவிட்டன. கல்யாணம் நிச்சயமாகி விட்டது.

அப்பா சம்மதம் சொன்ன அவசரத்தில் பூங்கிளி அதிர்ந்து போனாள். சொன்னவிதம்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை.

ஒரு 'முறை'க்காவது இவளிடம் சம்மதம் கேட்டிருக் கக்கூடாதா? ''என்னம்மா பூங்கிளி... அவுகளுக்கு நா என்ன பதில் சொல்றது? சரின்னு சொல் லட்டா?'' என்று ஒரு வார்த்தையாவது கேட்கக் கூடாதா?

வாழப்போகிற இவளுக்கு அந்த மதிப்புக்கூடத் தரக்கூடாதா? சம்மதமா, மறுப்பா எதுவாயிருந்தாலும் அதைச் சொல்ல இவளுக்கு உரிமை கிடையாதா? பெண் என்றால் எருமையா? விலை பேசுவதற்குமுன் எருமை யிடம் சம்மதம் கேட்பதில்லை...அது மாதிரிதானா?

பூங்கிளி மிகக் கூர்மையான முறையில் அவமதிக்கப் பட்டதாக உணர்ந்தாள். தான் ஒரு பொருட்டாகக் கருதப்படவேயில்லை என்கிற அவமானம்.

இவளுக்குள் முனியம்மா வந்தாள். சுப்புத்தாய் வந்தாள்...மறுக்க வேண்டிய தருணத்தில் உறுதிகாட்டா மல், பலிபீடத்தில் சிதைவுற்றுப் போன ஜீவன்கள். வாழ்க்கையே அலுவைச் சுமையாக அழுத்த, நிறம் மாறிப் போன ஆத்மாக்கள். ரத்தத்தில் ஊறிய ஒழுக்கம் பண் பையே சிதைத்துக் கொண்ட சுப்புத்தாய்.

இவர்களைப் போலத்தானா தானும்? இவர்கள் கதி தானா தனக்கும்? தேர்வு செய்ய உரிமை பெண்ணுக்குக் கிடையாதா? பெண்ணை ஒரு பொருளாக அல்லாமல், மனுஷியாக மதிக்கமாட்டார்களா?

படித்து, படிக்க வைத்து...ஆசிரியராக வாழ்ந்து ஊரில் மதிப்பும் மரியாதையும் பெற்றிருக்கிற அப்பாவும் இப்படித்தானா? வெறும் ஆண் தானா?

நடையில் உட்கார்ந்திருந்த மணமகன் வீட்டார் களோடு பேசிக் கொண்டிருந்தபோது ஒரு தடவை பொத்தாம் பொதுவாகப் பேசினார் அப்பா. அதைத் தேவையற்ற உயர்ந்த ஸ்தாயியில் கூறினார்.

"நாம நம்ம புள்ளைகளுக்கு நல்லது நினைச்சுத் தானே எதையும் செய்வோம்? ஒலகம், ஊர் நடப்பு சின்னஞ்சிறுசுகளுக்கு என்ன தெரியும்? நல்லது கெட்டது பகுத்துப் பாக்குறதுக்கு அனுபவப்பட்ட நம்மாலேதான் முடியும். நாம தீர்மானிச்சுச் செய்றதுக்கு நம்ம புள்ளைக கட்டுப்படுறதுதான், நம்ம புள்ளைகளுக்கு நல்லது..."

பூங்கிளிக்கும் கேட்கட்டும் என்பதற்காகத்தான் அந்த ஸ்தாயியா? இவளது கேள்விகளுக்கெல்லாம் இதுதான் பதிலா? இது இவளுக்கு இடப்பட்ட உத்தரவா? கட்டுப் படுவதே உனக்கு நல்லது என்கிற அச்சுறுத்தலா?

பூங்கிளிக்குள் முட்டிக்கொண்டு வருகிற அழுகை அழுகையை அடக்குகிற பிரயத்தனம். அதன் திணறல்... கதறியழ அம்மா இல்லை. 'எனக்கு இந்த இடம் புடிக்க லேம்மா...அப்பாகிட்டே நீ சொல்லும்மா...' என்று முகம் புதைத்து அழ அம்மா இல்லை.

என்ன காரணமோ...தெரியவில்லை. பார்த்த முதல் பார்வையிலேயே மாப்பிள்ளையை இவளுக்குப் பிடிக்க வில்லை.

ஆள் நல்ல லட்சணமாய்த்தான் இருந்தான். புது நிறம்...பாலியஸ்டர் வேட்டி, சட்டை, விரல்களில் மோதிரம் துலாம்பாரமாய் 'என்னைப் பார்' என்றது.

கார் வந்து நின்றது. அதிலிருந்து கடைசியாக இறங்கினான். ரெண்டு பெண்கள், மூன்று பெரியவர்கள், ஆறாவதாக இவன்.

இவனுக்குத் திக்திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. வீட்டு வேலைகளையும் அலங்காரத்தையும் தானே செய்ய வேண்டிய அவலம். நல்லவேளை...பெண் பார்க்கும் படலம் ரொம்பச் சுலபமாக முடிந்தது.

அவர்களிடம் ரத்தினவேலு லௌகீகம் பேசினார். மாப்பிள்ளையின் அய்யா ராஜேந்திரன். தலைவழியாக மாட்டுகிற சட்டை போட்டிருந்தார். வெள்ளைத் துண்டு மடிப்பு...மழுங்கச் சிரைத்த முகம். ஏறு நெற்றியில் ஏறியிருந்த வழுக்கையும் நரையும்.

அவர் மகனைப்பற்றி ரொம்பப் பெருமையாகப் பேசினார். ''பய...ரொம்பக் கஷ்டத்துலே அடிபட்டுத் தேறினவன். அக்கறைக்காரன்...துட்டுலே ரொம்ப எச்சரிக்கை... அஞ்சு பைசா அநாவசியமா செலவழிக்கமாட்டான்! கடை...கடை...கடைன்னு இருபத்திநாலு மணி நேரமும் கடை சிந்தனை தான். சினிமா, கினிமா சீரெட்டு கீரெட்டுன்னு கெட்ட பழக்கம் ஒண்ணுகெடையாது...தங்கமான பய...அப்படியில்லேன்னா...சொந்தக் கடை ஆரம்பிச்சு மூணு வருஷந்தான் ஆகுது...அதுக்குள்ளே ஒரு வீடு வாங்கிப் போட முடியுமா? அதுவும் செங்கல்பட்டுலே! அங்க வீடு வாங்குறதுன்னா சும்மாவா? வீட்டடி நிலமே செண்டு இருபத்தையாயிரம்ங்கிறாக. அம்புட்டுக் கிராக்கி...''

''ஆமா...டவுன்லே அப்படித்தான் இருக்கும்...''

''வாழப்போற புள்ளைக வாடகை வீட்டுலேயா காலெடுத்து வைக்கிறது? சொந்த வீட்டுலே விளக்கேத்துனாத்தானே லட்சணமாயிருக்கும்? அதான்...போன

வருஷமே சொல்லிட்டேன். சொந்த வீடு வாங்கின பெறகுதான் ஒனக்குக் கல்யாணம்னு...அவனும் வாங்கிட்டான்..."

''ஆமாமா...அது நல்லதுதான். சொந்த வீடுன்னா அது ஒரு தினுசுதானே?''

பேச்சு வெறுமையாக நீண்ட மாதிரி தெரிந்தது இருந்தாலும் அர்த்தம் இருந்தது. சரக்கின் அருமையை ஆகா ஓகோப்படுத்துகிற வியாபாரச் சாமர்த்தியம்.

ரத்தினவேலு தன் பங்குக்கு இப்படிச் சொன்னார்.

"ரிடையராகிறபோது ஒண்ணேகால் லட்சம் கிடைச்சது. பொண்ணுக்கு அப்பவே பதினஞ்சு பவுன் நகை செஞ்சு வெச்சுட்டேன். மிச்சத்துக்கு இந்த வீட்டைக் கட்டுனேன். இதுலே கொஞ்சம் கடன் இருக்கு. பென்ஷன்லே நாளும் பொழுதும் கழியுது. எனக்கு இவ ஒருத்திதானே? இந்த வீட்டை வேற யாருக்குக் குடுக்கப் போறேன்? இதுவும் இவளுக்குத்தான்...''

ராஜேந்திரன் எதிர்ப் பாணம் விட்டார்.

"நம்ம பயலுக்கு ரெண்டு மூணு இடத்துலேயிருந்து தாக்கல் வந்துச்சு. முப்பது பவுனும் இருபதாயிரம் ரொக்கமும் தர்றதாக்கூட வந்தாக. நாங்க வேண்டாம் னுட்டோம். நம்ம பூர்வீக ஏரியாவுலேதான் பொண் எடுக்கணும்னு ஒரே ஆசை. நம்ம காட்டுப்பொண்களோட அருமை, வேற யாருகிட்டேயும் அமையாது... என்ன சொல்தீக?''

இப்படியே நீள்கிற பேச்சு...ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்க, இன்னொன்று அதற்குள் உணர்த்தப்பட, இப்படியே ஒருவருக்கொருவர் மாய வலைகளை வீசிக்கொள்கிற சாமர்த்தியமாய் நீள்கிற பேச்சு...

இந்தத் தந்திரமும் போலித்தனமும் பூங்கிளிக்கு வெறுப்பூட்டியது. இத்தனை கபடமான மனிதர்களா? இவர்களது பேச்சில் இத்தனை பூடகமா? இவர்களுடனா தனது வாழ்க்கை?

அவளுக்குள் சிலிர்ப்போடு பரவுகிற நடுக்கம். கடைசியில்...

எருமைமாட்டுக்கான விலையைத் 'திகைப்பதற்கு' வியாபாரியும் தரகர்களும் மாட்டுக்காரரும் எப்படி யெல்லாம் பேசி, மாய்மாலம் செய்து, கசறி, சண்டை போட்டு, வாக்குவாதப் போர் செய்து இழுபறி நடத்து வார்களோ... அத்தனையும்செய்து முடித்த பிறகு...

இருபத்திரண்டு பவுன் நகை... அழைப்பு மோதிரம், பத்தாயிரம் ரொக்கம் என்று ரேட் பேசி முடிவாக்கப் பட்டது.

ராஜேந்திரன் அத்தனைக்குப் பிறகும் விடாமல் பேசி னார். மழைவிட்ட' பின்னும் தூவானம் விழுவதைப் போல...

அவர்பேச்சின்குறி முழுவதும் இந்தவீடாக இருந்தது. கட்டிமுடிக்க என்ன செலவாயிற்று... இன்னும் கடன் எவ்வளவு...? இப்போது இந்த வீடு என்ன விலைக்குப் போகும்... வீட்டுப் பத்திரத்தில் வில்லங்கம் ஏதாச்சும் உண்டா...

பூங்கிளிக்குள் திகைப்பான யோசனைகள். இவர்கள் பெண்பார்க்க வந்தார்களா... வீடு விழுங்க வந்தார்களா?

தன்னைச் சுற்றிலும் ஒரு மாயச் சிலந்தி வலை பின்னப்படுவதைப்போல உணர்ந்தாள். அறுக்க முடியாத வலைப் பின்னல். முற்றுகையிட்டு, நெருங்கி...படிந்து... இறுகி, அழுத்துகிற பின்னல்.

நேற்று...

வசந்தன் தயக்கமாய் வாசலில்...

''சார்...''

வேண்டா வெறுப்பாக நிமிர்ந்த அப்பா.

''நீயா... என்ன?''

''வரலாமா சார்?''

''வா... உட்கார்... என்ன ஆளையே காணோம்?''

''வெளியூர் போயிருந்தேன் சார்...''

''எங்கே''

''செங்கல்பட்டு...''

அப்பா முகத்தில் ஓர் இறுக்கம்... அதிர்ச்சியை மறைக்கிற பிரயத்தனம். 'கல்யாண ஏற்பாட்டைக் கலைக்குறதுக்கு ஏதோ தந்திரம் பண்றானோ...?'

''என்ன வேலையா?''

''தொழிற்சங்க மாநாடு... பிரதிநிதியா போயிருந்தேன் சார்...''

''அப்படியா...?''

இறுக்கம் விலகிய நிலை. சுருங்கிய புருவங்கள் விலகித் தன்னிலைக்கு வந்தன.

வசந்தனும் ஏதோ சொல்ல முயன்றவன், அவரது முக மாற்றத்தில் கண்ட உணர்வுச் சலனத்தில் மௌனமாகிப் போனான்.

செங்கல்பட்டில் அவன் மாப்பிள்ளைப் பையனின் கடையைப் பார்த்தது, வாங்கியிருப்பதாகச் சொல்லப் பட்ட வீட்டைப் பார்த்தது, அவற்றைப் பற்றியெல்லாம் அவன் விசாரித்தறிந்த விஷயங்கள்... அதிலுள்ள அசுர ஆபத்துகள்...

இல்லை...இதைச் சொல்லஇவன்வசம் உரிமையில்லை. சொன்னால், இவனது உள்நோக்கம் சந்தேகிக்கப்படும். கல்யாணத்தை முடக்கச் செய்கிற சதியாகத்தான் நினைப்பார்...சொல்லாமல் இருப்பதுவும் துரோகம். சொன்னால் விரோதம். அவனுக்குள் தடுமாற்றம்... ஊசலாட்டம். மௌனத்தில் புதைவதைத்தவிர வேறு வழியில்லை.

''சார்...மனசுலே எதுவும் நினைக்காதீங்க சார். கல்யாண வேலைகள்லே எனக்கும் கொஞ்சம் பங்கு குடுங்க சார்.''

''அப்படியா?''

''ஆமா சார்...நா எப்பவும் அதே வசந்தன்தான் சார்.''

''சரி .. சரி''

அவன் அடிபட்ட வேதனையின் இறுக்கத்தோடு, தளர்வோடு வெளியேறிப் போனதைப் பார்க்கப் பார்க்க இவளுக்குள் பாவமாக இருந்தது.

இன்றைக்கு ..

ரத்தினவேலு பன்னிரண்டு மணி பஸ்ஸில் இறங்கி வந்தார். நடையில் ஒரு தளர்வு. பத்தாயிரம் புரட்டுவதில் அலைகிறார். முட்டிய இடமெல்லாம் நெற்றியில் காயம். தோல்வியும் அவமானமும் தான் மிச்சம்.

சாப்பிட்டு முடித்துவிட்டு ஈஸிசேரில் சாய்ந்து மெள்ளக் கண்ணயர்ந்தார். மூன்று மணி பஸ் வருகிற சத்தம் கேட்டு விழித்தார். சற்று நேரத்துக்கெல்லாம் வாசலில் ராஜேந்திரன். மாப்பிள்ளையின் அப்பா... அவர் வந்த தோரணையிலும் சிரித்த சிரிப்பிலும் கள்ளத் தனம் உட்கார்ந்திருந்தது. ஏதோ ஒரு புதிய வலையை வீச வந்திருக்கிறார்.

14

ரத்தினவேலு தடபுடவென்று எழுந்தார். சம்பந்த காரரை வரவேற்பதில் அவருக்குள் ஓர் உற்சாகம்... பரபரப்பு!

''வாங்க... வாங்க... பூங்கிளி, காபி போடும்மா... சாப்டுறீங்களா?''

''இல்லே...இல்லே. சாப்டுட்டு வந்துட்டேன். காபி மட்டும் போதும்.''

''அப்ப சரி... என்ன விஷயமா வந்தீக? ரொக்கத்தை வாங்கிட்டுப் போகணும்னு வந்தீகளா?''

''ரொக்கத்துக்கு என்ன அவசரம்...இன்னும் பத்து நாள் கழிச்சுக்கூட வாங்கிக்கிடலாம். அது இப்பஒண்ணும் பிரச்னையில்லே.''

ரத்தினவேலுவுக்கு ஆறுதலாயிருந்தது. ஆனால், ராஜேந்திரன் வார்த்தையை முடிக்காமல் இழுக்கிற இழுப்பைப் பார்த்தால், வேறு ஏதோ பூதம் கிளம்புகிற மாதிரி இருக்கிறதே...

அவருக்குள் உதைப்பு...முன்கோப சுபாவம் முகம் காட்ட முண்டுகிறது. எரிச்சல் வருகிறது. பேச்சு மீறி எப்படிப் புதுப் பிரச்னையைக் கிளப்பலாம்? வருகிற கோபத்தை அடக்கிக் கொண்டார். வேறு வழியில்லை பெண்ணைப் பெத்தவர்.

''சொல்லுங்க'' என்றார் யோசனை இல்லாதவரைப் போல.

''எம் பய வீடு வாங்கியிருக்கான்னு சொன்னேன் இல்லே?''

"ஆமா..."

"பத்திரம் முடிக்கிறப்ப ரூவா பத்தாக்குறை. ஒரு கடைக்காரர்கிட்டே ஐம்பதாயிரம் வாங்கியிருக்கான். ரெண்டு பைசா வட்டி."

"அதுக்கென்ன?"

"அவருகிட்டே ஒரு பொண்ணு இருக்கு. அதை எம் பயலுக்குக் குடுத்துறணும்ங்கிற நோக்கத்துலே...கேட்ட வுடனே ரூவாயைத் தூக்கிக்குடுத்துட்டாரு. 'அவசர மில்லே...பதறாம குடுங்க'ன்னு தாராளமாச் சொல்லி யிருக்காரு. இப்ப பய ரூட் மாறிட்டான்னு தெரிஞ்ச வுடனே, ரூவாய்க்கு அவசரப்படுத்துறாரு..."

"ம்..."

"அதான்...உங்ககிட்டே வந்தேன்..."

"ஏங்கிட்டேயா? எதுக்கு?"

"உங்களாலே ஏதாச்சும் உதவ முடியுமான்னுதான்... நீங்க மனசு வெச்சா செய்யலாம். மனமிருந்தா மார்க்கம் வரும்."

"என்னாலே எப்படி முடியும்?"

"என்னிக்கு இருந்தாலும் இந்த வீடு உங்க மகளுக்குத் தானே?"

ரத்தினவேலுவுக்கு அடிவயிற்றில் ஐஸ்கட்டியைப் பதித்த மாதிரியிருந்தது. சிலீரென்று பரவிப் பாய்கிற உள்ளதிர்வு.

நிச்சயதார்த்தம் நடந்த அன்று...

இந்த வீட்டைப் பற்றி மாறி மாறித் துருவி விசாரித் தாரே...அது இந்த நோக்கத்தில்தானா? ஏதோ ஐம்பதா யிரம் பிரச்னை புதுசாய் முளைத்த மாதிரி இவர் பேசுவது

வெறும் பாவலாதானா? அன்றைக்கே இந்தப் பள்ளம் இருந்திருக்கிறது. இன்னும் என்னென்ன பள்ளம் இருக்கிறதோ... எந்தெந்த நேரத்தில் தலைதூக்கப் போகிறதோ...?

''என்ன...ரொம்ப யோசிக்கீக?''

தூங்கின கோழி முழித்த மாதிரி சடக்கென்று தலையை உயர்த்தினார் ரத்தினவேலு. அடக்கி வைத்திருந்த சுபாவம் மீறிக்கொண்டு பீறிட...முன்கோபமாய் நாக்கு.

''வீட்டைப்பத்தி உங்களுக்கு எதுக்கு பேச்சு? நிச்சயதார்த்தத்துலே ஊர்ப் பெரியவுக முன்னாடி என்ன பேசினோமோ...அதுலே மட்டும்தான் நிக்கணும்.. வீடுங்கறது என்னோட சுய சம்பாத்தியம். அதை நா என்ன வேணும்னாலும் செய்வேன். அதுலே தலையிட யாருக்கும் ரைட்ஸ் கிடையாது.''

''அதுக்காகச் சொல்லலே...''

''எதுக்குச் சொன்னாலும் சரி...மகளோட சேர்த்து இந்த வீட்டையும் பறிகுடுத்துட்டு, நா என்ன செய்ய? நடுத்தெரு மரத்தடியிலே கஞ்சி காய்ச்சிக் குடிக்கவா? நாதியத்த அனாதை மாதிரி தெருவுல செத்துக் கிடக்கவா?''

''ஐயையோ...நீங்க ரொம்பக் கோபப்படுதீகளே...''

''கோபப்படலை. மனசுலே உள்ளதைச் சொல்லுதேன். இந்த வீடு என்னோட மகளுக்குத்தான். அது என்னோட கண்ணுக்குப் பின்னாலேதான். பூங்கிளி பாத்து இந்த வீட்டை என்ன செஞ்சாலும் சரிதான்...''

வாத்தியார் ரத்தினவேலுவின் முகமே மாறிப் போனதை ராஜேந்திரன் கவனித்தார். நிலைமை சரி

யில்லை என்றவுடன் ராஜேந்திரன் விரித்த வலையை மளமளவென்று சுருட்டினார். முகத்தில் ஒரு குழைவான சிரிப்பு... பதுங்குகிற புலியாக உணர்ச்சிகளை உள்ள டக்கிக் கொண்டார்.

''சரி, சரி... சம்பந்தி...கோபப்பட வேண்டாம். ஒத்தாசை பண்ண முடியுமான்னு கேக்க வந்தேன். முடிய லேன்னா... பரவால்லே. நல்ல காரியம் நடக்கட்டும். பின்னாலே பாத்துக்குவம்.''

ரத்தினவேலுவைச் சமனப்படுத்துகிற பவ்யத்துடன் கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு 5.30 மணி பஸ்ஸுக்குப் போய்விட்டார் ராஜேந்திரன்.

ரத்தினவேலுவின் உள்மனதில் முகம் தெரியாத ஒரு திகில். ஆழம் பார்க்காமல் காலை விட்டுவிட்டோமோ என்கிற உளைச்சல். நம்ம வட்டாரத்து மனிதர்கள் என்று நம்பியது தப்போ? இன்னும் நன்றாக விசாரித்தறிந்திருக்க வேண்டுமோ...

அடுப்பங்கரைக்குள்ளிருந்து வெடித்தெழுகிற விசும்பல் சத்தம். அடக்கும் பிரயத்தனத்தை மீறிக்கொண்டு வெடிக்கிற அழுகைப் பீரிடல்.

'நடுத்தெரு மரத்தடியில் கஞ்சி காய்ச்சிக் குடிக்கவா? நாதியத்து அநாதை மாதிரி தெருவுலே செத்துக்கிடக் கவா?' என்ற ரத்தினவேலுவின் வார்த்தைச் சிறல்கள், பூங்கிளியின் பூப்போன்ற மனசைக் கிழித்துவிட்டன. அவளுக்குள் குப்பென்று பொங்கியெழுந்த சோகக் கற்றை...

திடுக்கிட்டு எழுந்தார் ரத்தினவேலு. ஒரு பதைப் போடு உள்ளே போனார். சுவரில் சரிந்து, குத்துக்கல் வைத்து உட்கார்ந்த நிலையில் முகத்தை மூடிக்கொண்டு அழுது குலுங்குகிற மகள்...

பதறிப் போனார்.

"என்னம்மா...எதுக்கு அழறே?"

"ஏப்பா...இந்தக் கல்யாணம் இப்ப வேணுமா?"

"ஏம்மா...?"

"உங்க அருமை தெரியாத அல்பமா இருக்காங்கப்பா... உங்களை ரொம்பக் கொடுமைப் படுத்துறாங்கப்பா..."

"இல்லேம்மா... இது கொடுமையில்லேம்மா... ஏங்கடமை ...ஒன்னைக் கரையேத்தறது ஏங்கடமை!"

"இல்லேப்பா... நீங்க படுறபாட்டைப் பாக்கச் சகிக்கலைப்பா..."

"இல்லே பூங்கிளி.. நீ மனசை அலட்டிக்காதே. சும்மா இரும்மா. மத்ததை நான் பாத்துக்கிடுதேன்..."

அவள் சாந்தமாகவில்லை. சமாதானம் ஆகவில்லை. பேசப்பேச வேதனை கிளறப்படத்தான் செய்யும். மௌனமே ஆற்றும். இந்த நினைப்பில் ரத்தினவேலு மீண்டும் நடைக்கு வந்தார்.

அங்கே...

வசந்தன் நின்றான்.

"என்னப்பா...?"

"ஒண்ணுமில்லே சார்...இந்தாங்க..."

அவன் கையில் கற்றையாய்ப் பணம். ஐயாயிரம் கட்டாக இரண்டு.

"என்னது?"

"எங்கம்மா காதுகள்லே பாம்படம் கெடந்ததுல்லே சார்?"

''ஆமா...''

''காதுலே புண்ணு வந்துருச்சு. அதனாலே அதை வித்துட்டோம் சார். அந்தப் பணந்தான் இது. உங்களுக்கு உதவியாயிருக்கட்டும்னு அம்மா குடுத்துட்டு வரச் சொன்னா...''

அவருக்குள் எதுவோ நொறுங்கிச் சரிகிற உணர்வு. தனது மதிப்பீடுகள் தனது முன்பே கிழிந்து சிதைகிற நிஜ தரிசனம். உள்ளுக்குள் உடைகிற நினைவுகளுக்குள் மீறிக் கொண்டு எழுகிற கர்வம். தான் என்கிற அகம்பாவம். தனது நிழலில் வளர்ந்த ஒரு சிறுவனிடம் தான் உதவி பெறுவதா என்கிற உறுத்தல்.

''என்ன இது, எனக்குச் செய்கிற தானதர்மமா?''

''இல்லே சார். எங்கையில இது இருந்தா வெறுங் காகிதம். உங்க கையிலயிருந்தா...இது ஒரு காரியம்.''

''கடனா? வட்டியா?''

''இல்லே சார்... வெச்சுக்குங்க. எப்ப முடியுதோ... அப்படி திருப்பிக் குடுங்க சார்...''

அவருள் இன்னும் இறுக்கம்.

''சார், படிக்க வராம இருந்த என்னைப் படிக்க வெச்சீக. மேல்படிப்புக்கு உதவியும் செய்ஞ்சீக. உங்களாலேதான் நான் இப்படி வளர்ந்துருக்கேன். எனக்கும் நன்றிக்கடன் செய்ய வாய்ப்புத் தரவேண்டாமா சார்?''

நெக்குருகிப் போனார். அவனது சொற்கள். உணர்ச்சியில் குழைந்த வார்த்தைகள் அவருக்குள் என்னவோ செய்தன. வாங்கிக்கொண்டார்.

பூங்கிளியின் வயதுத் தோழிகள் வந்து போய்க் கொண்டிருந்தனர். வருவது... கொஞ்ச நேரம் உட்கார்ந்து

எதையாவது பேசுவது, போய் விடுவது. பேசுகிற பேச்சுகளில் அர்த்தமற்ற கேலி கிண்டலும் சிரிப்பும் கூத்தும்தான் ஜாஸ்தி. காரியார்த்தமான பேச்சுகளும் இருக்கும். அது ரொம்பக் கமுக்கமாக இருக்கும். காதுக்குள் சத்தமாய்—மனசுக்குள் மனசாய் பேசிக் கொள்கிற பாங்கில்—இருக்கும்.

செல்லம்தான் அடிக்கொரு தடவை வந்து வந்து போகிறவள். ரொம்ப நெருக்கம். அவள் வந்தால், ஒன்றும் பேசமாட்டாள். நடக்க இருக்கிற மயானக் கூத்தின் குணமறிந்து மௌனசாட்சியாய் உட்கார்ந்திருப்பாள்.

அப்படியே பேசினாலும் கிராமத்துப்பெண்களின் அவலப்பிழைப்பைப் பற்றித்தான் பேச்சு. அறியாமை, அச்சம், அதிகப்படியான மானஉணர்ச்சி ஆகிய சுமைகளின் அடியில் நசுங்கிப்போகிற அவர்களது கனவுகள். வாழ்க்கை.

முனியம்மா கதைகள்தான் பேச்சு.

"ஏண்டி...இம்புட்டுக் காலமா என்னென்னமோ பேசிக்கழிச்சோமே...என்ன பிரயோசனம்? கடைசிக் கடைசியா...ஒம்பொழப்பும் முனியம்மா கதை மாதிரி தானே ஆகப்போகுது? மறுத்துப்பேச ஓங்கிட்டேயும் தெம்பு இல்லியே..."

செல்லம் குரலின் தொனியில் கண்டனமா, அனுதாபமா? இரண்டும்தானா? பூங்கிளி தரையைப் பார்த்துப் பெருமூச்சு விடுவாள்.

"எதிரியாயிருந்தா...மறுத்துப் பேசிரலாம். பெத்து வளர்த்த அப்பாகிட்டே என்னத்தைப்பேச?எப்படிப்பேச"

"அப்படின்னா பேசக்கூடாதா?"

''எப்படி செல்லம் பேச? எல்லாருக்கும் வாய்ச்ச அப்பாவா, எங்க அப்பா? அவருக்குன்னு ஒரு அடை யாளமே வெச்சுக்காம... அவரையே தொலைச்சுட்டு என்னை வளர்த்தவராச்சே...அ ம் ம ா வ ா யி ரு ந்து சோறூட்டி, மருந்துகுடுத்து, மடியிலே போட்டு ஒறங்க வெச்சிருக்காரு. பாட்டியாயிருந்து கதைகதையா சொல்லி என் அறிவை வளர்த்துருக்காரு. ராத்திரி நேரத்துலே... கூடப் பொறந்த அக்கா மாதிரி பாட்டுப் பாடி வெளையாடியிருக்காரு...எம்மேலே ஒரு தூசு துரும்புக் கூடப் படவிடாம காப்பாத்தியிருக்காரே...''

''நீ சொல்றது நெசந்தான். எதுக்காகப் பட்டோம்னு தெரியாமலேயே அவருகிட்டே எத்தனை தடவை அடி வாங்கியிருக்கே?''

''நெசந்தான்...''

''பாசமும் பயமும் சேர்ந்துதானே ஒன்னை இப்ப ஊமையாக்கியிருக்கு...?''

''ம்...''

''முனியம்மா கதையும் இதுதானே?''

''ஆமா...ஒண்ணுதான்...''

''பாரதியாரு பொஸ்தகத்தை விழுந்து விழுந்து படிச்சியே... என்ன பிரயோசனம்? எழுதப் படிக்கத் தெரியாத முனியம்மா மாதிரியே நீயும் இருந்தா என்ன ஞாயம்? ஒதறிப்பேசுனா என்ன? இந்த மாப்பிள்ளே எனக்குப் பிடிக்கலேன்னு'கட்'டுன்னு சொல்ல வேண்டியது தானே? வாயிலே என்னத்தை வெச்சிருந்தே? இப்பக் கெடந்து சிரழியப்போறது நீதானே?''

''முடியலியே செல்லம்...சொல்ல மு டி ய லி யே... அன்னிக்கு முனியம்மாவையும் சுப்புத்தாயையும் கொறை

சொல்றதுக்கு லேசா இருந்துச்சு. 'கோழை...தொடை நடுங்கி'ன்னு வாய் வலிக்காம பேசுனோம். இன்னிக்கு வாய் பேச வழியில்லியே... நா என்ன செய்யட்டும்?''

பூங்கிளியின் கண்களில் வழிகிற நீர்...உலர்ந்து போய்த் துடிக்கிற உதடுகளைப் பற்களால் கடித்து அழுகையை அடக்குகிற பலவந்தம்... அந்த முயற்சியில் கன்னக் கதுப்புகளில் பற்கடிப்புகளின் புடைப்பு.

''அதான் சொல்றது... 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியு'ங்குறது.''

புறத்தில் முகம் காட்டாமல் அந்தரங்கத்தில் புதைந்து கிடக்கிற அவலங்களை—அதன் ரணங்களை-இப்படித் தான் கிளறிக்கிளறி விடுவார்கள்.

முள் குத்தின வலி பாதி, முள்ளெடுத்த வலி மீதி என்கிற மாதிரிதான் இவர்கள் பேச்சும்.

அப்படி ஒரு நாளில்தான் —

சுப்புத்தாய் வந்தாள். நடைக்குள் வந்தாள், உள் வீட்டுக்குள் வரத் . தயங்கித் தேங்கினாள்.

''பூங்கிளி... இருக்கியா?'' என்று சத்தம் கொடுத்தாள். பதில் குரலின் தொனியிலேயே வரவேற்பையும் வெறுப்பையும் கண்டுணர்ந்து கொள்ளலாம் என்கிற நினைப்பு.

அவளுக்குள் ஒரு தாழ்மையுணர்ச்சி. கல்யாணத் துக்கு முந்தைய அந்தச் சுப்புத்தாய் இப்போது இல்லை. கல்யாணத்துக்கு பிந்தைய அனுதாபத்துக்குரிய சுப்புத் தாயுமில்லை. முனியம்மாவுக்கு வாய்த்த ராக்கம்மா மாதிரி... இவள் இன்னொரு குடும்பத்துக்குள் ஆமையாய் நுழைந்து விட்ட வைப்பாட்டி. விதவையான பிறகு எதிர்காலப் பாதுகாப்புக் கருதி, கிடைத்த உறவைக் கிச்சென்று பிடித்துக் கொண்ட ஆசைநாயகி. கேவலத்துக்

குரியவள் என்று நினைக்கப்படுகிறவள். முதுகுக்குப் பின்னால் பல பெண்கள் காறித் துப்பிவிட்டுப் போவதை மனசால் உணர்ந்து செத்திருக்கிறாள்.

"யாரது? சுப்புவா? வாடியம்மா... வா."

செல்லம்தான் சத்தம் கொடுத்தாள்.

பூங்கிளிதான் அன்போடு கண்டித்தாள்.

"ஆம்பளை இருக்குற வீடா? பேசாம, 'மளமள'ன்னு வரவேண்டியதுதானே?"

"மானங்கெட்ட சிறுக்கி நா. என்ன நெனைப்பீயோன்னு ஒரு பயந்தான்."

"சிறுக்கியாயிருக்குறதும் இல்லாததும் ஒம்பாடு. நீ வந்து நின்னதாலே நாங்க அழுக்காயிரவா போறோம்?"

அப்புறம்... அவர்கள் மூவருமாய் பேச... பூங்கிளிக்குள் ஒரு புதிய உணர்வு. புதிய திசையில் ஓடுகிற நினைவு.

சுயசித்ரவதை செய்துகொண்டு உயிர்வாழும் சுப்புத் தாய், பூங்கிளிக்குள் ஆழமாய் ஊடுருவினாள். பற்ற வைக்கப்பட்ட வெடிமருந்து திரிமாதிரி.

"என்னை மாதிரி ஆயிடாதேடி... பாதகத்தி" என்று வெடித்து சிதறும் பாறைகளின் சத்தமாய் அந்த அபாயக் குரல்.

'பாரதியாரு பொஸ்தகத்தை விழுந்து விழுந்து படிச்சியே.., அதாலே என்ன பிரயோசனம்? எழுதப் படிக்கத் தெரியாத முனியம்மா மாதிரிதானே நீயும்?'

செல்லத்தின் பாசக்கொதிப்பில் சிதறித் தெறித்த சுடு சொற்கள்.

"இத்தனைக்குப் பிறகும் உன்னிடமிருந்து எதையோ ஒன்றை எதிர்பார்க்கிறேன். நான் எதிர்பார்க்கிற அந்த

ஏதோ ஒன்று, உன்னுள்ளிருந்து வெளிப்படுவதில்தான் நமது கனவும் வாழ்வும் கைவரப் பெற முடியும் என்று நம்புகிறேன்."

வசந்தனின் கடித வரிகளில் கடைசித் துளிகள்.

எது அது? என்னிடமிருந்து எல்லோரும் எதிர்பார்க்கிற அது எது? அந்த 'ஏதோ ஒன்று' என்பது எது? எது?? எது???

பேச்சுப் பேச்சாக இருக்க.. பூங்கிளிக்குள் தீவிரமாய் யோசனைகள்... முடிவில்லாமல் அலை பாய்கிற நினைவுகள்... 'அதுவா...இதுவா' என்று இனம் புரியாமல் இருட்டுக்குள் நடத்துகிற குருட்டுத் தேடல்கள்.

கல்யாண காரியங்கள் சிறகு கட்டிக்கொண்டு பறந்தன. வசந்தன் மூலைமூலைக்கு ஓடினான். அழைப்பிதழ் தயாரிக்க, அதை அச்சடிக்க, பந்தல் போடுகிற ஆள் பிடிக்க, சமையல் பாத்திரங்கள் ஆர்டர் சொல்ல என்று வசந்தன் புயலாய் ஓடியலைந்தான். வீட்டை வெள்ளையடித்து அலங்கரித்து என்று வேலைகளின் ஒவ்வோர் அணுவிலும் மனிதப் புயலாய்ச் சீறிச் சுழன்று பணியாற்றுகிற வசந்தனுடன் தோள் கொடுக்க முன்னாள் மாணவர்கள். கிராமத்து இளவட்டங்கள்.

கிராமத்தின் சகல நல்ல இதயங்களும் ஓருருவாகிப் போனது போல... ஒரு கூட்டு செயல்பாடு.

என்றோ... எப்போதோ என்றிருந்த கல்யாண நாள், கிட்ட கிட்ட நெருங்கி வந்தது. வீடே புதுக்கோலமாயிற்று. ஜனசந்தடி. விட்ட சொந்தம் தொட்ட சொந்தமெல்லாம் 'நல்லதில்'கூட வந்து சேர... கல்யாணம் ஜே ஜே என்று நெருங்கி வந்தது...வரப்போகிற பூகம்பம் அறியாமல்.

15

கிராமக்களத்தில் நாலைந்து கூளப்படப்புகள்... அரை டவுசர் சிறுவர்கள் மேல்சட்டையில்லாமல் கும்பல் கும்பலாய் விளையாடிக்கொண்டிருந்தனர். 'கள்ளன்-போலீஸ்' விளையாட்டு. 'கல்போகுது' விளையாட்டு, 'சினிமாப் படப் பெயர்' சொல்லுகிற விளையாட்டு என்று அந்தச் சிட்டுக்குருவிகளின் வகை வகையான சிறகடிப்பு.

அந்த உல்லாச விளையாட்டுகளின் ஓங்காரக் கூச்சலை அமுக்கிக்கொண்டு மைக் செட்டின் மங்கல ரிகார்டு சத்தம்...

பிள்ளைகளின் விளையாட்டு சட்டென்று திகைத்தது.

''ஏலேய்...நம்ம ஊர்லே ரேடியா படிக்கு டோய்'' என்று ஒரு பையனின் சத்தம்.

''நம்ம 'நாலாப்பு' வாத்தியாரு வீட்லேதா ரேடியா...''

''ஆம டோய்...நம்ம பூங்கிளியக்காளுக்கு நாளைக்குக் கல்யாணம் டோய்...டும்டும்...ப்பீப்பீப்பீ...''

''அடிச்சக்கை...நாளைக் காலையிலே நமக்குக் கல்யாணச் சாப்பாடு டோய்...சாம்பாரும், அப்பளமும் ரொம்ப நல்லா இருக்கும்.''

''நா அஞ்சு அப்பளம் வாங்கித்திம்பேன்.''

''யாராயிருந்தாலும் ஒண்ணுதான். அதுக்குமேலே கேட்டா அடிதான்...''

''ஏலேய்...வாங்கடா ரேடியா பாக்கப் போவம்... நம்ம தலைவரு படத்துலே பாட்டுப் போடச்சொல்லு வோம்...''

''அய்ய்ய்... வள்ளி வரப்போறா... துள்ளி வரப் போறா...''

டவுசரை அர்ணாக்கயிற்றில் சொருகிக் கொண்டு பாட்டுப் பாடிக்கொண்டே ஓடுகிற சிறுவர்கள்...

விடிந்தால் பூங்கிளிக்குக் கல்யாணம்.

வீட்டு முன்னால் பந்தல்... வாழை மரங்கள்... தடபுடல் ஏற்பாடு. முன்னாள் மாணவர்களின் உழைப்பு... ஏகப் பட்ட சொந்தக்காரர்கள். வீடு முழுக்கப் பட்டுச் சேலை களின் சரசரப்பு. சிறுவர் சிறுமிகளின் உல்லாசக் கும்மாளம்.

அந்தக் கும்மாள இரைச்சலை அமுக்குகிற மைக்செட் டின் அலறல்.

விடிந்தது.

உள்ளறைக்குள் பூங்கிளி. பட்டுச்சேலையை உடுத்து வதற்குத் தோழிகள் அவசரப்படுத்தினர். முகூர்த்தப் பட்டையும் ஜாக்கெட்டையும் தாம்பாளத்தில் மடித்து வைத்து வெளியே அனுப்பினர். ரத்தினவேலு, மற்ற நெருங்கிய உறவினர்கள் தொட்டு வணங்கி ஆசீர்வதித்து வந்த பின்பு...

அலங்கரித்தனர். அவளுக்குள் நினைவுகள். கலக்க மான நினைவுகள். அச்சமும் திகிலுமான நினைவுகள்.

எதுவும் செய்யாமலேயே இருந்து விட்டோமே... எதிர்ப்பு இல்லாமல் வெள்ளத்தில் மிதக்கிற துரும்பாக விதியின் வழியில் மிதந்து செல்கிறோமே என்கிற உளைச்சல்.

செல்வம் சொன்ன மாதிரி, அப்பா மீதுள்ள பாசமும் பயமும்தான் மௌனத்துக்குக் காரணமா? அது மட்டும் தானா? இல்லை... சமூக மரபும்தான்.

எதிர்த்துப் பேசியிருந்தால்...மறுத்துப் போராடியிருந்தால்... அதை ஊர் அங்கீகரிக்குமா? ஊர்ப்பெண்களே ஒப்புக் கொள்வார்களா? என்ன சொல்லியிருப்பார்கள?

"ஊரே கையெடுத்துக் கும்புடுற வாத்தியார். அப்பேர்ப்பட்ட மனுசரையா இந்தக் குட்டி நாய் எதுத்துப் பேசுறது? அடியாத்தி... கலி முத்தித்தான் போச்சு

"தாயும் தகப்பனுமாயிருந்து பார்த்துப் பார்த்து வளர்த்த அப்பன், கெடுதலா பண்ணுவான்? பொட்டக் கழுதை வாயைப் பொத்திக்கிட்டுக் கழுத்தை நீட்ட வேண்டாமா?"

"பொட்டச்சிக்கு இம்புட்டு வாயா? இம்புட்டு எதுர்த்துப் பேசறாள்னா, என்ன அர்த்தம்? மனசுக்குள்ளே யாரையோ நெனைச்சுக்கிட்டிருக்காள் போலிருக்கு அதான்...இந்தக் குதியாளம் போடுதா..."

பெண் சுதந்திரம் எடுத்துக் கொள்வதை ஊரும் உலகமும் சகித்துக் கொள்ளாது. "வாயாடி. திமிர் பிடித்தவள்" என்றுதான் தூற்றும். இந்தச் சமூக மரபின் குரூரம்தான் மிரட்டிவிட்டதா? ஊமையாக்கி விட்டதா?

முனியம்மா...சுப்புத்தாய் கதிதானா? மீள வழியில்லையா?

கண்ட கனவில் நிகழ்ந்த மாதிரி, தரை தட்டுப்படாத பாதாளத்தில் கால் நழுவிக் கொண்டு போக வேண்டியது தானா?

பந்தலிலிருந்து மனிதச் சத்தம்.

"பொண்ணைக் கூட்டிட்டு வாங்க...பொண்ணை வரச் சொல்லுங்க..."

அவளை நாலைந்து பெண்கள் அழைத்துச் சென்றனர். அவளுக்குள் பயம். மனம் படபடத்தது. வேர்த்துக் கொட்டுகிற மாதிரியிருந்தது. பந்தல் நிறைய ஆட்கள். நெருக்கமாய் அடர்த்தியாய் மனிதர்கள்.

அந்த மனித அடர்த்தியின் பார்வைப் பொருளாய் நிற்கிற லஜ்ஜை உணர்வு. அவளுக்குள் நிஜமாகவே தலை நிமிர முடியாத வெட்கம். தர்மசங்கடம்.

பந்தல் முழுக்க நிழல். நடுவில் சாய்மானம் உள்ள நீளப்பெஞ்சு. அதன்மேல் விரிக்கப்பட்ட புதிய ஜமுக்காளம். அதில் உதிர்ந்து கிடக்கிற ரோஜா இதழ்கள். அதில் மாப்பிள்ளை. சந்தன சில்க்கான வேட்டி, சட்டை. கழுத்து நிறைய மாலை. கையில் வாட்ச். விரலில் புதிய மோதிரங்கள்.

பெஞ்சியின் முன் ஒரு சின்ன ஸ்டூல். அதன்மேல் சுடர்கள் எரியும் குத்துவிளக்கு. பக்கத்தில் ஒரு தட்டு அதில் மஞ்சள்பால் தெளித்த தேங்காய். பழம். வெத்தலை பாக்கு. கற்கண்டு. பத்தியின் புகை. இத்துடன் தாலி கோத்த தங்கசெயின்.

இவளைக் கொண்டுபோய் மாப்பிள்ளை அருகில் உட்கார வைத்தார்கள். கொடிய தண்டனை. அந்நிய ஆடவன் பக்கத்தில் முதன்முதலாக உட்கார்கிறாள் அதுவும் இத்தனை பேர் பார்க்க. அவளுக்குள் கொத்திப் பிடுங்குகிற லஜ்ஜை. நாணம்.

அவள் கழுத்தில் கைபோடுகிற பெண்கள். நகையை மாலையைச் சரி செய்கிற பெண்கள். முகத்தின் வியர்வையை ஒற்றி யெடுக்கிற பெண்கள்.

தட்டை எடுத்தார்கள். கூட்டத்துக்குள் ஆசீர்வாதத்துக்கு அனுப்பினார்கள். மனிதச்சத்தம். ஒருவரை ஒருவர் ஏவுகிற கூச்சல். கண்டிக்கிற கூச்சல். உற்சாகப்படுத்துகிற

கூச்சல். உல்லாசமான கேலிக் கூச்சல். மேளக் கூச்சல். நாகஸ்வரக் கூச்சல். கூச்சல்மயம்.

தட்டு திரும்பி வந்து சேர்ந்தது. கெட்டிமேளம் போடச் சொல்கிற உசுப்பல் சத்தம்.

அப்போது—

யாரும் எதிர்பாராத—யாரும் ரசிக்க முடியாத... கர்ணகடூரக் குரலில் மாப்பிள்ளையின் அப்பா ராஜேந்திரன்.

''முகூர்த்தத்துக்கு முந்தி ஒரு விஷயத்தைப் பேசிட்டா... நல்லது.''

அந்தக் குரலிலிருந்த உறுதிமிக்க தீர்மானம். ஒரு விவகாரத்துக்குத் துணிந்துவிட்ட வைராக்கியம்.

ஆள் ஆளுக்குச் சத்தம் போட்டனர்.

''என்னய்யா...விவகாரம் பேசுற நேரமாய்யா, இது?''

''தாலி கட்டச் சொல்லுங்க...''

''இந்த ஆளு வம்பு பண்றாரா?''

''இடம் தெரியாம வாயை விடுறாரு. வாங்கிக்கட்டு வாரு போலிருக்கு...''

ராஜேந்திரன் பலத்த சத்தத்தில் கத்தினார். மழுங்கச் சிரைத்த முகத்தில் வியர்வை முத்துகள்.

''விஷயத்தைப் பேசி முடிச்சாத்தான் கல்யாணம். இல்லேன்னா...இல்லே...''

கூட்டம் திகைத்தது. குழம்பியது. கொதித்தது. ஒரே கசகசப்பு. ரத்தினவேலு முகம் இருண்டுபோய் வாடிக் கிடந்தார்.

பூங்கிளிக்குள் தீக்குழி!

கல்யாணப் பந்தலே கலகலத்துப் போயிற்று. குதூகலமும் உல்லாசமுமாய் இருந்த கூச்சல் அடங்கிப்போய்... குமுறலும் குமைச்சலுமான குழப்பம்.

ரத்தினவேலு வேரறுந்த செடியாய் முகம்வாடிப் போனார். மணக்கோலத்தில் நிலா தேவதையாய் மகள் வந்த காட்சியில் நெகிழ்ந்துபோய்க் கிடந்தவர். தன் மனைவியின் அந்த நாளைய மணக்கோலத்தை நினைவு கூர்ந்து, உள்ளுக்குள் உணர்ச்சிக் குழம்பாகிப் போயிருந்தவர். நெஞ்சுக்குள் ஒரு குழைவு. கண்களில் நீரின் உறுத்தல்.

அப்போதுதான்...

ராஜேந்திரனின் இந்தப் பேய்க் கூப்பாடு. மயிலைக் கண்ட பாம்பாக அரண்டு போய்விட்டார். கல்யாண காரியமே குழப்பத்தில் முடிந்து போகுமோ என்கிற பயம். ஊர் மதிக்கிற வாழ்க்கை வாழ்ந்துவிட்ட தனக்கு. தலை நிமிர முடியாத அவமானம் வந்து சேருமோ என்கிற திகில். தலையை அடகு வைத்தாவது இந்தக் கல்யாண காரியம் நிறைவேறி முடிந்துவிட்டால் போதும்... மானத்தைக் காப்பாற்றினால் போதும்.

பதைத்துப்போய்க் கேட்டார்...

''என்ன விஷயம் பேசி முடிக்கணும். சொல்லுங்க?''

''வீட்டு விஷயம்தான்...''

''வீட்டு விஷயமா?''

''ஆமா... இந்த வீட்டு விஷயம்தான். இந்த வீடு இந்தப் புள்ளைகளுக்கு உண்டா இல்லையாங்குறது இப்பத் தெரிஞ்சாகணும்.''

"இது என்ன பிரச்னை? எனக்கு ஒத்தைப்புள்ளை பூங்கிளி. இந்த வீடு அவனைத் தவிர வேறு யாருக்குப் போகும்?''

''இதுலேதான் பிரச்னை. இந்த வீடு உங்க சுயசம்பாத்தியம். நீங்க தெருவுலே போற நாய்க்குக்கூடக் கொடுக்கலாம். அதுதான் சட்டம். இந்தப் பொண்ணு செங்கல்பட்டு போனபிறகு ஒத்தையாளா நீங்க இருக்கிறபோது... உங்களுக்கு உதவிகள் தேவைப்படும். அப்ப அதுக்குத் தகுந்தாப்புலே...வீட்டைக் கை மாத்தி விடமாட்டீகங்கிறதுக்கு என்ன உத்தரவாதம்?''

''அதனாலே...?''

''இப்பவே இந்த வீடு இந்தப் புள்ளைகளுக்குத் தான்னு நீங்க இந்தச் சபையிலே சொல்லணும். நாளைக்கேகூட இந்த வீட்டை இந்தப் புள்ளைக இஷ்டம் போலப் பயன்படுத்திக்கலாம்னு இந்தச் சபை முன்னாலே சொல்லணும்.''

வசந்தன் குறுக்கே பாய்ந்தான்.

''அதாவது நாளைக்கே இந்த வீட்டை வித்துத் துட்டாக்குறதுக்கு உங்க மகனுக்கு அதிகாரம் வேணும்?''

''ஆமா...''

ரத்தினவேலுவுக்குள் திகுதிகுவென்று எரிந்தது. அற்பத்தனத்தைச் சகித்துக் கொள்ள முடியாத நியாயாவேசம். முகம் சிவந்து வெளிப்படுகிற முன்கோபத் தீ.

நிச்சயதார்த்தத்துக்குப் பதினைந்து நாள் கழித்து வந்து கேட்ட அதே விஷயம். பதிலைக் கேட்டுவிட்டுப் பம்மிப் பதுங்கிப்போன ஆள்...இப்போது, அதே விஷயத்தைச் சபையில் வைத்துக் கேட்கிற நெஞ்சழுத்தம். கழுத்தாம்பிடியான கட்டத்தில் கத்தியை நீட்டிக் கேட்கிற

கயஸமத்தனம். மான அவமானம் பற்றிய உணர்வில்லாமல் சுரணைகெட்டதனமாய் நெறிகெட்டுக் கேட்கிற குரூரம்.

டீக்கடை முன்னால் அடித்துத் தள்ளிய அந்தக் குடிகாரனைவிட ஈனத்தனமானவன். இப்படியே ஓங்கி ஒரு மிதி மிதித்துத் தள்ளிவிடலாமா? செருப்பைக் கழற்றிச் 'சப்சப்'பென்று அறைந்து விடலாமா?

மணவறையில் தலைகுனிந்து உட்கார்ந்திருக்கும் பூங்கிளி. கொதித்துத் தளதளத்த அவர் மனசு, மகள் என்கிற குளிர்நீர்த்தெளிப்பில் சற்று அடங்கியது. அடி உதட்டைக் கடித்துத் தன்னைத்தானே நிதானப்படுத்திக் கொண்டார்.

குரலை மிருதுவாக்கிக்கொள்ளச் சிரமப்பட்டார் ரத்தினவேலு.

''ஊர்ப் பெரியவுக முன்னாலேதானே நிச்சயதார்த்தம் பண்ணுனோம்?''

''ஆமா...''

''அன்னிக்குப் பேசுன நகை, ரொக்கம் எல்லாம் வந்துருச்சு, இல்லே?''

''ம்...''

''பெறகு எதுக்குத் தகராறு? வம்பு பண்ணணும்னு விருப்பமா?''

''இல்லே...நா வம்பே பண்ணலே. நீங்கதான் அடம் பிடிக்கிறீக. அன்னிக்கே... 'இந்த வீடு என்னிக்கிருந்தாலும் எம் மகளுக்குத்தான்'னு சொன்னீக. அதை இந்தச் சபையிலேயும் சொல்லிருங்க, அவ்வளவுதான். இது வம்பா? தகராறா?''

''சாமர்த்தியமா பேசுறதாக நெனைப்போ?''

"இல்லே... பேச வேண்டியதைப் பேசவேண்டிய எடத்துலே, நேரத்துலே பேசலேன்னா... அப்புறம், வம்பும் வழக்குமா வாழ்க்கை சீரழியும். அப்படி ஆயிடக் கூடாதேன்னுதான்...இப்பவே பேசுறேன்."

"இல்லாத வழக்கை இருக்குறதாகக் காட்டி, நீங்க தான் இழுத்தடிக்குறீக. மொதல்லே நல்ல காரியம் நடக் கட்டும். அப்புறம் பேசிக்கிடலாம்."

"இல்லே... காரியமே இதுக்காகத்தானே? இதை பைசல்பண்ணாம எப்படிக் காரியம் நடத்துறது?"

"அப்படியா?"

"ஆமா..."

"இதை பைசல் பண்ணாத்தான் கல்யாணமா?"

"நிச்சயமா...!"

"இந்த வீடு பூங்கிளிக்குத்தான்... எங்கண்ணுக்குப் பின்னாலே."

ராஜேந்திரன் தலையைக் கோபமாக ஆட்டி மறுத் தார்.

"அந்தப் பேச்சே வேண்டாம். இப்பவே இந்த வீடு இவுகளுக்குன்னு ஆகணும்."

"அது நடக்காது. தெருவுலே நிக்க என்னாலே முடியாது கெழடாகிப்போன இந்த வயசுலே நா மரத் தடியிலே குடியிருக்க முடியாது."

"முடியாதா?"

"முடியாது...முடியாது...முடியாது?"

"அப்ப எந்திரிடா...கல்யாணமும் வேண்டாம், ஒரு இழவும் வேண்டாம்" என்று ராஜேந்திரன் மாப்பிள்ளை யைச் சீற... அவன் திருதிருவென விழித்தான்.

''என்னப்பா...?'' என்று புரியாமல் திகைத்தான்.

''என்ன... நொன்னப்பா! எந்திரிடா மடையா... இப்படிப்பட்ட ஆளுககிட்டே சம்பந்தம் பண்ணுனா கிழிஞ்சு போயிரும்.''

16

ரத்தினவேலு அதிர்ந்தார். 'நிலைமை அத்துமீறிப் போகிறது. ஊர் சிரித்துப்போன விஷயமாகி விட்டது. கல்யாணமும் நின்றுபோனால் என்னாகும்? இந்தக் கேவலம் என்றென்றைக்குமான காயமாகி விடுமே... காலாகாலத்துக்கும் கைகொட்டிச் சிரிக்கிற கதையாகிப் போய்விடுமே...

பூங்கிளியின் வாழ்வே நாசமாயிருமே... சூனியமாயிருமே...பூக்காமல், காய்க்காமல் மலட்டு வாழ்வாய் நின்று போகுமே—

அவருக்குள் பிரளயம், தாழ்ந்து பணிந்து போவதில் உள்இடைஞ்சல். அற்பத்தனத்துக்குப் பணிவதா என்கிற மனசாட்சி.

அவரைச் சுற்றிலும் கோபாவேசமான தீச்சொற்கள்.

''எந்திரிச்சா... எங்க போவீக...? இழவுதான் விழும்...''

''ராஸ்கல், வாத்தியாரு வீட்டுக்கு வந்துட்டு நீங்க தப்பிச்சுப் போகவா...? மரத்துலே கட்டிப்போட்டுத் தொலியை உரிச்சுப் போடுவோம்...''

"இந்த ஊருக்குள்ளே நுழஞ்சு, நீங்க வம்பு பண்ணிட்டுப் போயிடவா...? நாங்க என்ன சிலையைக் கட்டிக் இட்டா அலையுதோம்...?"

மனித ஈரத்தில் நனைந்த கோபச் சத்தங்கள்... அநீதியைச் சகித்துக் கொள்ளாத கிராமத்துத் தர்மச் சீறல்கள்...மனிதர்களின் அடர்த்தியான கோபக்கற்றை.

பூங்கிளிக்குள் என்னவோ ஆகிக் கொண்டிருந்தது.

"அப்பாவுக்கா இந்தக் கதி...? ஊர் மதிக்கக் கம்பீரமாக நடந்த அப்பாவுக்கா இந்த அவமதிப்பு...? ஊரை மதிக்காத குடிகாரனை ஓடஓட அடித்து விரட்டிய அப்பாவுக்கா...? மகளைப் பெற்ற ஒரே காரணத்துக்காகத்தான் இந்தப் பலவீனமா...? அவமதிப்புக்கு உள்ளாகிறாரா? மகள் என்றால் இத்தனை இழிவா...? பெண் என்றால் அத்தனை மோசமா...?"

அவளுக்குள் அழுகை அழுகையாக வந்தது.

சின்ன வயசில் இவள் பார்த்த அப்பா... அடுப்புப் புகைக்குள் அல்லாடிய அப்பா...இவளுக்குச் சடைபின்னிப் பூ வைத்துவிட்ட அப்பா...பாவாடை, சட்டை துவைத்துக் காயப்போட்ட அப்பா... காய்ச்சலில் படுத்த அன்று, தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு புலம்பித் தவித்த அப்பா... உங்களுக்கா இந்த நெருக்கடி...? அதுவும் என்னாலா...? அடக் கொடுமையே!

அதுவும் இந்த அற்பர்களா...? அப்பா காலடிபட்ட மண்ணைத் தொடக்கூடத் தகுதியற்ற இந்த நாய்களா... இந்தக் குப்பைகளா...அப்பாவைப் பேசுவது...?

ராஜேந்திரனின் அதட்டலில் மாப்பிள்ளை பதறிப் போய் எழுந்து விட்டான்.

பூங்கிளிக்குச் செருப்படி பட்ட மாதிரி அவமானமா யிருந்தது. சுற்றிலும் ஆரவாரக் கூச்சல்... ஆத்திரக் கூப்பாடு...

ரத்தினவேலு ஒரு முடிவோடு ராஜேந்திரனைப் பார்த் தார். ரத்தினவேலுவின் மனத்தில் புயல். 'ஒரு பன்றியின் காலைத் தொட்டுக் கும்பிடும்படி ஆயிற்றே...' என்கிற கொதிப்பு... நிர்ப்பந்தத்துக்குப் பணிய முடியாமல் பணிகிற மன உளைச்சல்...கொந்திப்பிடுங்குகிற அவமான அவஸ்தை...

''இப்ப உங்களுக்கு வீடுதானே வேணும்...?''

''ஆமா...''

''வேற எதுவும் வேணுமா...?''

''இல்லே...''

''எம் மகளைக் கண்கலங்காமப் பாத்துக்குவீங் களா...?''

''பூப்போல வெச்சுக்குவோம்...''

வாத்தியாரின் குரலில் ஒரு கரகரப்பு... வேதனையைச் சகிக்கிற உள்வதைப்பு...அந்த வலியில் கரைகிற குரலின் தழுதழுப்பு.

''அப்ப சரி...''

ஒரு குன்று சரிகிற அவலமாய்...சூரியன் நொறுங்கி உதிர்கிற கொடுமையாய்... நிதானமான வேதனையோடு சொன்னார்.

''வீட்டை வெச்சுக்குங்க...போதுமா...?''

வசந்தன் ஒரு பதைப்போடு குறுக்கிட்டான்:

''சார்...''

அவனை அடக்குகிற மாதிரி இடது கையை அசைத்து விட்டு "காரியம் நடக்கட்டும்..." என்றார் இறுக்கமாய்.

ராஜேந்திரன் முகத்தில் ஒரு திருப்தி. ஒளிச் சிலிர்ப்பு.

"அப்ப சரி... உக்காருடா... அதான் சொல்லிட்டாரே. உக்காரு...தாலியைக் கட்டு...முகூர்த்தம் நடக்கட்டும்..."

தயங்கித் தயங்கி மாப்பிள்ளை உட்கார்ந்தான்.

அப்போதுதான் அந்தப் பிரளயம்...! யாரும் கண்டிராத பூகம்பம்...! இந்த மண்ணுக்கே ரொம்ப அதிசயமாய் அது நிகழ்ந்தது.

மாப்பிள்ளை உட்காரவும் பூங்கிளி எழுந்துவிட்டாள்.

அவள் நின்று நிமிர்கிற உறுதியில், கூட்டம் சலசலக்க... ரத்தினவேலு பதறினார்.

"என்னம்மா...?"

அப்பா மூச்சுச்சத்தம் கேட்டாலே பதறிப்போய் ஒடுங்கிய பூங்கிளியாக இல்லை அவள். புதிய பூங்கிளியாக அப்பாவை நேருக்கு நேராக நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் பார்வையில்...ஒரு தீக்கிளி சிறகடித்த மாதிரி ஒரு வெக்கை... ருத்ரம்!

தன் தலையெழுத்தைத் தீர்மானிக்க வேண்டிய வாழ்வின் முக்கிய கணத்தில் மௌனமாயிருந்துவிட்டதால், புருஷனையும் வாழ்க்கையையும் தொலைத்து விட்டுச் சோகச் சிற்பமாய் உருக்குலைந்து நிற்கும் மூனியம்மா...

வறுமையில் வாய் புதைத்துப் பேருக்குக் கல்யாணமாகி உயிராலும் உணர்ச்சியாலும் வதைபட்டு மூளியாகிப்

போய், வாழ்க்கையையும் சுயத்தையும் தொலைத்து விட்டுக் கேவலப் பிண்டமாய், வைப்பாட்டியாய்... மானங்கெட்ட மனுஷியாய் வாழ்கிற சுப்புத்தாய்...

இவர்களைப்போல் தானும் ஆவதைத் தவிர, வேறு புகலே இல்லையா என்று உள்ளுக்குள்ளேயே மறுகி மறுகித் தவித்த பூங்கிளி...அப்பாவையும் சமூக மரபையும் மீறித் திமிற மனத்துணிவில்லாமல் புழுங்கிக்கிடந்த பூங்கிளி...நரகம் என்று அறிவுக்குத் தெரிந்தாலும் அதில் விழமாட்டேன்' என்று சொல்கிற ஞானச்செருக்கு இல்லாமல் பயந்துகிடந்த பூங்கிளி...

இமயக்குன்றாக, கம்பீரமாய் இருந்த அப்பா...அவமான அவஸ்தையில் நொறுங்கிச் சரிந்து, பள்ளத்தின் காலடியில் பணிகிற கொடுமையைப் பார்த்த பின்னும் அவளால் சும்மாயிருக்க முடியவில்லை.

பெண் என்றால், பிடித்து வைத்த சாணி பொம்மையில்லை...அது கூட இஷ்டத்துக்கு உலர்கிறது...கீறல் விடுகிறது...புதிய உயிர்களைப் படைக்கிறது...அதை விடவும் மட்டமா பெண்...?

இனி அப்பாவுக்குப் பயப்பட வேண்டியதில்லை... சகலத்திலும் ஒழுக்கத்தையும் கட்டுமீறாத கச்சிதத்தையும் விரும்பிய அப்பா, ஒழுக்கமில்லாத ஜந்துவின் காலடியில் சரிந்து விழுந்து விட்டார். இப்போதைய அப்பா, வளைந்து போன அப்பா...கச்சிதமிழந்து குலைந்து போன அப்பா...வீழ்ந்து போன அப்பா!

இந்த அப்பாவுக்குப் பயப்படுவது நல்லதல்ல... அப்பாவுக்கே கௌரவமல்ல. அப்பாவின் வீழ்ச்சி, அப்பாவுக்காக அல்ல—எனக்காக...என் வாழ்வுக்காக...ஆம்...இனி அப்பாவை எழ வைப்பதும் என் கடமை...அப்பாவை

நிமிர்த்தி இமயமாக்க வேண்டியது என் பொறுப்பு... அப்பாவைக் கௌரவப்படுத்துவதற்காக, அப்பாவை மீறித்தான் ஆக வேண்டும்.

ஆண்மை தவறிப்போன இந்த ஆம்பளையோடு மனைவியாக வாழவா...? கல்யாணப் பந்தலைச் சந்தைக் கடையாகக்கூட அல்ல...கொள்ளைக் கூடமாகவே ஆக்கி விட்ட இந்தக் கிழட்டு ஓநாயிடம் மருமகளாய்த் தலை குனிந்து சேவை செய்யவா...? மானங்கெட்ட இந்த மனுசப் பதர்களோடு வாழ்கிற வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா...? இந்த நாய்ப் பிறவிகளின் பாதம் பணியவா...?

அவளுக்குள் பாரதி ... பெண்களுக்கே பெண்ணை முதன்முதலாய் அறிமுகம் செய்து வைத்த பாரதி... பெண்ணைச் சக்தியாய் மகா ஆற்றலாய்ப் பெண்ணுக்கு உணர்த்திய பாரதி...அவனே பாரதியாய்...

'கீழோர்க்கு அஞ்சேல்...

'சிறுமை கண்டு பொங்கு...'

'குன்றென நிமிர்ந்து நில்...'

'ரௌத்ரம் பழகு...'

'நையப் புடை...'

—பூங்கிளி எழுந்து விட்டாள். பதைத்துப் போய் "'என்னம்மா...?'' என்ற அப்பாவைப் பார்த்தாள்.

''அப்பா...நீங்க சும்மா இருங்க அப்பா...''

"ஏம்மா...?''

''உங்களை இந்தப் பாடுபடுத்துனதை இந்த ஊரே சகிக்கலை...உங்க ரத்தத்துலே பொறந்த நா மட்டும் ஊமையா நிக்கணுமா?''

"என்னம்மா சொல்லுதே...?"

"நேர்படப் பேசப்போறேன்ப்பா ... வெடிப்புறப் பேசப்போறேன்ப்பா..."

"அப்படீன்னா...?"

"ஆமப்பா...புதியன விரும்பப் போறேன்..."

"நாஞ் சொன்னா கேக்க மாட்டீயா...?"

"மாட்டேன்ப்பா ... கேக்க மாட்டேன். உங்க மரியாதையை இவங்ககிட்டே தொலைச்சிட்டீக..."

"நீ வாழணும்மா..."

"இவங்களோடேயா...? அது வாழ்க்கையாப்பா...? இல்லேப்பா...நரகத்தை விட அது கொடுமை..."

இவளை அண்ணாந்து பார்த்து மிரண்டு போய் உட்கார்ந்திருந்த மாப்பிள்ளையைத் தெளிந்த ஞானச் செருக்கோடு பார்த்தாள்.

"உங்கப்பா 'எந்திரி'ன்னு சொன்னவுடனே எந்திரிச்சீகள்லே...இப்ப நான் சொல்றேன், எந்திரிங்க...மரியாதையா எந்திரிச்சிருங்க ... விரல்லே போட்டிருக்கிற அழைப்பு மோதிரத்தைக் கழட்டிக் குடுத்துட்டு, பத்தாயிரத்தையும் திருப்பிக் குடுத்துட்டுத் தள்ளி நில்லுங்க..."

அறுக்கப் போகிற ஆடு மாதிரி மிரட்சியோடு விழித்தான் அவன். ராஜேந்திரனையும் ரத்தினவேலுவையும் புகலற்ற நிலையில் பார்க்க...

"ம்...ம்... எந்திரிங்க..."—பத்ரகாளியாய் அவளது ருத்ரக் குரல். பூங்கிளியின் சுயகுரல்.

பதறித் துள்ளி எழுந்தான்.

கூட்டம் திகைத்துப் போய் நின்றது. மூச்சுத் திணற லோடு தவித்தது. ஆனாலும் அவள் காரியத்தை மௌன மாய்ச் சம்மதித்து அங்கீகரித்தது.

கனத்த மௌனத்துக்கு இடையில் ஓர் இளைய குரல்... ''ஆட்டம் போட்ட இந்தக் கழுதைகளுக்கு இந்தச் செருப்படிதான் ஞாயம்...''—கூட்டத்தின் ஆத்ம கீதமாய் அந்தக் குரல்!

திறந்த வாய் மூடாமல், ஒரு புதிய யுகத்தையே தரிசித்த பிரமிப்பில் மலைத்துக் கிடந்த மொத்தக் கூட்டத்தையும் ஒருசேரப் பார்த்தாள் பூங்கிளி. குரலை உயர்த்தினாள். மண்ணைப் புனிதப்படுத்துகிற துணிச்சலான குரல்!

''வீட்டைப் பாக்காம நகையைப் பாக்காம...என்னை ஒரு மனுசியாய் மட்டும் மதிச்சு மனைவியா ஏத்துக்கிடத் துணிச்சலுள்ள ஆம்பளை இந்தக்கூட்டத்துலே யாராச்சும் இருக்கீகளா...?''

கூட்டத்தை நோக்கி நீண்ட அவள் கை...நீதி கேட்ட கண்ணகியாய்த் தோற்றமளித்த பூங்கிளி! அவள் பார்வை, ஒவ்வொரு முகமாய் நகர்ந்து...நகர்ந்து...நகர்ந்து...

வசந்தன் மீது வந்து நங்கூரமிட்டது!

அவன் கையை உயர்த்திய கணத்திலேயே, ரத்தின வேலுவின் முகத்தைப் பார்த்தான்...சம்மதம் கோருகிற பணிவு மிக்க வேண்டுதல், அந்தப் பார்வையில்.

அயர்ந்துபோய், செயலற்றுப் போய்க் கிடந்த ரத்தின வேலு, அவன் பார்வையின் மரியாதையைச் சந்தித்தார். அவருக்குள் ஒரு புல்லரிப்பு...காயத்தை மயிலிறகால் வருடி விட்ட மாதிரி ஒரு சுகம்...

ஆமோதிப்பாய்...ஈர இமைகளை அழுத்திப் பிரித்தார்.

உடுத்திய வேட்டி — சட்டையுடன் மணவறைக்குப் போனான் வசந்தன். ரத்தினவேலுவைப் பார்த்தான்.

"இப்ப ஒரு உண்மையைச் சொல்றேன் சார்... செங்கல்பட்டுல இவுக கடையைப் பாத்தேன்...ரொம்பச் சின்னக் கடை. ஐயாயிரத்துக்குக் கூடச் சரக்கு இருக்காது..."

"அப்படியா...?"

"அதுமட்டுமில்லே...வீடு வாங்கிப் பத்திரம் முடிச்சிருக்கிறதா சொல்றதும் பொய். நாற்பதாயிரத்துக்கு ஒரு வீடு ஒத்திக்கு வாங்கியிருக்காக...அதுக்காக அம்பதாயிரம் ரூபாய் வட்டிக்குக் கடன் வாங்கியிருக்காக..."

"இதை ஏன் முன்கூட்டியே சொல்லலே...?'

"சொன்னா நீங்க என்னை எப்படிப் புரிஞ்சுக்கிடுவீகளோங்கிற பயம்தான்..."

அதற்குள்...

கூட்டத்திலிருந்து ஒரு பெரியவர் சத்தம் கொடுத்தார்: "நேரம் தப்புறதுக்குள்ளே ஆகவேண்டிய காரியத்தைப் பாருங்க..."

"ஆமப்பா...பொண்ணு கழுத்துலே கெடக்குற ஒரு மல்லிகை மாலையைக் கழத்தி வசந்தன் கழுத்துலே போடுங்க..."

"ம்...ம்...கெட்டிமேளம் கொட்டட்டும்..."

வசந்தனின் அம்மா கண்களில் நீர்...ஆனந்தப் பரவசம்...உதட்டைக் குவித்து, நாவையாட்டிக் குலவையிட்டாள். சப்த ஆசீர்வாதம்...மனஒப்புதல்!

அந்தக் குலவையைத் தொடர்ந்து, எல்லாப் பெண்களும் ஒன்றுபோலக் குலவையிட...அந்தக் குலவையே, வரப்போகும் யுகத்துக்கான வரவேற்பு மாதிரி உற்சாகத் தொனியில் ஒலித்தது. சூழலின் இறுக்கத்தால் திகைத்துக் கட்டுண்டு கிடந்த கெட்டிமேளம், விடுதலை பெற்ற சுதந்திரப் பேரிகையாய் ஒலிக்க...

வசந்தனின் கண்களில் ஒளிமின்னல்! தலைதாழ்த்தி, விழிகளை உயர்த்திப் புன்னகைத்த பூங்கிளியிடம் ரகசியமாகக் கிசுகிசுத்தான்:

''இந்த விடுதலையைத்தான் ஓங்கிட்டேயிருந்து நான் எதிர்பார்த்தேன்...பேசு பெண்ணே, பேசு...''

—மனசின் மொழிகளைப் பகிர்ந்து கொள்கிற மௌனப் பார்வை சங்கமிப்பு!

அந்தத் தம்பதியின் உதட்டசைவையும் ஒளிப் புன்னகையையும் முகமலர்ச்சியையும் கவனித்த வாத்தியார் ரத்தினவேலு, ததும்பி வழிந்த மனநிறையோடு மென்னகை புரிந்தார்.

பின்புறமிருந்து ஓர் இளவட்டக் குரல்: ''சரி...சரி... போதும்...தாலியைக் கட்டப்பா...''

''ஆமா...பொழுதாவுது...மாலையை மாத்துங்க...''

''கல்யாணச் சாப்பாடு காத்துக் கிடக்குது...சாம்பார் வாசனை ஆளை இழுக்குது...''

''ஆமப்பா...பந்தியைக் கவனிக்கிறவங்க தயாராயிருங்க...''—கேலியும் கிண்டலுமாய்ச் சகலர் மனசுகளும் விடுதலை பெற்ற சுதந்திரமுமாய், உல்லாசமுமாய்... அசலான மனப்பேச்சுகள்...அன்பு வெளிப்பாடு...

மூன்றாவது கூட்டுக்குலவைச் சத்தம்...சற்று உயர்ந்த ஸ்தாயியில், சற்று நீளமாய்...

கோலாகலமான இந்தக் குலவைச் சத்தத்தைச் சந்தமாக வைத்துப் பாரதி வரைந்த வார்த்தைச் சித்திரம்...

'விடியும் நல்லொளி காணுதி நின்றே,
மேவு நாகரிகம்புதி தொன்றே;
கொடியர் நம்மை அடிமைகள் என்றே,
கொண்டு, தாமுத லென்றன ரன்றோ;
அடியொ டந்த வழக்கத்தைக் கொன்றே,
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர், நந்தேசத்து வீரக்
காரி கைக்கண த்தீர், துணிவுற்றே...'

(முற்றும்)

ஆசிரியரின் பிற நூல்கள்

சிபிகள்	(சிறுகதைத் தொகுப்பு)
பூக்காத மாலை	,,
மானுடப்பிரவாசம்	,,
பூச்சுமை	,,
கணக்கு	,,
விரல்	,,
தாய் மதி	,,
காகிதம்	,,
உயிர் காற்று	,,
என் கனா	,,
ராசாத்தி	,,
மனப்பூ	,,
ஒரு மாலை பூத்து வரும்	,,
மானாவாரிப் பூ	,,
கோடுகள்	(குறுநாவல் தொகுப்பு)
தழும்பு	,,
ஈஸ்வர	,,
பாசத் தீ	,,
முற்றுகை	(நாவல்)
இனி	,,
அச்சமே நரகம்	,,
ஆகாயச் சிறகுகள்	,,
முழு நிலா	,,
ஊர் மண்	,,
சிறுகதைப் படைப்பின் உள்விவகாரம்	

மீனாட்சி
புத்தக நிலையம்